# திருவள்ளுவர் இன்பம்

நாமக்கல் கவிஞர்



வர்த்தமானன் பதிப்பகம்

# திருவள்ளுவர் இன்பம்

நாமக்கல் கவிஞர்

**வர்த்தமானன் பதிப்பகம்**
ஏ. ஆர். ஆர். காம்ப்ளக்ஸ்,
141, உஸ்மான் சாலை, தி. நகர்,
சென்னை - 600 017.
✆ 825 79 95

வர்த்தமானன் பதிப்பகம் - முதற்பதிப்பு : 1999

விலை : ரூபாய் இருபது

Laser by : Sri Sathya Sai Graphics ✆ : 433 25 04
Printed at : Chennai Micro Print P. Ltd., ✆ : 3741188, 3741199

# பதிப்புரை

**'திருவள்ளுவர் இன்பம்'** என்னும் இந்நூல், காமத்துப் பாலின் உரையை ஆராய்கிறது. நாமக்கல் கவிஞர் இந்தப் பகுதியில் தனிக் கவனம் செலுத்தியிருக்கிறார். அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றில் காணும் உரை மாற்றம் இங்கு மேலும் சிறப்படைகிறது. என்ன காரணத்தாலோ காமத்துப்பால் மற்றப் பகுதிகளைப் போல் கவனிக்கப்படவில்லை எனக் கருதுகிறார் கவிஞர். எல்லாவற்றிலும் புரட்சியைக் கண்ட திருவள்ளுவர் இதிலும் புதுமை செய்துள்ளார். சங்க காலத்து அகப்பாடல்களின் பிழிவாகக் காமத்துப்பால் அமைந்துள்ளது. இந்தப் பகுதியிலும் பரிமேலழகர் உரை பல இடங்களில் பொருத்தமில்லை எனச் சான்றுகளுடன் கூறுகிறார், நாமக்கல்லார்.

''தோழியையோ, பாங்கனையோ புகுத்தி அவர்களைப் பேசவோ நடிக்கவோ செய்யத் திருக்குறள் காமத்துப்பாலில் இடமில்லை'' என்ற கூற்று எண்ணிப் பார்க்கத் தக்கது.

நாமக்கல் கவிஞரின் உரை விளக்கம் திருக்குறளைப் பற்றி ஆயிரம் ஆயிரம் சிந்தனைகளைத் தூண்டும் என்பது உறுதி.

- பதிப்பகத்தார்

## நாமக்கல் கவிஞரின் வெளியீடுகள்

திருக்குறள் - புதுஉரை

திருக்குறள் - தெளிவுரை
(கையடக்கப்பதிப்பு)

வள்ளுவரின் உள்ளம்

திருவள்ளுவர் இன்பம்

திருவள்ளுவர் திடுக்கிடுவார்

திருவள்ளுவரும் பரிமேலழகரும்

# திருவள்ளுவர் இன்பம்

'திருவள்ளுவர் அருளிய காமநூல்' என்றது திருக்குறளில் உள்ள 'இன்பம்' எனப்படும் 'காமத்துப் பால்' என்பதைப் பற்றித்தான். அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் சேர்ந்தது திருக்குறள். இந்த மூன்றும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை. இந்த மூன்றும் சரியான முறையில் அனுபவிக்கப்பட்டால்தான். சமுதாயம் சந்தோஷமுள்ளதாக நடக்கும். இவற்றுள் எது ஒன்று பழுதானாலும் வாழ்க்கையும் பழுதுபடும். வள்ளுவர் பெருமான் இந்த மூன்று பகுதிகளுக்கும் சமமான சிறப்பே தந்து, அந்தப் பகுதியில் சொல்ல வேண்டிய அனைத்தையும் சொல்லி யிருக்கிறார். ஆனால் திருக்குறளைப் படிப்பவர்களும், போதிப் பவர்களும், உரையாசிரியர்களும் இந்த மூன்று பகுதிகளையும் சம நோக்குடன் கவனித்திருப்பதாகத் தெரியவில்லை. பொருட் பாலுக்குச் செலுத்தப்படுகிற கவனம் அறத்துப் பாலுக்கு இல்லை, அறத்துப் பாலுக்குச் செலுத்தப்படுகிற கவனம் காமத்துப் பாலுக்கு இல்லை. ஏனென்றால், 'காமம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் இயற்கையாகவே இருந்து வருகிற வெகு சாதாரண விஷயம் தானே' என்ற ஓர் அலட்சிய மனப்பான்மை எல்லாருக்கும் இருக்கிறது. இது எப்படிப் போல என்றால், காற்று, நீர், உணவு என்பனவற்றைப்பற்றி நாம் எண்ணுவதைப் போலத்தான். மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கும், ஆரோக்கியத்துக்கும் முதன்மையானது காற்று; அதற்கு அடுத்தது நீர். அதற்குப் பிறகு தான் உணவு, தின்பண்டங்கள் முதலிய ஆகாரம். இந்த மூன்றுள், மக்கள் உணவில் செலுத்துகிற கவனம் குடிதண்ணீரில் செலுத்துவ தில்லை. குடி தண்ணீரைப்பற்றிச் செலுத்துகிற கவனம் மூச்சு வாங்கும் காற்றைப் பற்றிச் செலுத்துவதில்லை. 'அணுகுண்டு' என்ற ஒரு வெடிகுண்டு, காற்றிலுள்ள அணுக்களைப் பிளந்து

உலகத்தையே அழித்துவிடும் என்று சொல்லும்போது நமக்குண்டாகிற வியப்பும் விசாரமும், நாம் மூச்சு வாங்கும் காற்றிலுள்ள கிருமிகள் நம்முடைய ஆரோக்கியத்தைக் கெடுத்து விடும் என்று சொல்லும்போது உண்டாவதில்லை. அணுகுண்டு ஆகாயத்திலுள்ள அணுக்களைப் பிளந்து நம்மையும் அழித்து விடும் என்று சொல்லுகிறபோது, அப்படிப்பட்ட குண்டு இல்லாம லிருக்க நாம் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற ஆசை உதிப்பது போல, அசுத்த ஆகாயத்திலுள்ள கிருமிகள் நம் ஆரோக்கியத்தை அழித்து விடும் என்று சொல்லும்போது அப்படிப்பட்ட கிருமிகள் ஆகாயத்தில் இல்லாதிருக்க ஓர் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற ஆசை உண்டாவதில்லை.

மூச்சோடிருப்பதற்கு வேண்டிய மூலப் பொருளாகிய காற்றைப்பற்றி நமக்கு இவ்வளவு அலட்சிய மனப்பான்மை இருப்பதுபோலவே மக்கள் பிறப்புக்கே மூலகாரணமாக இருக்கிற காமத்தைப்பற்றியும் அலட்சிய மனப்பான்மை இருந்து வருகிறது. 'காமம்' என்ற சொல்லை உச்சரிக்கவும் கூசுகின்றோம். வெளியில் சொல்லத் தகாத விஷம்போல் அதை விலக்குகின்றோம். இளைஞர்களுக்கிடையில் இதைப்பற்றிப் பேசுவதுங்கூடப் பெருங் குற்றமாகக் கருதப்படுகிறது. நல் வாழ்க்கைக்கு வேண்டிய பலவித ஒழுக்கங்களை உபயோகிக்கின்றவர்களும் காம இன்பத்தைச் சரியான முறையில் அனுபவிக்க வேண்டிய நன்னெறிகளைப் பற்றிப் பேசுவதில்லை, காமத்தைப்பற்றிப் பேசும்போதெல்லாம், அது உலகத்துக்கு ஒரு சிறிதும் விரும்பத்தகாத விஷயம்போல வெறுத்துத்தான் பேசுவதையும் பாடுவதையும் கேட்டிருக்கிறோம். பல இலக்கியங்களில் காமம் என்ற சொல்லும்கூட ஒரு குற்றத்தைக் குறிப்பது போலக் கூறப்பட்டிருப்பதை மட்டுந்தான் பார்க்கிறோ மேயல்லாமல், காம இன்பம் விலக்க முடியாத விதி என்பதையோ, அதைச் சரியானபடி அனுபவிக்கும் நன்னெறி இது என்பதையோ அதிகமாகப் பார்ப்பதில்லை. இலக்கியங்களில் இப்படிக் காமத்தைக் கடிந்திருப்பவர்கள் மிகவும் நல்ல நோக்கத்துடன்தான் எழுதியிருக்கிறார்கள். அதாவது, உலகத்தில் பெரும்பாலும் துன்பங்களுக்கு முறைகெட்ட காம ஆசைதான் காரணமாக இருந்திருக்கிறது என்பதை மனத்தில் வைத்துக் கொண்டுதான் எழுதியிருக்கிறார்கள். என்றாலும், காமத் தீமைகளை மனத்தில் வைத்துக்கொண்டு அதைக் கடிந்து பேசியிருக்கிற அளவுக்குக் காமத்தின் இன்றியமையாத் தன்மையையும் அதையொட்டிய தத்துவங்களையும் விளக்கி, அதை அனுபவிக்கும் நெறி முறைகளைப் பற்றிப் பேசுகின்ற இலக்கியங்கள் இல்லையே என்பதுதான் இங்குச் சொல்ல வந்தது. மேலும், இப்படிக் காமத்தைக் கடிந்து பேசுகின்ற சமயங்களிலும், ஓர் ஆண்மகன் தனக்கு உரிமையில்லாத இன்னொருவனுடைய மனைவியைக் காமுறுவதால் விளைந்துள்ள அல்லது விளையக்கூடிய தீமைகளை மட்டுந்தான் மனத்திற்கொண்டு பேசுகின்றார்கள். ஆனால் ஓர் ஆண்மகன் தனக்கே உரிமையான தன்னுடைய மனைவி யிடத்திலும் வரையறையின்றியும் இயற்கையின் விதிவிலக்குகளை மதிக்காமலும் காம இன்பத்தை அனுபவிப்பதால் விளைகின்ற, எண்ணிறந்த தீமைகளைப்பற்றி எண்ணுவதில்லை. இந்தத் தீமைகளைக் குறைக்கவேனும் காம உணர்ச்சியைப்பற்றிய நுணுக்கங்களையும் அதை நல்ல முறையில் அனுபவிக்க வேண்டிய அறிவுகளையும் மக்களுக்குப் புகட்டவேண்டும் என்ற ஏற்பாடு நமக்குள் இருந்ததில்லை. பழங்காலத்தில் ஒரு குடும்பத்திலுள்ள முதியவர்கள் இளந் தம்பதிகளுக்கு மறைமுகமாகச் சொல்லி வந்ததாகக் கேள்விப்படுகிற நாள், கிழமை, நட்சத்திரம் என்ற விலக்கு விதிகளும் இக்காலத்தில் இல்லாது போய்விட்டன.



இப்படியாக இந்தக் 'காமம்' என்னும் மிக முக்கியமான சக்தியைப்பற்றிய அறிவு அலட்சியம் செய்யப்பட்டே வந்திருக்கிறது. அந்த அலட்சிய மனப்பான்மையே திருக்குறளில் உள்ள காமப் பகுதிக்கும் காட்டப்பட்டிருக்கிறது. அதனால் திருவள்ளுவர் 'காமத்துப் பால்' என்ற பகுதியில் செலுத்தியிருக்கிற ஆழ்ந்த, சிந்தனையை உரையாசிரியரும் உணர முடியவில்லை. அதன் காரணமாகத் திருக்குறளைப் படிப்பவர் களும் இந்தக் காமத்துப் பாலைப்பற்றி அதிகக் கவனம் செலுத்துவ

தில்லை. பொது மக்களில் திருக்குறளைப் படித்தறிய விரும்புகிற வர்கள் ஒருபுறமிருக்க, தமிழறிவை மாணவர்களுக்குப் போதிக்கும் தமிழாசிரியர்களாக ஆவதற்கென்றே படிக்கிறவர் களுக்கும் திருக்குறளிலுள்ள காமப் பகுதியைப்பற்றிய பாடங்கள் மிகவும் குறைவுதான். (இல்லையென்றே சொல்லிவிடலாம்.)

திருக்குறளிலுள்ள காமத்துப் பாலைக் கல்வியாளரும் சரியாகக் கவனிப்பதில்லை என்பது மட்டுமல்ல; திருவள்ளுவர் இந்தக் காமப் பகுதியை எதற்காக எழுதினார், இதை எழுதா மலேயே விட்டிருக்கலாமே என்று கவலைப்படுகிற கல்வியாளரும் இருக்கிறார்கள். அதற்கும் அதிகமாகக் காமப் பகுதியைத் திருக்குறளிலிருந்து கழித்துவிட்டு வெறும் 'அறத்துப் பால்' 'பொருட் பால்' என்ற இரண்டுமட்டும் இருக்கும்படி அச்சிடுவது நல்லது என்று வெகு அழுத்தமாகச் சொல்லுகிற அறிஞர்களும் உண்டு. இவர்களெல்லாம் காமத்தால் விளைந்துள்ள தீமைகளைக் கருத்தில் வைத்துக்கொண்டு, நல்ல நோக்கத்தோடு தான் இப்படிச் சொல்லுகிறார்கள். என்றாலும், அது அறிவுடைமை ஆகாது. பணத்தால் எண்ணிறந்த தீமைகள் விளைகின்றன. பணத்தைக் கொண்டு அந்தத் தீமைகளைச் செய்கிறவர்களை வெறுக்கலாம். ஆனால் பணத்தை வெறுத்துவிடலாமா? அளவுகடந்து உண்பதனால் அநேக நோய்கள் உண்டாகின்றனவென்பது உண்மை. அதற்காக அளவுகடந்து உண்பதை வெறுத்துப் பேசலாம். ஆனால் உணவையே வெறுத்துப் பேசலாமா? அது போலக் காமத்தால் விளையும் தீமைகளை விலக்கலாம். ஆனால் காமத்தை எப்படி விலக்க முடியும்? காமத்தை வெறுத்துப் பேசுகின்றவர்களும் காமத்தால் பிறந்தவர்கள் தாமே? காமத்தை மறுக்கின்றவர்கள் தம்மையும் மறுப்பவர்களாகிறார்கள். தம்முடைய தாய் தந்தையரையும் அவமதிக்கிறார்கள். காமத் தீமை களை மனத்தில் எண்ணிக்கொண்டு காமத்தை இகழ்வதோடு பெண்களையும் அவமதித்துவிடுகிறார்கள். துறவிகள் காமத்தை அறவே விலக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் காமத்தைக் குறைத்துப் பேசுகிறார்கள் என்பதைப் பொறுத்துக்கொள்ளலாம்.



ஆனால் அவர்களுங்கூடப் பெண்பாலை இகழ்ந்து பேசுவது குற்றமாகும். காமத்துக்குக் காரணமும் பொறுப்பாளிகளும் பெண்கள் மட்டுந்தானா?

முற்றுந் துறந்த முனிவர்களும் அடக்க முடியாமல் அவதிப்படுகிற காமத்தைத் துறவிகள் அல்லாதவர்களும் வெகு அலட்சியமாக, 'திருக்குறளில் காமப் பகுதி இல்லாதிருப்பது நல்லது' என்று சொல்லத் துணிகிறார்கள். திருக்குறளில் துறவறமும் சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும், திருவள்ளுவர் இல்லறத்தைக் கருதித்தான் திருக்குறளை எழுதியிருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. காமம் இல்லாமல் இல்லறம் இருக்க முடியுமா? அப்படியிருக்கத் திருவள்ளுவர் காமத்துப் பகுதியை எழுதாமல் விட்டிருக்கலாமே என்பது எப்படிப் பொருந்தும்? அவர் அதை விட்டிருந்தால் அதுதான் குற்றமாகும். ஆனால் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள் களில் 'வீடு' என்கிற 'முத்தி' உலக வாழ்க்கையோடு ஒட்டியதல்ல; ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது. மனோவாக்குக் காயங்களால் உணர முடியாது. வெறும் நம்பிக்கையைச் சேர்ந்த குறிக்கோள். என்னவென்று எவராலும் சொல்ல முடியாதது. சொல்ல முடியாததைச் சொல்லப் புகுவது குற்றமென்று விட்டுவிட்டார். சொல்ல முடிந்ததும், சொல்ல வேண்டியதுமான காமத்தை அப்படி விட்டுவிடத் தகுமா? அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் சேர்ந்தால்தான் வாழ்க்கை; இந்த மூன்றில் எதை விலக்கினாலும் வாழ்க்கை மூளியாகத் தான் இருக்கும். காமத்தை விட்டொழித்த துறவிக்கு அறம் ஒன்றைத்தவிர மற்றப் பொருள், இன்பம் என்ற இரண்டும் இல்லை. அந்த அறமுங் கூடத் தன் உடலையும் மனத்தையும் பற்றிய துறவு ஒழுக்கமேயன்றிப் பிறருக்குச் செய்ய வேண்டிய அறம் ஒன்றும் துறவிக்கு இல்லை. மக்கள் சமுதாயம் 'வாழையடி வாழை'யாக மகிழ்ச்சியுள்ளதாக நடந்துவர இல்லறத்தை எண்ணியே எழுதப்பட்ட திருக்குறளில் காமத்துப் பால் இல்லாதிருக்க இயலாது.

திருவள்ளுவர் சொல்லியிருக்கிற காம இன்பம், விபசாரக் குற்றங்களோடு சேர்த்துப் பேசப்படுகிற காமத் தீமையல்ல. தூயதான காம உணர்ச்சியையும் துப்புரவான காதல் உறவையும் மிக நல்ல கற்பனைக் காட்சிகளடங்கிய நாடகமாக நடத்திக் காட்டப்பட்டிருக்கிற திருக்குறளிலுள்ள காமத்துப்பால் மேலே சொல்லப்பட்ட அவமதிப்பான எண்ணத்தினால் மிகவும் அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் திருவள்ளுவருடைய கருத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் உரைகள் செய்யப்பட்டிக்கின்றன. இதற்கு ஓர் உதாரணம் இப்போதே சொல்லி விடுவது நல்லது:

**மலரினும் மெல்லிது காமம் சிலரதன்**
**செவ்வி தலைப் படுவார்**

என்ற குறள் காமத்துப் பாலில் 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரத்திலுள்ளது. இது காமத்துப்பாலின் ஜீவநாடிகளில் ஒன்று எனத் தகுந்த குறள். வள்ளுவர் 'காமம்' என்பதற்குச் சொல்லுகின்ற இலக்கணமும், அந்தக் காமத்தை அனுபவிக்க அவர் சொல்லுகின்ற நல்லறிவும் சேர்ந்த மிக ஆழமான கருத்துக்கள் அடங்கியது இந்தக் குறள், மிகவும் நுண்ணியதாகிய காம இன்பத்தை, பெரும்பாலும் மனிதர்கள் மிகவும் முரட்டுத்தனமான முறைகளில் அனுபவிக்க முயன்று இன்பத்தைத் துன்பமாகச் செய்து கொள்ளுகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டித் தவறான காம நுகர்ச்சிகளைத் தவிர்க்கச் சொல்லுவது இந்தக் குறள். 'அணுவைத் துளைத்து ஏழு கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்ற பெருமைக்கிணங்கக் கணவன்-மனைவி என்ற உரிமைபற்றியும் நடக்கத் தகாத பல காமக் குற்றங்களை வெகு கண்ணியமான சொற்களால் கடிந்து பேசுவது இந்தக் குறள்.

**மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்**
**செவ்வி தலைப் படு வார்.**



காமம் என்பது மலரைக் காட்டிலும் மென்மையானது. அதைக் கசங்கிப் போகும்படி மோந்து பார்ப்பதோ, கையாளுவதோ கூடாது. ஆனால் அம் மென்மையை உணர்ந்து பக்குவம் பார்த்து அனுபவிக்கின்ற மனிதர்கள் சிலரே. பெரும்பாலும் மக்கள் அந்த மென்மையை மதிக்காமலும், பக்குவம் பார்க்காமலுந்தான் அந்த மலர் வாடிக் கசங்கிக் குழைந்து, மணம் கெட்டுப் போகும்படி நடந்துகொள்ளுகிறார்கள். அது குற்றம் என்று புத்தி புகட்டுவது இந்தக் குறள். 'மலரினும் மெல்லிது காமம்' என்ற உபமானத்தினாலும் 'அதன் செவ்வி தலைப்படுவார் சிலர்' என்ற சொற்களாலும், திருவள்ளுவர் மலரினும் மெல்லிய காமத்தின் செவ்வி தலைப்படாத பெரும்பான்மையான (சிலர் அல்லாத பலராகிய) மக்களைக் கருதித்தான் இதைச் சொல்லியிருக்கிறார் என்பது நிச்சயம்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரையும் திருவள்ளுவர் கருதிய நல்லறிவைப் புகட்டக் கூடியதாக இல்லை. அந்த உரையை ஆராய்வோம்:- காமவின்பம் மலரினும் மெல்லியதாயிருக்கும். அங்ஙனம் மெல்லிதாதலை யறிந்து அதன் செவ்வியைப் பெறுவார் உலகத்துச் சிலர் என்பது பதவுரை.

இதற்கு விளக்கத்தையும் காணவேண்டும். அவர் தரும் விசேட உரையாவது:- தொட்ட துணையானே மணச்செவ்வி யழிவதாய மலர் எல்லாவற்றினும் மெல்லிதென்பது விளக்கலின், உம்மை சிறப்பின்கண் வந்தது. குறிப்பும், வேட்கையும், நுகர்ச்சியும், இன்பமும் ஒரு காலத்தின் கண்ணேயொத்து நுகர்தற்குரியாரிருவர் அதற்கேற்ற இடனும், காலமும், உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகர வேண்டுதலின் 'அதன் செவ்வி தலைப்படுவார்' சிலரென்றும், அவற்றுள் யாதானு மொன்றனாற் சிறிது வேறுபடினும் வாடுதலின், 'மலரினு மெல்லி' தென்றுங் கூறினார். குறிப்பொவ்வாமையின் யானது பெறுகின்றிலேன் என்பதாம். தலைமகளுடல் தீர்வது பயன் என்பது விளக்கம்.

இந்த உரையும் விளக்கமும் இந்த அருமையான குறளின் நோக்கத்தைப் புகட்டுவனவாக இல்லை. அன்றியும் இந்த உரை இக்குறளின் நோக்கத்துக்கு முற்றிலும் வேறுபட்ட 'இடம், காலம் உபகரணங்கள்' என்பனவற்றையே முக்கியமாக நினைக்கச் செய்கிறது. 'காமம் என்பது மலரைவிட மிகவும்' மென்மை யானது. ஆதலால், அதை மலரைக் கையாளுவதைவிட மிகவும் கவனிப்போடு அனுபவிக்கவேண்டும். ஆனால் பெரும்பாலும் மக்கள் அப்படிச் செய்வதில்லை. அது குற்றம், குற்றம் என்ற நற்போதனையை உணராவிட்டால் இந்தக் குறளில் உள்ள உபமானம் பயனற்றதாகிவிடும். ஒரு மலர் மொட்டாக இருக்கும் போது மோந்திடப் புகுந்து கையாண்டால் கசங்கு மேயன்றி மணம் கிடைக்காது. அது மலர்ந்து நெடுநேரமாகி வாடுகிற சமயத்தில் கண்ணுக்கும் அழகு தராது; மூக்குக்கும் நல்ல மணம் தராது ஆகையால், மலரைப் பருவமறிந்து பக்குவமாகக் கையாள வேண்டும் என்பது போலக் 'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் மலர்' ஆகிய காமத்தையும் காலம், நேரம் கருதாமல் அனுபவிக்கச் செய்வது குற்றம். பெரும்பாலும் மக்கள் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள். நீயும் அப்படிச் செய்ய விரும்புகிறாய். நான் அதற்கு இணங்கமாட்டேன் என்று காதலன் புணர்ச்சி விரும்பிய காதலிக்குச் சொல்லுகிற குறள் இது.

இந்தக் குறளில் உள்ள 'செவ்வி' என்ற பதத்துக்கு இங்கே 'செம்மைத் தன்மை' அல்லது 'அழகு' என்பது அர்த்தமல்ல. பின் என்னவென்றால், 'ஏற்ற காலம்' அல்லது 'தக்க பருவம்' என்பதே வள்ளுவர் கருதும் பொருள். பின்னும் இக்குறளில் உள்ள 'தலைப்படுவார்' என்ற பதத்துக்குப் 'பெறுவார்' என்று பொருள் கொள்வதும் சரியல்ல. 'தலைப்படுவார்' என்பதற்குப் 'பெறுவார்' என்ற பொருளை வலிந்துகொள்வதும் வழக்கில் இல்லை. 'தலைப்படுவார்' என்பதற்கு 'மேற்கொள்வார்' அல்லது 'தொடங்குவார்' என்பதுதான் பொருள். இங்கே 'மேற்கொள்வார்' என்ற பொருளில்தான் வைக்கப்பட்டிருக்கிறது.



'காமம்' என்பதைப்பற்றிச் சமுதாயத்தில் இருந்து வந்திருக்கிற அலட்சிய மனப்பான்மையே காரணமாகத் திருக் குறளில் 'காமத்துப்பால்' என்ற பகுதியிலுள்ள பல குறள்களுக்கும் இப்படிப் பயனற்ற உரைகளே சொல்லப்பட்டு வந்திருக்கின்றன.

'மலரினும் மெல்லிது காமம்' என்றபடியே திருவள்ளுவர் காமத்துப் பாலை மிகவும் மென்மையுடன் கையாண்டிருக்கிறார். உதாரணங்களால் வெகு நுணுக்கமாகச் சுட்டிக் காட்டப் பட்டிருக்கிற நல்லறிவுகள் உரைகளில் கவனிக்கப்படவில்லை. மேலும், காமத்துப்பால் முழுவதிலும் சந்தர்ப்பா சந்தர்ப்பங்களைக் கருதாமல் 'பாங்கன்', 'தோழி' என்ற பாத்திரங்களைப் புகுத்திப் பொருள் செய்யப்பட்டதால் மலரினும் மெல்லிய காமம் மிகவும் கசங்கிப் போய்விட்டது. பாங்கன், தோழி என்ற பாகுபாடுகளைத் திருவள்ளுவர் எண்ணவேயில்லை. மூன்றாம்பேர் அறிய முடியாதபடி, ஒருவரையொருவர் காதலிக்கின்ற 'ஓர் ஆண், ஒரு பெண்' என்ற இருவர்களுக்குள் மட்டும் உதிக்கின்ற காம உணர்ச்சிகளையும், காதல் பற்றுக்களையும் வெகு கண்ணியமான முறையில் சித்திரிப்பது திருவள்ளுவரின் காமத்துப் பால், அதிலுள்ள குறள்களின் தொடர்ச்சியை அறியாமல் இந்தத் தோழி, பாங்கன் என்ற இடையூறுகளைப் புகுத்தி உரைகள் சீர்குலைக்கப் பட்டுவிட்டன.

காமத்துப் பாலை 'ஒருத்திக்கு ஒருவன்-ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உயர்ந்த கொள்கையின் அடிப்படையில்தான் திருவள்ளுவர் சித்திரிக்கிறார். ஆனால் உரைகளில் தலை மகனுக்கு விபசாரக் குற்றம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. அது திருவள்ளுவரின் கருத்துக் களின் தூய்மையை அசுத்தப்படுத்திவிடுகிறது, இதற்கு உதாரணம்:

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்**

என்ற குறள் 'புலவி' என்ற அதிகாரத்தில் மூன்றாவது குறள். இதற்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை பின் வருமாறு:

''(பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது) தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்-தம்மைப் பெறாது புலந்த மகளிரைப் புலவி நீக்கிக் கலவாத ஆடவர் சேறல்; அலந்தாரை அல்லல் நோய் செய்தற்று -பண்டே துன்பமுற்றழிந்தாரை அதன் மேலும் மிக்க துன்பத்தினைச் செய்தாற் போலும். பிறர்பாற் சேறலின் நும்மைப் பெறாது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவராற்றா ரென்பதாம்'' என்பது பரிமேலழகர் தரும் பத உரையும், விளக்கமும்.

இந்த உரை சரிதானா? திருவள்ளுவரின் கருத்து இதுவாக இருக்க முடியுமா? இந்தக் குறளில் 'தலைமகன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன்' என்று சந்தேகிக்கவேனும் துளியாவது இடம் இருக்கிறதா? இதற்கு முன்னுள்ள குறள்களிலாவது அல்லது பின்னுள்ள குறள்களிலாவது அப்படி நினைக்க மறைமுகமாக வேனும் இடம் உண்டா? சிந்திக்கவேண்டும்.

எப்படியெல்லாம் சிந்தித்துப் பார்த்தாலும் திருவள்ளுவர் சொல்கின்ற காமத்துப் பாலில் சித்திரிக்கப்பட்டுள்ள ஆண் மகன் பரத்தையருடைய சம்பந்தமுள்ளவன் என்பது எண்ணத் தகாதது. தமிழ் நாட்டில் நெடுங் காலமாகவே பரத்தையர்கள் இருந்து வந்திருக்கிறார்கள். விபசாரத்துக்குத் தடை விதித்துச் சட்டம் இயற்றிய காலத்துக்கு முன் பரத்தையர்கள் தம்முடைய விபசாரத்தைப் பகிரங்கமாக விளம்பரப்படுத்தி அதை ஒரு தொழிலாகவே நடத்தி வந்திருக்கிறார்கள். அறிவாளிகள், பரத்தையரையும் அவர்களுடைய உறவையும் அப்போதைக்கப் போது மிகவும் வன்மையாகவே கண்டித்து வந்திருக்கிறார்கள் என்றாலும் கூட ஆடவர்கள் பரத்தையர் வீடுகளுக்குப் போய் வருவதை ஒரு சர்வ சாதாரண விஷயமாகவே சமுதாயம் சகித்து வந்திருக்கிறது. மனைவி இல்லாத ஆடவர்கள் மட்டுமல்ல; அழகும், இளமையும், அன்பும், அறிவும் நிறைந்துள்ள மனைவியையுடைய கணவன்மார்களும் கணிகையர் வீட்டுக்குப்



போய்வருவது வெகு சகஜமான காரியமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட மனப்பான்மையினால்தான் இந்தக் குறளில் 'தலைமகன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன்' என்று கூட்டிக் கொள்ளுவதில் ஏற்படுகிற குற்றம் உரையாசிரியருடைய மனத்தை உறுத்தவில்லை. பரத்தையர்களையும் அவர்களுடைய இன்பத்தை நாடும் காமுகர்களையும் தமிழர் சமுதாயம் சகித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறது என்றாலும், தமிழ் இலக்கியங்கள் அப்படிச் சகித்ததில்லை. தமிழின் தலைசிறந்த இலக்கியமாகிய திருக்குறள், 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரத்தில் விலைமாதரையும், அவர்களை விரும்பி அலையும் ஆடவரையும் மிகவும் கண்டிக்கிறது. அப்படிப்பட்ட இலக்கியத்தில் தலைமகன் 'பரத்தை யரிடத்து நின்றும் வந்தவன்' என்பதைக் கூட்டிக்கொண்டு பொருள் கூறுவதனால் திருவள்ளுவரும் ஆடவர்கள் காரியமாகத் தான் சம்மதித்திருக்கிறார் என்று எண்ணிவிடச் செய்கிறது. இந்தப் பழிக்குத் திருவள்ளுவரை ஆளாக்கிவிடுவது அநியாயம்.

திருவள்ளுவர், அவர் சொல்கின்ற அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பால்களிலும் அந்தந்தப் பகுதியில் அங்கங்கே பொருந்துவனவாகிய மிக உச்சமான அறிவுகளையே சொல்லி மனித வர்க்கத்தின் நல்லொழுக்கத்தையே கற்பிக்கிறார். காமத்துப் பாலிலும் காதலர்களுடைய நல்லொழுக்கம் பழுதுபடாதபடி பரிசுத்தமான காமத்தையும் காதலையுமே சித்திரித்துக் காட்டு கின்றார். காமமும் காதலும் உள்ளத்தின் உணர்ச்சிகளே யானதால் அவற்றைக் கணவன் மனைவியாகிய இருவருடைய உள்ளக் கிளர்ச்சிகளாகவே பெரும்பாலும் உருவகப்படுத்துகிறார். இந்த உண்மையைக் கவனிக்காத காரணத்தால் குறள்களில் ஒன்றோடு ஒன்று கொண்டுள்ள தொடர்பை அறிய முடியாமல் இப்படிக் குற்றமற்ற தலைமகனுக்கு விபசாரக் குற்றம் கூட்டி உரை செய்ய நேர்ந்திருக்கிறது. அதே காரணத்தினால்தான் 'பாங்கன்', 'தோழி' என்ற அன்னிய பாத்திரங்களைப் புகுத்தி உரை காண

வேண்டியதாகிவிட்டது. அதனால் 'மலரினும் மெல்லிய காமம்' மணங் குறைந்து மாசு படிந்து கசங்கி விடுகிறது.

இனி, 'பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனொடு தலைமகள் புலந்து சொல்லியது' என்ற

**அலந்தாரை யல்லனோய் செய்தற்றாற் றம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்**

என்ற குறளுக்குத் திருவள்ளுவர் கருதிய பொருளை ஆராய்வோம்: இந்தக் குறள் 'புலவி' என்ற அதிகாரத்தில் உள்ளது. முதலில் 'புலவி' என்பதற்குப் பொருள் என்னவென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். அப்படித் தீர்மானிப்பதில் 'புலவி' என்பதைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தையோ அல்லது வேறு அறிஞர்களுடைய கருத்தையோ மட்டும் ஆதாரமாகக் கொண்டுவிடாமல் திருவள்ளுவர் எந்த அர்த்தத்தில் 'புலவி' என்பதைச் சொல்லுகின்றார் என்பதையே முக்கியமாகக் கொள்ளவேண்டும். 'புலவி' என்பதற்குப் பொருள் 'பிணக்கு' என்பது. காமத்துப் பாலில் 'பிணக்கு' என்பது 'புணர்ந்து கலவி செய்ய இடங் கொடுக்காமல் மறுப்புக் காட்டுவது'. அதாவது, கணவனும் மனைவியும் ஒரே படுக்கையில் படுத்திருக்கும்போது புணர்ச்சிக்கு ஆசை கொண்டுவிட்ட கணவன் மனைவியை அணைக்கும்போது அவள் அதற்கு ஆசை கொள்ளாதவள்போல மறுப்புக் காட்டிக் கணவனை விலக்குவது. இது பெண்ணியல் போடு சேர்ந்தது; ஆணியல்பில் உள்ளதல்ல. திருவள்ளுவர் இந்தப் பிணங்கும் குணத்தைப் பெண்ணுக்குத்தான் அமைத்திருக்கிறார். அதுதான் இயற்கையின் உண்மைக்கு ஒத்தது. ஆனால் உரையாசிரியர் இந்தப் 'புலவி' என்னும் பிணக்குக் குணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதுபோல் கொண்டு விட்டார். பரிமேலழகர் 'புலவி', என்பதற்குக் கூறும் இலக்கணம் என்னவென்றால். 'அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக் கருதிய வழி ஒருவரோடொருவர் புலத்தல்'



என்பது. இதில் புலத்தல் என்பது இருவருக்கும் பொதுவானது என்றே உரையாசிரியர் கருதுகின்றார் என்பது தெளிவாகிறது. புலவிக் குணம் இரு பாலுக்கும் பொதுவானதுபோல் கருதி விட்டதனால் பெண்ணின் மனத்தைமட்டும் பேசுகின்ற இந்த அதிகாரத்தில் இடையிடையே ஆணையும் இழுத்துவைத்து உரைகள் தடுமாறும்படி யாகிவிட்டன.

புலத்தல் என்பது பெண்ணுக்கு மட்டுந்தான். ஆணுக்கும் அது பொதுவென்று வாதிப்பவர்கள் இருப்பினும் இருக்கலாம். அவர்களோடு நாம் வாதிக்கப் புகவேண்டாம். ஆனால் திருவள்ளுவர் புலவி என்பதைப் பெண்ணுக்கு மட்டுந்தான் உரியதாக்கியிருக்கிறார். இதைப் 'புலவி நுணுக்கம்' என்ற அடுத்த அதிகாரம் ஐயந்திரிபுகளுக்கு இடமில்லாமல் உறுதிப்படுத்துகிறது. 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் பெண்ணின் பிணக்கைத்தான் பேசுகின்றனவேயல்லாமல் ஆண் பிணங்குவதாக இல்லை. ஆதலால் திருவள்ளுவரின் கருத்துக் கிணங்க இந்தப் 'புலவி' என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் கணவனோடு பிணங்கிக் கொள்ளத் தீர்மானித்த மனைவியின் உள்ளத்தில் உதிக்கின்ற எண்ணங்களை மட்டுமே காட்டுவனவாகும். வேறு எவரையும் இடையே புகுத்த இடமில்லை.

இந்த அதிகாரத்தின் சூழ்நிலையைக் கவனிப்போம்: நெடுநாள் மனைவியை விட்டுப் பிரிந்திருந்த கணவன் திரும்பி வருகிறான். பிரிந்திருந்த கணவன் எங்கே போயிருந்தான் என்பதை இங்கேயே அறிந்துகொள்ள வேண்டும். பரிமேலழகர் சொல்லிவிட்டது போலப் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் அல்ல. பின் எங்கிருந்து வருகிறானென்றால், தொழில் முறையில் அரசனுடைய அலுவலாக அயலூருக்குப் போய் அங்கே தான் மேற்கொண்ட வேலை விரைவில் முடியாமற் போனதால் அதை முடிக்கிற வரைக்கும் அநேக நாள் அங்கேயே தங்கிவிட

நேர்ந்தவன். இதை 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்திலுள்ள,

**வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
**மாலை யயர்கம் விருந்து.**

என்ற குறள் நிரூபிக்கின்றது. இது வெளியூரில் இருக்கும் போது கணவன் மனைவியை நினைத்துச் சொல்லிக்கொள்வது. இந்தக் குறளின் கருத்து ''மேற்கொண்டு வந்துள்ள வேலையை வெற்றி கரமாக முடித்துவிட்டு அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் மனைவியுடன் மாலை விருந்தாகிய காமக் கலவிகளை ஆசைதீர, சலிக்கச் சலிக்க அனுபவிப்பேன்' என்பது.

இந்தக் குறளுக்கு அடுத்த குறள் :

**ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்**
**வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு**

என்பது. இதுவும் மனைவியை நினைத்துக் கணவன் சொல்லிக் கொள்வது. இதன் கருத்து: 'தூர தேசத்துக்கு வந்திருக்கிற என்னுடைய வரவை எதிர்பார்த்துக்கொண்டு ஏங்கியிருக்கும் என் மனைவிக்கு ஒருநாள் கழிவது ஏழு நாட்கள் போல இருக்கும். அதனால் நான் விரைந்து சென்று அவள் ஏக்கத்தைப் போக்கவேண்டும்' என்பது.

இதற்கடுத்த குறள் :

**பெறின்என்னாம் பெற்றக்கால் என்னாம் உறின்என்னாம்**
**உள்ளம் உடைந்து உக்கக்கால்.**

என்பது. இதுவும் கணவன் மனைவியை நினைத்துத் தனக்குள்ளேயே சொல்லிக்கொள்வது. இதன் கருத்து; 'நான் என் மனைவியைவிட்டு வந்து பல நாட்களாகிவிட்டதால் என்னைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தால் என் மனைவி மனம் உடைந்தவளாகி



அவளுக்கு ஏதேனும் கெடுதி நேர்ந்துவிட்டால் நான் வந்த அலுவலில் வெற்றி பெற்றுத்தான் என்ன பயன்? அந்த வெற்றிக்காக மன்னனிடம் பரிசும் பணமும் பெற்றுவிட்டால்தான் என்ன பயன்? அந்தச் செல்வங்களுடன் மனைவியிடம் போய்த்தான் என்ன பயன்? ஒரு பயனும் இல்லாமற் போகும். ஆதலால், அவள் மனமுடைந்து போவதற்குள் நான் அவளிடம் திரும்பிப் போகவேண்டும்' என்பது.

இப்படியெல்லாம் நினைத்து விரைவில் வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்கு வந்தவன் இவன். இவனைப் போய்ப் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் என்று சொல்ல லாமா?

மேற் சொன்ன மூன்று குறள்களுக்கும் பரிமேலழகரும் ஏறத்தாழ இதே பொருளைத்தான் சொல்லியிருக்கிறார். அப்படி யிருந்தும் அடுத்த அதிகாரத்தில் வீட்டுக்குத் திரும்பிவந்து விட்ட தலைமகனை அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவன் என்று சொன்னது எப்படியோ தெரியவில்லை! எப்படியிருந்தாலும் அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவனல்ல என்பதற்கு மேற்சொன்ன குறள்களே போதும். அப்படியானால் 'அலந்தாரை அல்லல் நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்' என்பதற்குத் திருவள்ளுவர் கருதிய பொருள் என்னவென்பதைக் காண்போம்.

'புலவி' என்னும் அதிகாரம் ஆரம்பிக்கு முன்னாலுள்ள சூழ்நிலை பின்வருமாறு: கற்பியலாகக் கல்யாணம் செய்து கொண்ட காதலர்கள் கணவனும் மனைவியுமாகித் தனிக் குடித் தனமாக இன்பவாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறபோது கணவன் தொழில் முறையில் அரசாங்க அலுவலாகத் தூரதேசத்துக்குப் போகவேண்டியிருக்கிறது. கணவன் பிரிந்து போவதற்கு ஆற்றாமல் மனைவி அவனுக்கு விடை கொடுக்க மறுக்கின்றாள். ஆனால் கணவன் அரசனுடைய ஏவலாக வெளியூருக்குப் போக

வேண்டியது கடமையாக இருந்ததால் விடாப் பிடியாக விடை பெற்றுக் கொண்டு போய் விடுகிறான். கணவன் தன்னை விட்டுப் பிரிந்த நிமிஷம் முதற்கொண்டு மனைவி பிரிவாற்றாமைத் துன்பங்களால் அவதிப்படுகிறாள். அந்தத் துன்பநிலைமை 'படர் மெலிந்திரங்கல்' என்ற அதிகாரம் முதலாக 'அவர் வயின் விதும்பல்' அதிகாரம் வரை பத்து அதிகாரங்களில் வெவ்வேறு விதமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

வெளியூருக்குச் சென்ற கணவன், தான் மேற்கொண்டு வந்த வேலையைச் செய்து முடிக்கும் முயற்சிகளிலேயே கவனம் செலுத்திப் பல பேருடன் பேசிப் பழகிப் பொழுது போக்கத் தகுந்த நிலையில் இருந்ததனால், மனைவியை நினைத்துப் புழுங்கிக் கொண்டிருக்க நேரமில்லை. ஆனால் வீட்டில் தனியே இருந்த மனைவி அல்லும் பகலும் அவனுடைய நினைப்பாகவே தவித்துக் கொண்டிருக்கிறாள். அந்தத் தவிப்பினால் கணவனைத் தனக் குள்ளேயே கடிந்துகொண்டு, அவன் வந்தால் தன்னுடைய வருத்தத்தைக் காட்ட அவனோடு பிணங்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள். ஆனால் அவனைக் கண்டுவிட்டால் தன்னால் பிணங்க முடியுமா என்று சந்தேகிக்கிறாள். அதை,

**புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்ணன்ன கேளிர் வரின்**

என்ற குறள் காட்டுகின்றது. இதன் பொருள் 'என் கண்ணான கணவர் வந்தால், (அவர் இத்துணை நாளும் என்னைத் தவிக்க விட்டுப் பிரிந்திருந்ததற்காகப்) பிணங்கிக்கொள்ளுவேனா, அல்லது உடனே ஓடி அவரைத் தழுவிக்கொள்வேனா அல்லது இந்த இரண்டு எண்ணங்களும் கலந்து தடுமாறுவேனா?' என்பது.

இப்படியெல்லாம் அவள் எண்ணிக் கொண்டிருக்கிற சமயத்தில் வெளியூரிலிருந்த கணவனும், அவன் மேற்கொண்டு சென்ற அலுவல் முடிந்துவிடும் தருணமாகித் தன் மனைவியின் நினைவு வந்து விரைவில் வீட்டுக்கு வர விரும்புகிறான். அந்த



விருப்பந்தான் முன் சொன்ன மூன்று குறள்களால் விளக்கப் பட்டது. இப்படி மனைவியும் கணவனும் ஒரு வரையொருவர் நினைத்துத் தம்முள் சொல்லிக்கொள்வதை 'அவர் வயின் விதும்பல்' என்ற அதிகாரம் சித்திரிக்கிறது. அதற்கடுத்த அதிகாரம் 'குறிப்பறிவுறுத்தல்' என்பது. இதில் வெளியூருக்குப் போயிருந்த கணவன் வீட்டுக்கு வந்துவிடுகிறான். வந்த கணவன் மனைவியைப் பார்க்கிறான். மனைவியின் முகம் வாடியிருப்பதும், கண் கலங்கியிருப்பதும், மேனி பசந்திருப்பதும், வளையல்கள் கழன்று விழுந்துவிடும்போல் உடல் மிகவும் இளைத்துப் போயிருப்பதும், ஆகிய குறிப்புக்களால் பிரிவாற்றாமல் மனைவி அடைந்திருக்கிற வேதனைகளை யெல்லாம் அறிந்து கொள்ளுகிறான். அவளுக்குத் தன் மீதுள்ள காதலின் சிறப்பை எண்ணிப் பெருமை அடைகின்றான். தான் நெடுங்காலம் அவளைப் பிரிந்திருப்பது அவளுக்கு அவ்வளவு வேதனையை உண்டாக்கிவிட்டதை நினைத்து வருந்துகிறான். இவ்வளவும் அவன் தனக்குள்ளேயே நினைத்துக்கொள்வது.

இப்படிக் கணவன் மனைவியைப் பார்த்து எண்ணிக் கொள்ளும்போது மனைவி செய்தது என்னவெனில், அவள் முன்னே எண்ணியது போலப் பிணக்கமும் காட்டவில்லை, வழக்கம் போல் தழுவிக் கொள்ளவுமில்லை. பின் என்ன செய்தாள்? வளையல்கள் கையைவிட்டுக் கழன்று விழுந்துவிடும் போலத் தன்னுடைய உடல் மிகவும் மெலிந்திருப்பதையும், மேனி பசந்திருப்பதையும் பார்த்துக் கணவனே தான் பட்டுள்ள வேதனைகளை அறிந்துகொள்ளட்டும் என்று தனக்குள்ளேயே நினைத்துக் கொண்டு,

**தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி**
**அஃது ஆண்டு அவள்செய் தது.**

தன் வளையல்களைப் பார்த்து, மெலிந்து போன தன் கைகளையும் பார்த்துத் தன் பாதங்களைப் பார்த்துக்கொண்டு

தலைகுனிந்து நின்றாள். அவ்வளவுதான் அப்போது அவள் செய்தது.'

இந்த அதிகாரம் முழுவதும் கணவனுக்கும் மனைவிக்கும் மனத்தில் உதித்த எண்ணங்களைச் சித்திரிப்பது. வாய்ப்பேச்சே இல்லை. குறிப்புக்கள் அறிவுறுத்துவதை மட்டும் காட்டுவதால் இதற்குக் 'குறிப்பறிவுறுத்தல்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இதில் 'தலைமகன் சொல்லியது.' 'தோழிக்குச் சொல்லியது', 'தோழி தலைமகற்கறிவித்தது' என்பன போன்ற குறுக்கீடுகளைக் கூட்டக்கூடாது.

இப்படியாக மனைவியின் நிலைமையைக் கணவன் குறிப்புக்களால் அறிந்து கொண்டான். அந்தக் குறிப்புக்களை அவன் பின்னும் அதிகமாக உணரும்படி மனைவி வளையல் களையும், மெலிந்துபோன கைகளையும் தானே பார்த்துவிட்டுத் தலை குனிந்து நின்றாள். அப்படித் தலைகுனிந்து நின்ற அவள் சிறிது நேரஞ் சென்று தலை நிமிர்ந்து, 'கண்ணால் காமநோய் சொல்லி' இரந்து கேட்பதுபோல் கணவனைப் பார்க்கிறாள். கணவன் அந்தப் பெண்மையைப் பாராட்டுகின்றான்.

**பெண்ணினால் பெண்மை யுடைத்தென்ப கண்ணினால்**
**காமநோய் சொல்லி யிரவு.**

இதன் பொருள் : 'வாய் பேசாமல் கண் பார்வையினாலேயே தனக்குற்ற காம வேதனையைத் தெரியப்படுத்தி, அவ் வேதனையைத் தீர்க்கும்படி வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிற குணமுள்ள பெண்ணினால்தான் பெண் இனத்துக்கே பெருமை உண்டாகிறது' என்று சொல்லப்படுவது இதுதான். இப்படித் தனக்குள்ளேயே மனைவியின் பெண்மையை மெச்சிக் கொண்டு கணவன் அவ்விடம் விட்டுத் தன்னுடைய அறைக்குப் போய்விடுவதுபோல் இந்தக் 'குறிப்பறிவுறுத்தல்' காட்சி முடிகிறது.



இதற்கு அடுத்த காட்சி 'புணர்ச்சி விதும்பல்' என்பது. இதில் தலைமகள் தன் தோழியோடு தனியேயிருந்து தன் காம வேதனையைச் சொல்லிக் கொள்வது. (இந்த அதிகாரத்திலும் இதற்கு முன் அதிகாரத்திற்கு முந்தின 'அவர் வயின் விதும்பல்' என்னும் அதிகாரத்திலும் மட்டுந்தான் திருவள்ளுவர் 'தோழி'க்கு இடமளித்திருக்கிறார். மற்ற இடங்களில் தோழிக்கு வேலை யில்லை என்பதே திருவள்ளுவரின் கருத்து. 'பாங்கன்', 'செவிலி' என்ற பாத்திரங்களுக்குத் திருக்குறளில் எங்குமே இடமில்லை.) இந்தப் 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரம் எப்படி அமைக்கப் பட்டிருக்கிறதென்றால், வெளியூரிலிருந்து வந்த தலைமகன் தலை மகளின் நிலைமையைக் குறிப்புக்களால் அறிந்து அனுதாபத்தோடு வீட்டுக்குள்ளேயே வேறொரு பகுதிக்குப் போய்விடுகிறான். அப்படி அவன் போனது தன்னுடைய உடைகளை மாற்றி ஆசுவாசம் செய்துகொள்வது போன்ற காரியங்களுக்காக என்று இருக்கலாம். அவன் போன பின் தலைமகள் தான் அவனோடு பிணங்கவேண்டும் என்று அவன் வருவதற்கு முன்னால் எண்ணியிருந்ததை யெல்லாம் மறந்துவிட்டு, பிணங்காமல் இருந்தது மட்டுமன்றிக் கண்ணினால் காம நோய் சொல்லி இரந்ததைத் தோழி பரிகசிப்பாளோ என்று நினைக்கிறாள். அந்த நினைப்பினால் பெண்ணுக்குப் பெண் என்று கூச்சமில்லாமல் தன் காம வேதனையினால் கணவனைக் கண்டவுடன் உண்டான களிப்பினால்,

**ஊடற்கண் சென்றேன்மற் றோழி! அதுமறந்து**
**கூடற்கண் சென்றதுஎன் நெஞ்சு**

'பிணங்கி வருத்தம் காட்டவேண்டுமென்றுதான் அவர் முன் சென்றேன், தோழி! ஆனால் என் மனம் அதை மறந்து விட்டு அவரைப் புணர்ந்து இன்புற வேண்டும் என்ற ஆசையில் புகுந்து விட்டது. நானென்ன செய்வேன்' என்றெல்லாம் சொல்லி நெடுநாள் பிரிந்திருந்த ஏக்கம் தீர உடனே புணர்ந்து விட வேண்டு மென்ற ஆத்திரங்கொண்டு கணவன் இருந்த இடத்துக்குச் சென்று தன் விருப்பத்தை,

இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு

என்ற குறளில் தெரிவிக்கிறாள். இதன் பொருள் : பார்த்தவர்கள் பரிகசிக்கத்தக்க துன்பங்களையே உண்டாக்குவதானாலும் குடிகாரர்கள் கள்ளைக் கண்டவுடனே அது தமக்குண்டாக்கிய துன்பங்களை மறந்து மீண்டும் மீண்டும் அதையே குடிக்க விரும்புவார்கள்; அதுபோலத் திருடரே! நீர் என்னை விட்டு இத்தனை நாள் பிரிந்ததனால் என்னைப் பார்த்தவர்கள் பரிகசிக்கும்படியான துன்பங்களை உண்டாக்கிவிட்டீரென்றாலும் உம்மைக் கண்டவுடன் அவற்றை யெல்லாம் மறந்துவிட்டு உம்முடைய மார்பைத் தழுவிப் புணர ஆசை மிகுந்துவிட்டேன். வாரும், என் காம வேதனையைத் தீரும்' என்று கணவனைக் கலவிக்கு அழைக்கிறாள்.

இந்தக் குறளைத் 'தலைமகள் புணர்ச்சி விதுப்பறிந்த தோழி தலைமகனுக்குச் சொல்லியது' என்று பரிமேலழகர் குறிப்பிடுவது சரியல்ல. எந்தப் பெண்ணும் எவ்வளவு காமம் வந்துவிட்டாலும் தன்னுடைய தோழியை அனுப்பித் தன்னைப் புணரும்படி கணவனுக்குச் சொல்லி அனுப்பமாட்டாள். அல்லது தோழியாகவே தலைமகளுடைய குறிப்பை அறிந்து தலைமகனிடம் போய், 'உம்முடைய மனைவி காம வேதனையால் அவதிப்பட்டு உம்மைப் புணர விரும்புகிறாள்; குடியருக்குக் கள்ளைப்போல் அவளுக்கு 'உம்முடைய புணர்ச்சி' என்று சொல்லுவதும் முறையல்ல. அப்படிச் சொல்வது தோழியினுடைய பெண்ணியல்புக்கு நாணமற்ற காரியமாகும். மேலும், தன்னுடைய தலைவியின் கணவனாகிய தலைமகனிடத்தில் ஒரு தோழிப் பெண் அப்படிப் பேசுவதும் அனுமதிக்கத் தக்கதல்ல.

இப்படிக் கணவனைக் கலவிக்கு அழைத்த மனைவியின் அவசரத்தைத் தடுத்துக் கணவன் சொன்னதுதான்.



மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்

என்ற குறள். இதன் பொருள் முன்னாலேயே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிணக்கத்தையும், நாணத்தையும் விட்டுத் தானே வலியச் சென்று கலவிக்கு அழைத்தும், கணவன் உடனே தன் விருப்பத்திற்கு இணங்காமல் 'மலரினும் மெல்லிது காமம்' என்று சொல்லிவிட்டதில் ஏமாற்றமடைந்த மனைவி துன்பமுற்றுக் கண் கலங்கினாள். அதைக் கண்ட கணவன், 'கலவிக்கு அவசரப்பட வேண்டிய இயல்புடைய ஆண்மகனாகிய நான் பொறுத்திருக்கக் காமத்தை அடக்கும் இயல்புடைய பெண்ணாகிய நீ ஏன் எனக்கும் முன்னால் கலவிக்குத் துடிக்கிறாய்?' என்பது போலக் கேலி செய்கிறான். அதை,

கண்ணில் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று

என்ற குறள் காட்டுகின்றது. இத்துடன் 'புணர்ச்சி விதும்பல் காட்சி' முடிகின்றது.

இதற்கடுத்த காட்சி 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அதிகாரம். 'நெஞ்சொடு புலத்தல்' என்பது தன் மனத்தோடு பிணங்குதல். அதாவது, மனத்தைக் கடிந்துகொள்வது. முன் அதிகாரத்தில் காதலி புணர்ச்சிக்கு அவசரப்பட்டதைப்போல் காதலன் அவசரப் படவில்லை என்பதோடு காதலன் காதலியின் விருப்பத்தை ஏளனமும் செய்துவிட்டான். அதனால் வெட்கமும் வருத்தமும் அடைந்து கண்கலங்கிய காதலி தனியேயிருந்து, புணர்ச்சிக்கு அவசரப்படுத்தித் தன்னைக் காதலரிடம் போகச் செய்த தன்னுடைய மனத்தைக் கடிந்து அதனோடு பேசுகின்றாள். இந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் காதலி தன்னுடைய மனத்தோடு பேசிக்கொள்ளுவதைப் பற்றியனவே. இதில்

தோழிக்கோ, தலைமகனுக்கோ துளிகூடப் பங்கில்லை. இந்த அதிகாரத்தின் நோக்கத்தைச் சரியாக அறிந்துகொண்டால்தான் 'புலவி' என்ற அடுத்த அதிகாரத்தின் நுணுக்கங்களைச் சரியாக அனுபவிக்க முடியும்.

பரிமேலழகருடைய உரை இந்த அதிகாரத்தின் நோக்கத்தைக் காணத் தவறிவிட்டது. அதனால்தான் திரு வள்ளுவர் கருதிய பொருள்களைக் காணமுடியாது போய் விட்டது. பரிமேலழகர் இந்த அதிகாரத்தின் நோக்கத்தைக் கவனிக்கவில்லையென்பதை இந்த அதிகாரத்தின் பெயராகிய 'நெஞ்சொடு புலத்தல்' என்ற சொற்றொடருக்கு அவர் தந்துள்ள விளக்கமே காட்டுகின்றது. 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்குப் பரிமேலழகர் சொல்லும் விளக்கம் என்னவெனில், 'அஃதாவது, காரணமுடைய வழியும் புலக்கக் கருதாது புணர்ச்சி விதும்புகின்ற நெஞ்சுடனே தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம்' என்பது.

இது முற்றிலும் தவறானது. எப்படியெனின், 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்குத் 'தன்னுடைய நெஞ்சை முன்னிலையில் நிறுத்தி அதனொடு தான் புலத்தல்' என்ற பொருளில்தான் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். ஆனால் பரிமேலழகர் 'நெஞ்சொடு' என்பதற்கு, 'புலக்கக் கருதாது புணர்ச்சி விரும்புகின்ற நெஞ்சுடனே' என்று 'நெஞ்சொடு' என்பதற்குப் பொருத்தமற்ற அடைமொழிகளைக் கூட்டுகின்றார். அதனால் இந்த அதிகாரத்தின் நோக்கமே மாறிவிட்டது. அத்துடன் புலத்தலென்பது ஆண்-பெண் ஆகிய இருபாலாருக்கும் பொதுவானதுபோல் 'தலைமகள் புலத்தலும் தலைமகன் புலத்தலுமாம்' என்றதும் தவறானது. தலைமகன் - புலத்தல் என்பது இந்த அதிகாரத்திலோ மற்றெந்த அதிகாரத்திலுமோ இல்லை. 'நெஞ்சொடு புலத்தல்' என்பதற்கு மிகவும் தவறாகப் பொருள் கொண்டுவிட்டதால் தலைமகள்மட்டும் ஏகாந்தமாகத் தன்னுடைய நெஞ்சொடு பேசுகின்ற இந்த அதிகாரத்தில் தலை மகனும் தோழியும் புகுத்தப்பட்டுவிட்டார்கள்.



இந்த அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களையும் சுருக்கமாக இப்போதே பார்த்துவிடுவது பயனுடைத்து.

**அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே**
**நீயெமக் காகா தது** 1

'மனமே! என் காதலருடைய மனம் அவர் சொன்னபடி கேட்டு அவருக்கு அடங்கியிருப்பதைக் கண்டும் நீயேன் எனக் கடங்காமல் அவரிடமே ஓடுகின்றாய்?'

**உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்**
**செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.** 2

'எனக்குச் சொந்தமான என் நெஞ்சே! இப்போது அவர் காம ஆசை உறாதவராக இருப்பதைக் கண்டும், நாம் விரும்பினால் மறுக்கமாட்டார் என்றெண்ணிக் கொண்டு ஏன் அவரிடம் சென்றாய்?'

**கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ**
**பெட்டாங் கவர்பின் செலல்.** 3

'நெஞ்சே! நீ என்னை மதிக்காமல் உன் விருப்பத்தின்படியே அவரிடம் ஓடுவது, வறுமையடைந்து விட்டவர்களை உற்றார் உறவினரும் கைவிட்டுப் போய்விடுவார்கள் என்ற உண்மையைச் சேர்ந்ததோ?'

**இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே**
**துனிசெய்து துவ்வாய்காண் மற்று.** 4

'நெஞ்சே! காதலரிடம் பிணங்கவேண்டும் என்று நீதான் எனக்கு யோசனை சொன்னாய். அதன்படி நடந்துகொள்ளாமல் இப்போது நீ என்னைவிட்டு அவரிடமே ஓடுகின்றாய். இனி உன்னை நம்பி உன்னுடைய யோசனையைக் கேட்கமாட்டேன்.'

**பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு**
**மறாஅ விடும்பைத்தென் னெஞ்சு.** 5

என் மனம் காதலர் இல்லாதபோது அவர் வரவில்லையே என்று என்னைத் துன்புறுத்திக்கொண்டிருந்தது. அவர் வந்தபின் அவர் என்னைப் புணராமல் பிரிந்து போய்விடுவாரோ என்று துன்புறுத்துகின்றது. அப்பா! இந்த மனந்தான் ஓயாமல் எனக்கு என்ன துன்பமுண்டாக்குகிறது!'

**தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்**
**தினிய விருந்ததென் னெஞ்சு.** 6

நான் என் காதலரைச் சற்றே மறந்து தனியே இருந்த சமயங்களில், என்னுடைய நெஞ்சு என்னைத் தின்று விடுவதுபோலத் துன்புறுத்திக் காதலரையே நினைக்கச் செய்தது.

**நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்**
**மாணா மடநெஞ்சிற் பட்டு.** 7

காதலரைச் சிறிதுநேரங்கூட மறக்க முடியாததாகிவிட்ட என்னுடைய புத்தியில்லாத அற்ப மனத்தோடு சேர்ந்து நான் மானங்கெட்டவளாகி விட்டேன்.'

**எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற**
**முள்ளு முயிர்க்காத னெஞ்சு.** 8

உயிரின்மேல் மிகுந்த பற்றுள்ள என் மனம் காதலரை மறந்தால் உயிர் போய்விடுமோவென்று எண்ணி அவரைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறது.

**துன்பத்திற் கியாரே துணையாவர் தாமுடைய**
**நெஞ்சந் துணையல் வழி.** 9



'ஒருவருக்குத் துன்பம் வந்துவிட்ட சமயத்தில் அவருடைய மனமே அவருக்கு உதவாவிட்டால் மற்ற யார் உதவப் போகிறார்கள். இது உனக்குத் தெரியாததல்லவே, மனமே!'

**தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய**
**நெஞ்சந் தமரல் வழி** 10

'மனமே! ஒருவருக்கு அவருடைய மனமே உறவற்றுப் போய்விட்டால் மற்ற யாரும் அவருக்கு உறவாகமாட்டார்கள். ஆகையால் நீதான், எனக்கு உறுதுணை. நான் உன்னைத் தஞ்சம் அடைகிறேன்.

மேற்சொன்ன உரைகள்தாம் திருவள்ளுவர் கருதியவை. இப்படியாகத் தலைமகள் தன்னுடைய நெஞ்சோடு புலந்து பேசிக்கொண்டு அமளியில் தனியே படுத்துக் கொண்டிருக்கிற சமயத்தில் தலைமகன் அமளிக்கு வந்து படுக்கிறான். அப்போது தான் 'புலவி' என்ற காட்சி ஆரம்பமாகிறது. இந்தப் 'புலவி' என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களும் தலைமகளின் மனத்துக்குள் நிகழும் எண்ணங்களேயாகும். இந்த அதிகாரத்திலும் தோழிக்கோ, தலைமகனுக்கோ இடமில்லை. பத்துக் குறள்களும் ஒன்றன்பின் ஒன்று தொடர்ச்சியான தலைமகளின் எண்ணங்களே யாகும். இந்த அதிகாரத்தின் முதற் குறளும் முந்தின அதிகாரத்தின் கடைசிக் குறளின் தொடர்ச்சியே.

முந்தின அதிகாரத்தின் கடைசிக் குறளில் தலைமகள் தன்னுடைய மனத்தைப் பார்த்து, 'மனமே! ஒருவருக்கு அவருடைய நெஞ்சமே உறவற்றதாகிவிட்டால் அயலார் யாரும் உறவாக மாட்டார்கள். ஆகையால் நீதான் எனக்குத் தஞ்சம். நீ என்னுடன் ஒத்துழைக்கவேண்டும்' என்று கேட்டுக்கொள்ளு கிறாள். அதைத் தொடர்ந்து இந்த அதிகாரத்தின் முதற்குறளில்,

**புல்லா திராஅப் புலத்தை யவருறும்**
**அல்லல்நோய் காண்கம் சிறிது**

'மனமே! நீ காதலரைத் தழுவாமல் இரு. அவர் தழுவினாலும் இடங்கொடுக்காமல் பிணங்கிக்கொள். அவர் காம வேதனையால் படும்பாட்டைச் சிறிது வேடிக்கை பார்ப்போம்' என்கிறாள்.

இதன் விரிவுரை என்னவென்றால், ''மனமே! நான் போய்ப் புணர்ச்சிக்கு அழைத்தபோது மட்டும் அவர் என்னுடைய காம வேதனையை உணராமல் 'மலரினும் மெல்லிது காமம்' என்று சொல்லி மறுத்து ஏளனமும் செய்துவிட்டாரே, இப்போது அவர் தமக்குக் காம வேதனை வந்து கலவி செய்ய வந்திருக்கிற இந்தச் சமயத்தில் நான் பிணங்கிப் புணர மறுத்து அவர் படும் காம வேதனையைச் சிறிது வேடிக்கை பார்க்க விரும்புகிறேன். நீ அவசரப்பட்டு அவரைத் தழுவ நினைத்து விடாதே'' என்பது.

இப்படிக் கணவனைத் தழுவாதிருந்து பிணங்கும்படி தன்னுடைய மனத்தைக் கேட்டுக்கொண்ட மனைவிக்கு உடனே ஒரு சந்தேகம் உதிக்கிறது. அந்தச் சந்தேகம் என்னவென்றால், 'கலவியிற் பிணங்குவது நல்லதுதான். ஆனால் அந்தப் பிணக்கம் நீண்டுபோனால் என்ன செய்வது என்ற சந்தேகம். அடுத்த குறளில் அந்தச் சந்தேகம்:

**உப்பமைந் தற்றால் புலவி யதுசிறிது**
**மிக்கற்றால் நீள விடல்**

'கலவியிற் பிணங்குவது உணவுக்கு உப்புச் சேர்த்துக் கொள்வதுபோலச் சுவை தரக்கூடியது. ஆனால் அந்தப் பிணக்கம் அதிக நேரம் நீண்டு விட்டால் அது உணவில் உப்பு அதிகப்பட்டு விட்டது போலச் சுவை கெட்டுப்போகுமே' என்பது.

இதன் விரிவு: 'காதலருடைய காம வேதனையை வேடிக்கை பார்க்கலாமென்று நாம் சிறிது நேரம் பிணங்குவதில் குற்றமில்லை. அது உணவுக்கு உப்புப் போலக் கலவிக்குச் சுவை தரக்கூடியது தான். அதனால் நம் பிணக்கத்தை நீக்கிக் காதலர் புணராமல் நெடுநேரம் சும்மா இருந்து விட்டாலும் அது உணவில் உப்பு அதிகப்பட்டதுபோலச் சுவை கெட்டுப் போகுமே என்றும் எண்ணுகிறாள்.



அப்படி அவன் நெடுநேரம் புலவி நீக்கிப் புணராமல் இருந்துவிட்டால்,

**அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்**
**புலந்தாரைப் புல்லா விடல்**

'தன்னுடைய கலவியிற் பிணங்கிய காதலியைக் காதலன் அவளுடைய பிணக்கத்தை விடச் செய்து புணராமல் பிணக்கத்தை அப்படியே விட்டுவிடுவது, முன்னாலேயே மிகவும் நொந்து போயிருக்கிற ஒருவருடைய நிலைமையைத் தெரிந்து கொண்டே இரக்கமில்லாமல் மேலும் அவரை நோகச் செய்வதற்கு ஒப்பாகும்.'

இங்குள்ள சூழ்நிலையில் இதற்கு விரிவுரை: 'நெடுநாள் காதலன் பிரிவாற்றாமல் வருந்தியிருக்கிற நான் இப்போது பிணங்கும்போது என் பிணக்கத்தை விரைந்து நீக்கி என்னைப் புணராமல் என் காதலர் சும்மா இருந்துவிட்டால் என்ன செய்வது? ஏற்கனவே மிகவும் நொந்துபோயிருக்கிற நான் மேலும் நொந்து போக நேர்ந்திடுமே,' என்று எண்ணி ஏங்குகின்றாள்.

இதுதான் இந்தக் குறளுக்கு உரை. இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்பதையும் இந்த அதிகாரத்திலுள்ள எல்லாக் குறள்களும் புலந்துகொள்ள நினைக்கும் தலைமகளின் மனத்தில் உதித்த எண்ணங்களின் கோவையே என்பதையும் இந்தக் குறளுக்குப் பின்னாலுள்ள ஏழு குறள்களுக்கும் காணப்பட்டுள்ள புது உரைகள் உறுதிப்படுத்தும், அந்த உரைகளை யெல்லாம் இங்கே விரிப்பது இக் கட்டுரையின் நோக்கமல்ல.

இப்போது மேற்கொண்ட விஷயம், குற்றமற்ற காதலுள்ளவனான தலைமகனை அவன் பரத்தையரிடத்து நின்றும் வந்தவனாகச் சொல்லித் திருவள்ளுவருடைய கருத்துக்கு மாசுண்டாக்குவது சரியல்ல என்பதே. குறள்களிலுள்ள கருத்துத் தொடர்ச்சிகளைக் கவனிக்காததால் இப்படிப் பல பிழைகள் புகுந்துவிட நேரிட்டிருக்கிறது. அத்துடன் அதிகாரங்களின் பெயர்களுக்குத் தவறாகப் பொருள் கொண்டுவிட்டதும் குழப்பத்துக்குக் காரணமாகிவிட்டது.

'நெஞ்சொடு புலத்தல்' என்ற பெயருக்குத் திருவள்ளுவர் கருதிய பொருள் கொள்ளாததனால் அதிலுள்ள குறள்களின் உரைகள் திசை மாறிவிட்டன. அதனால் அந்த அதிகாரத்தின் தொடர்ச்சிதான் 'புலவி' என்பதும் புலனாகாமற் போய்விட்டது. அதனால் 'புலவி' என்ற அதிகாரத்திலுள்ள முதற் குறள்.

புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது,

என்றதை யார் யாருக்குச் சொன்னது என்பதை அறிய முடியாமல் தடுமாற்றமேற்பட்டு அதில் 'வாயிலாகச் சென்ற தோழி தலைமகள் வாயினேர்தற் பொருட்டு அவளொடு நகையாடிச் சொல்லியது' என்று தோழியைக் கூட்டிக்கொள்ள வேண்டியதாகிவிட்டது. முதற் குறள் திசை தப்பிவிட்டதால் மற்றக் குறள்களின் தொடர்ச்சியும் துண்டிக்கப்பட்டு, 'அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லா விடல்' என்ற குறளின் சூழ்நிலையை அறிய முடியாமல் பொருத்தமற்ற உரை செய்ததோடு பரத்தையரையும் புகுத்த வேண்டியதாயிற்று.

இந்தக் குறளில் பரத்தையரைப் புகுத்தியது சூழ்நிலை அறியாத தடுமாற்றத்தால் என்றாலும், இதைவிடச் சூழ்நிலையை எளிதில் அறியக்கூடிய இடங்களிலும் பரத்தையரைப் புகுத்தித் தலைமகனுக்கு விபசாரக் குற்றமுண்டாக்கியிருப்பதும் விசனிக்கத் தக்கது. அந்த இடங்களையும் இப்போதே ஆராய்ந்து தலைமகன்மீது தூவப்பட்டிருக்கிற விபசாரத் தூசுகளைத் துடைத்து விடுவது நல்லது.



'நிறையழிதல்' என்பது 'கற்பியல்' பகுதியில் பதினொன்றாவது அதிகாரம். 'நிறையழிதல்' என்பதற்கு 'அடக்கம் கெடுதல்' என்பது அர்த்தம். அதாவது, காமத்தை அடக்கும் பொறுமை கெட்டுப் போவது. காமத்தை அடக்கும் குணம் ஆண்களினும் பெண்களுக்கு அதிகம். அந்தப் பெண்மைக் குணத்துக்கு 'நிறை' என்று பெயர். நிறையும் நாணமும் பெண்களுக்குச் சிறப்பு. தொழில் முறையில் வெளியூருக்குப் போன காதலன் வராமையால் அவனையே நினைத்துக் காம வேதனையில் தவித்துக்கொண்டிருக்கும் காதலி தன்னுடைய 'நிறை'க் குணம் கெடுவதை நினைத்து வருந்துவதைச் சொல்லுவது இந்த அதிகாரம். இது முழுவதும் காதலி தனக்குத் தானே சொல்லிக் கொள்வது. இந்த அதிகாரத்தில்.

நாணென ஒன்றோ அறியலம்-காமத்தால்
பேணியார் பெட்ப செயின்

என்பது ஏழாவது குறள். இதன் பொருள்: 'நான் காதலிக்கின்ற என் கணவர் தாமும் என்னைப்போல் காம ஆசை கொண்டு நான் விரும்புகிறபடி கலவி செய்யும் காலங்களில் நான் நாணம் ஒன்றைத்தானா மறந்துவிடுகிறேன்; பெண்மைக்கான மற்ற மடமை, அச்சம், பயிர்ப்பு என்ற எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன்' என்பது.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் சொல்லுகின்ற சூழ்நிலையும் பொருளும் என்னவென்றால் ''(பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நிறையழிவால் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குச் சொல்லியது.) (இ-ள்.) பேணியார் காமத்தால் பெட்ப செயின்-நம்மால் விரும்பப்பட்டவர் வந்து காமத்தால் நாம் விரும்பியவற்றைச் செய்யுமளவின்; நாண் என ஒன்றோ அறியலம்-நாணென்

றொன்றையும் அறியமாட்டேமாயிருந்தேம். பேணியாரெனச் செயப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது. விரும்பியன: வேட்கை மிகுதியினாற் கருதியிருந்த கலவிகள். நாண்: பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல். 'ஒன்' றென்பது ஈண்டுச் சிறிதென்னும் பொருட்டு. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. நிறையழிவான் அறியாது கூடிய தன் குற்றநோக்கி, அவளையு முளப்படுத்தாள்'' என்பது பரிமேலழகர் தந்துள்ள சூழ்நிலையும், பதவுரையும், விசேட விளக்க உரையும்.

சூழ்நிலை : 'பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன்' என்று சொல்லுவதற்கு இந்தக் குறளிலோ அல்லது இதற்கு முன்னும் பின்னுமுள்ள வேறு குறளிலோ என்ன ஆதாரம் இருக்கிறது? இந்த அதிகாரத்தை விட்டு, இதற்கு முன்னுள்ள அதிகாரங்களிலாவது அதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா? இல்லவே இல்லை. அப்படி யிருக்க அநியாயமாக இந்த அபவாதத்தை அவன் மேற் சுமத்தியதால் திருக்குறளுக்கு அசுத்தமுண்டாகிவிடுகிறது. இதில் இதைவிடப் பெரிய தவறு இன்னொன்று என்னவென்றால், இன்னும் வீட்டுக்குத் திரும்பி வராத தலைமகனை அவன் வந்து விட்டதாகக் கொண்டு பொருள் செய்திருப்பதுதான். 'நிறையழிதல்' என்ற இந்த அதிகாரத்தில் தலைமகன் இன்னும் வெளியூரிலிருந்து திரும்பி வரவில்லை. அவன் திரும்பி வருவது 'குறிப்பறிவுறுத்தல்' என்ற அதிகாரத்தில்தான். அந்த அதிகாரம் இதற்கடுத்த 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்துக்கும் அப்பால் அடுத்துள்ளது. இந்த 'நிறையழிதல்' என்ற அதிகாரத்திலேயே அவன் வந்துவிட்டதாகக் கொண்டுவிட்டால், இதற்கடுத்த 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்தின் பத்துக் குறள்களும் பயனற்றவையாகிவிடும். அந்தப் பத்துக் குறள் களையும் இப்போதே பார்த்துவிடுவோம்:

**வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற**
**நாளொற்றித் தேய்ந்த விரல்.** 1



**இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்**
**கலங்கழியுங் காரிகை நீத்து.** 2

**உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்**
**வரனசைஇ யின்னு முளேன்.** 3

**கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்**
**கோடுகொ டேறுமென் னெஞ்சு.** 4

**காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி**
**னீங்குமென் மென்றோட் பசப்பு.** 5

**வருகமற் கொண்க னொருநாட் பருகுவன்**
**பைதனோ யெல்லாங் கெட.** 6

**புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்ணன்ன கேளிர் வரின்.** 7

**வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து**
**மாலை யயர்கம் விருந்து.** 8

**ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்**
**வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.** 9

**பெறினென்னாம் பெற்றக்கா லென்னா முறினென்னா**
**முள்ள முடைந்துக்கக் கால்.** 10

இந்தப் பத்துக் குறள்களும் தலைமகன் இன்னும் திரும்பி வரவில்லை என்பதைக் காட்டுகின்றன.

இந்த அதிகாரத்துக்கு அடுத்த 'குறிப்பறிவுறுத்தல்' என்ற அதிகாரத்தில்தான் தலைமகன் வீட்டுக்குத் திரும்பிவருகிறான். இதைப் பரிமேலழகரே சொல்லுகின்றார். 'குறிப்பறிதல்' என்ற அதிகாரத்துக்கு அவர் சொல்லுகின்ற முன்னுரையில் வருவது இது: ''அஃதாவது, தலைமகன், தலைமகள், தோழியென்றிவர் ஒருவர்

குறிப்பினையொருவர்க்கறிவுறுத்தல். இது, பிரிந்து போய தலைமகன் வந்து கூடியவழி நிகழ்வதாதலின் 'அவர்வயின் விதும்ப'லின் பின் வைக்கப்பட்டது.'' இங்கே இப்படி முன்னுரை சொன்னவர் இந்த அதிகாரத்துக்கு முன்னால் இருக்கும் அதிகாரத்துக்கும் முன்னாலேயே தலைமகன் 'பரத்தையிற் பிரிந்து வந்தவன்' என்று சொல்லிவிட்டது விபரீதமாக இருக்கின்றது. ஆனால் அவர் 'நிறையழிதல்' என்ற அதிகாரத்திலேயே தலைமகன் வந்துவிட்டதாகக் கொண்டுவிட்டதற்கு, அந்த அதிகாரத்திலுள்ள

**புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்**
**கலத்த லுறுவது கண்டு**

என்ற குறளிலும் அதற்கடுத்த,

**நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ**
**புணர்ந்தூடி நிற்பே மெனல்.**

என்ற குறளிலும் தலைமகன் இங்கிருப்பதுபோலத் தோற்றம் இருப்பதே காரணமாக இருக்கலாம். இந்த இரண்டு குறள்களும் முன்னொரு நாள் நிகழ்ந்ததை நினைத்துத் தலைமகள் நிறையழிவ தேயாகும்.

எனவே, 'நாணென ஒன்றோ அறியலம் காமத்தால் பேணியார் பெட்ப செயின்' என்ற குறளுக்குப் பரிமேலழகர் கற்பித்த சூழ்நிலை மிகவும் தவறானது.

பதவுரை : பதவுரை சரியாகவே செய்திருக்கிறார். அவர் செய்துள்ள பதவுரையிலேயே தலைமகன் 'பரத்தையிற் பிரிந்து வந்தவன்' என்று நினைக்க இடமில்லையென்பது நிச்சய மாகின்றது. பின் அப்பரத்தை இங்கே எப்படிப் புகுந்தாளோ தெரியவில்லை! இல்லாததை இருப்பதாகக் கொண்டுவிட்டதால் அதை ஒப்பேற்ற, விசேட உரையில் 'நாண்' என்பதற்குப் 'பரத்தையர் தோய்ந்த மார்பைத் தோய்தற்கு நாணுதல்' என்றும்,



'ஒன்று' என்பதற்குச் 'சிறிது' என்றும் அந்தப் பதங்களுக்குச் சொந்தமில்லாத அர்த்தங்களைச் சொல்லவேண்டிய தாகிவிட்டது.

இதுபோக, இதேமாதிரி பிறிதோர் இடத்திலும் காரணமில்லாமல் தலைமகனுக்கு விபசாரக் குற்றம் காட்டப் பட்டிருக்கிறது. அந்த இடம் எதுவென்றால் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்தின் முதற் குறளின் உரையில். அந்தக் குறள்:

**பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு**

என்பது. இதன் பொருள் : 'பெண்மைத் தன்மையுள்ளவர்கள் எல்லாரும் கண்டு ஆசை கொள்ளும் அழகான மார்பை யுடையவரே! நீர் பலபேரும் கண்டு ஆசைகொள்ளும்படி தம்முடைய அழகைக் காட்டிக்கொள்ளும் பொதுமகளிரைப் போன்றவர். அதனால் நான் உம்மைத் தழுவமாட்டேன்' என்பது.

இதற்கு விரிவுரை என்னவென்றால் : 'நீர், உம்மைப் பார்த்த பெண்களெல்லாரும் ஆசை கொள்ளத் தக்க அழகுடையவர். பெண்கள் மட்டுமல்ல. பெண்ணியல்புடைய ஆண்களுங்கூட உம்மைக் கண்டு ஆசை கொள்ளுவார்கள். அதனால் உம்முடைய அழகு எனக்கு மட்டும் என்பது போய் எல்லாருக்கும் பொதுவாகி விட்டது. ஆகையினால் நீர் பார்த்தவர்க ளெல்லாம் ஆசை கொள்ளத் தம்முடைய அழகைக் காட்டிக் கொள்ளுகிற பரத்தையைப் போன்றவர். பரத்தைத் தன்மையுடைய பெண்ணை ஆடவர் தழுவக்கூடாது என்பதுபோலப் பரத்தைத் தன்மையுடைய உம்முடைய மார்பை நான் தழுவமாட்டேன்' என்பதாகும். இந்தக் குறளில் 'பெண்களெல்லாரும்' என்று சொல்லாமல் 'பெண்ணியலா ரெல்லாரும்' என்று சொல்லப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இது கம்பராமாயணத்தில் விசுவாமித்திர முனிவர் இராமனுக்குத் தாடகையைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வரும் போது முற்றத் துறந்த முனிவராகிய விசுவாமித்திரர் இராமனை

'ஆடவர் பெண்மையை அவாவும் தோளினாய்'

என்று விளிப்பதை நினைப்பூட்டுகின்றது. தன் கணவனுடைய அழகை மறைமுகமாகப் புகழும் மனைவி வெகு நுணுக்கமான முறையில் பொய்க்குற்றம் சாட்டிப் புணர மறுப்பதுபோல் புலக்கின்றாள்.

இந்தக் குறளுக்கு இதுதான் கண்ணியமான பொருள். ஆனால் பரிமேலழகர் இக்குறளிலுள்ள 'பரத்த' என்ற பதத்தைக் கொண்டு தலைமகள் தலைமகன் பரத்தையர் வீட்டுக்குப் போய் விட்டு வந்திருப்பதனால் புணர மறுப்பதாகப் பொருள் செய்கிறார். அது சரியல்ல. எப்படி அது சரியல்லவென்பதைப் பார்ப்போம்.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை பின்வருமாறு:

''பரத்த - பரத்தமை உடையாய்! பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர் - நின்னைப் பெண்ணியல்புடையார் யாவரும் தம் கண்ணாற் பொதுவாக உண்பர்; நின்மார்பு நண்ணேன் - அதனால் அவர் மிச்சிலாகிய நின் மார்பினைப் பொருந்தேன்'' என்பது பதவுரை. இது சரியாகத்தான் இருக்கிறது.

இதற்குமேல் அவர் சொல்லும் விசேட உரை விளக்கம் என்னவென்றால்: ''கற்பு, நாண் முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கை மாத்திரமேயென்னுங் கருத்தாற் 'பெண்ணியலார்' என்றார். பொதுவாக வுண்டல், தஞ்சேரிச் செலவின் முறையானன்றி ஒரு காலத் தொருங்கு நோக்குதல்; அதுவுமோர் குற்றம். தாநோக்கி இன்புற்றவாறே அவரு நோக்கி யின்புறுவரென ஆசங்கித்து அவர்பாற் பொறாமை யெய்துதலின் நுணுக்கமாயிற்று'' என்பது.

இதில் 'பெண்ணியலார்' என்பதற்குப் 'பரத்தையர்' என்ற பொருளைக் காட்ட முயன்றிருப்பது முற்றும் பொருத்தமற்றது. தலைமகன் பரத்தையர் சேரிக்குச் செல்லும் வழக்கமுடையவன்



என்பதைக் காட்டவே பதவுரையில் காணமுடியாத கருத்து, விசேடவுரையில் திணிக்கப்பட்டிருக்கிறது.

ஆதலால், திருவள்ளுவர் சித்திரிக்கின்ற தலைமகன் விபசாரக் குற்றமுள்ளவனல்ல. தலைமகளிடத்தில் உண்மையான காதலுள்ள கணவன். தலைமகளும் மாசற்ற மனைவி, அவளுடைய காதலின் சிறப்பையும், கற்பின் திறத்தையும் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம் வெகு நுணுக்கமாகச் சொல்லுகின்றது.

# ஒரு நாடகம்

காமத்துப் பாலைத் திருவள்ளுவர் ஒரு சிறு நாடகம்போல் நடத்திக் காட்டுகின்றார். தமிழ் மரபில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் எப்படி ஒருவர்மீது ஒருவர் காமுற்றுக் காதலித்துக் கலியாணம் செய்துகொண்டு இன்பம் அனுபவிப்பது என்பதை நடித்துக் காட்டுவது காமத்துப்பால். இந்த நாடகம் முழுதும் மூன்றே பாத்திரங்களைக் கொண்டது. அப் பாத்திரங்களாவன: தலைமகன், தலைமகள், தோழி என்பவர்களே. இந்த மூன்றிலும் நடிப்பும், பேச்சும், பாவனையும் தலைமகன் தலைமகள் என்ற இருவருக்கு மட்டுந்தான். தோழி என்பவள் தலைமகளுக்குத் துணையாகப் பக்கத்திலிருக்கிற உபகரணந்தான். தலைமகள் தன்னுடைய காமத் துன்பத்தைச் சொல்லிக்கொள்ள மட்டுமே தோழி இருக்கிறாள். தோழியும் பேசுவதாகவோ, செயல் புரிவதாகவோ திருவள்ளுவர் சொல்லவில்லை. ஒரு தோழி இருக்கிறாள் என்பதையும் திருவள்ளுவர் இரண்டே இடங்களில்தான் காட்டுகிறார். அந்த இரண்டு இடங்களாவன: ஒன்று, 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்தில்,

**இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்**
**கலங்கழியுங் காரிகை நீத்து**

என்ற குறளிலுள்ள 'இலங்கிழாய்' என்ற பதத்தில். இது அருகி லிருக்கும் ஒரு பெண்ணை விளித்துப் பேசுவதாக இருப்பதால் அந்தப் பெண் 'தோழி'யாகத்தானிருக்கவேண்டும். வேறோர் இடம்: 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரத்தில்

**ஊடற்கட் சென்றேன்மற் றோழி யதுமறந்து**
**கூடற்கட் சென்றதென் னெஞ்சு**



என்ற குறளில் 'தோழி' என்ற பதமே இருக்கிறது. இந்த இரண்டு இடங்களும் தலைமகள் தனித்திருக்கும் இடங்கள். அங்கே தோழியுடன் எதையும் சொல்லிக் கொள்ளலாம் என்ற முறையில் இந்த இடங்களில் மட்டும் தோழி இருப்பதாகக் காட்டப் பட்டுள்ளன. மற்ற இடங்களெல்லாம் தலைமகள் தனக்குத்தானே சொல்லிக்கொள்ளுவதும், தன் நெஞ்சோடு பேசுவதும், தன் காதலரோடு பேசுவதுமாகத்தான் இருக்கின்றன. அந்த இடங்களிலெல்லாம் தோழி இருக்கக்கூடாது என்பது போலவே குறள்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு இடங்களாவது தோழிக்கு இருக்கின்றன. ஆனால் 'செவிலி', 'பாங்கன்' என்ற பாத்திரங்களுக்கு இந்த நாடகத்தில் இடமே இல்லை.

இந்தத் 'தோழி' என்ற பாத்திரத்தையும் குறளாசிரியர் விரும்பாத இடங்களிலும் உரையாசிரியர் புகுத்துவதால் காமத்தின் இன்பமே கசந்துபோகிறது. இதைப்பற்றிப் பின்னால் விளக்கு வோம்.

இப்போது திருவள்ளுவர் அரங்கேற்றும் நாடகத்தைப் பார்ப்போம்:

முதற் காட்சி : காமப் பருவமடைந்த ஒரு வாலிபன் அதே மாதிரி காமப் பருவமடைந்த ஒரு யுவதியை ஏகாந்தமான ஓர் இடத்தில் சந்திக்கிறான். கண்டவுடனே அப் பெண்ணினுடைய அழகு இவனை வியக்கச் செய்கிறது. அதே சமயத்தில் அந்தப் பெண்ணும் இவனைப் பார்க்கிறாள். அவள் மருண்டு பார்ப்பதைக் கண்டு இவன் அஞ்சுகின்றான். பிறகு அவள் மருண்ட பார்வை மாறி நிதானமாகப் பார்க்கிறாள். அவளுடைய திரண்ட முலைகளை வர்ணிக்கிறான். உடனே ஆணியல்பின் காமத் துடிப்புகள் அவனைத் துன்புறுத்துகின்றன. கள்ளைக் கண்ட குடியனைப்போல் ஆசை மிஞ்சுகிறான். ஆனால் அவளை நெருங்கவில்லை.

அடுத்த காட்சி: தனக்குக் காம ஆசை உண்டாகிவிட்டாலும் அந்தப் பெண் தன்னை விரும்புவாளோ மாட்டாளோ என்ற நியாய உணர்ச்சியால் அவளுடைய குறிப்புக்களை கவனிக்கிறான். அந்தப் பெண்ணும் ஒரு புது மனிதன் தன்னைக் கூர்ந்து பார்க்கிறானே என்று கூச்சப்படாமல் இவனைப் பார்க்கிறாள். இப்படி ஒருவரையொருவர் பார்த்துக்கொண் டிருக்கும்போதே அந்தப் பெண் கடைக்கண்ணால் இவனைப் பார்த்துவிட்டுத் தனக்குள் சிரிக்கிறாள். அதைக் கண்டு துணிவுகொண்ட இவன் அவளைப் புணர்ச்சிக்கு அழைக்கிறான். அதற்கு அவள் தனக்கு ஆசையில்லாததுபோல் பேசுகின்றாள். ஆனாலும் இவன் கலவிக்கு அழைத்ததற்காக அவள் கோபித்துக்கொள்ளவில்லை. மறுப்பவள்போல் பார்த்தாலும் கோபித்துக்கொள்ளாமல் அவள் பேசியதால் அவளுக்கும் ஆசைதான் என்று குறிப்பறிகின்றான். அந்தச் சமயத்தில் அவள் சம்மதம் சொல்லுவது போல் இவனைப் பார்த்து மெதுவாகச் சிரிக்கிறாள். பிறகு இருவரும் ஒருவரையொருவர் கூசாமல் பார்த்துக் கண்ணும் கண்ணும் பேசிக் கொள்ள, வாய்ப்பேச்சுக்கு அவசியமில்லாமல் புணர்ந்து மகிழ்கின்றார்கள்.

இப்படிப் புணர்ந்தது இவ்விருவருக்கும் எதிர்பாராத நிகழ்ச்சி. இருவரும் ஒருவருக்கொருவர் கவர்ச்சியுண்டாக்கும்படி இளமையும் அழகும் ஒத்திருந்ததனால் கண்டவுடன் காமம் மிகுந்து நடந்துவிட்ட காரியம். உற்றார், பெற்றார், ஊரார் ஒருவருக்கும் தெரியாமல் நடந்த காரியமானதால் இது 'களவு ஒழுக்கம்' எனப் படுவது. புணர்ச்சி முடிந்ததும் இருவரும் பிரிந்து அவரவர்கள் வீட்டுக்குப் போய்விடுகிறார்கள். இவர்களிருவரும் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

அடுத்த காட்சி : ஆண்மகன் தன்னுடைய வீட்டில் இருந்து கொண்டு, அப்பெண்ணைப் புணர்ந்ததில் தான் அனுபவித்த இன்பத்தை நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைகிறான். பெண்ணின்பத்தை இப்போதுதான் முதன்முதல் அனுபவித்தவனானதால் அந்த இன்பத்தை வைகுந்தத்தில் நாராயணனை



ஆன்மா ஆலிங்கனம் செய்துகொள்ளுவதாகச் சொல்லப்படுகிற இன்பத்தைவிடவும், யோகியர் நிஷ்டையில் அனுபவிக்கிற மெய்ம் மறதியைவிடவும் பெரிய இன்பமாகச் சிறப்பித்து மகிழ்ச்சியடைகிறான். புணர்ச்சியைப் புகழ்ந்து மகிழ்ந்தபின் தான் புணர்ந்த அப்பெண்ணின் அங்கங்களின் அழகையும், மென்மையையும் பலவாறாகப் புனைந்துரைத்துப் பூரிப்படைந்து கொண்டிருக்கிறான்.

அடுத்த காட்சி : ஆண்மகன் தனியே இருந்துகொண்டு தனக்கு அந்தப் பெண்ணின் மீதுள்ள காதலின் வலிமையைச் சொல்லுகிறான். அதில் அப்பெண் தன்னுடைய உடலுக்கு உயிர் போலவும் தன் கண்ணுக்குக் கருமணிபோலவும் பிரிக்க முடியாதவள் என்றும் பெருமை பேசுகின்றான்.

அடுத்த காட்சி : அப்பெண் தனியே இருந்துகொண்டு தன்னுடைய காதலைச் சொல்லிக் கொள்ளுகிறாள். அதில் காதலன் தன்னுடைய கண்ணிலேயே இருப்பதால் கண்ணுக்கு மை தீட்டினால் அவன் மறைந்துவிடுவானோவென்று அஞ்சுவதாகவும், அவன் தன் நெஞ்சிலேயே இருந்து கொண்டிருப்பதால் சூடான உணவுகளை உண்டால் அவனைச் சுட்டுவிடுமோ என்று அஞ்சுவதாகவும் சொல்லுகிறாள். கண்ணுக்குள் காதலன் இருப்பதால் கண்ணை மூடினால் அவன் மறைந்துவிடுவானென்று தான் தூங்காமலிருப்பதாகவும் அதைக் கண்டவர்கள் தன்னை யாரோ கெடுத்துவிட்டுப் போய்விட்டதாகக் காதலனை நிந்திப்பதாகவும் சொல்லுகிறாள்.

முன் ஒரே ஒருநாள் திடீரென்று சந்தித்துக் காமம் மிகுந்து புணர்ந்து பிரிந்துவிட்ட இவர்களுக்கு மறுபடியும் அப்படிச் சந்தித்துப் புணர வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதனால் காதல் முற்றி இப்படித் தனியேயிருந்து ஒருவரையொருவர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். மறுபடியும் இவர்கள் புணர்ந்து மகிழ வேண்டுமானால் இவர்களுக்குள் மணமாகவேண்டும். முன்னே

இவர்கள் ஒருவரையொருவர் விரும்பிக் களவாகப் புணர்ந்தது சமுதாய வழக்கமல்ல. ஆனால் இப்படி ஒருவரையொருவர் விரும்பிக்கொண்டவரை அவர்களுடைய காதலை ஏற்றுக் கொண்டு பெற்றோர்களும் உற்றார்களும் கூடி உடனே இவர்களுக்குள் மணமுடித்து வைப்பது வழக்கம். அப்படி மணமுடித்து வைக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டியவன் மணமகன். அவன் கேட்டவுடனே அதை ஏற்றுக்கொள்வது தான் வழக்கம். ஏதேனும் காரணத்தால் பெண் வீட்டார் அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கினால், அந்த ஆண்பிள்ளை பனை ஓலைகளால் செய்யப்பட்ட ஒரு பொய்க் குதிரையின்மீது ஏறிக் கொண்டு ஊரின் முக்கியமான சந்திகளில் நிற்பான். அதைக் கண்ட ஊரார் அவனை விசாரிப்பார்கள். அவன், தான் காதலிக்கிற பெண்ணைப்பற்றிச் சொல்லுவான். உடனே ஊரிலுள்ள பெரியவர்கள் அந்தப் பெண்ணினுடைய பெற்றோரிடம் பேசிச் சமாதானப்படுத்தி மணமுடித்து வைப்பார்கள். இப்படி மணமகன் மடலேறுவது மிகவும் அபூர்வமாகத்தான் நிகழும். பெரும்பாலும், இப்படிக் களவாகக் காதலித்துக் கொண்டவர்களை உடனே மணமுடித்து விடுவதுதான் வழக்கம். மடலேறுவது ஒரு நாணமற்ற காரியமாகத்தான் கருதப்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதைக் கடைசிப் பட்சமான காரியமாகத்தான் மணம் விரும்பும் ஆடவன் மேற்கொள்வான் என்றும் தெரியக் கிடக்கிறது. மடலேறுவதுபோன்ற முயற்சிகளைப் பெண் செய்வதில்லை. அவள் தான் காதல் கொண்டுள்ள ஆடவனைத் தனக்கு மணமுடித்து வைக்க வேண்டுமென்று பிறரிடத்திற் சொல்லி ஒரு முயற்சியும் செய்வதில்லை. ஆனால் அவள் அவனையே நினைத்துக்கொண்டு சரியாக உண்ணாமலும் உறங்காமலும் வேதனைப்பட்டுக்கொண்டு நாணம் கெட்டது போல் நடந்துகொள்வதனாலேயே அவள் காதல் கொண்டு தவிப்பதைப் பிறர் அறிந்துகொள்வார்கள். அதற்காக அவளை யாரோ கெடுத்துக் கைவிட்டுப் போய்விட்டதுபோல் அனுதாபப்பட்டு அப்படிப்பட்ட ஆடவன் இன்னும் வந்து பெண் கேட்டு மண முடித்துக் கொள்ளாமலிருக்கிறானே என்று ஊரார் அவனைத்தான்



நிந்திப்பார்கள். ஆனால் இந்தப் பெண்ணைப் பெற்ற தாயார் மட்டும் இப்படி எவனையோ நினைத்துக்கொண்டு ஏங்குவதற்கு மகளை இடித்துப் பேசுவாள். அந்த இடிப்பையும் பொறுத்துக் கொண்டு அந்தப் பெண் தன் காதலன் தன்னை மணந்துகொள்ளத் தன் வீட்டை நாடி விரைவில் வரவேண்டுமென்ற ஏக்கத்தோடு நாணங் கெடத் தெருவில் வந்து எட்டியெட்டிப் பார்ப்பாளாம். இதுதான் திருக்குறளில் காணப் படுகிற களவியல் நுணுக்கம். இனி அடுத்த காட்சியைப் பார்ப்போம்:

அடுத்த காட்சியில், காதலன் தன் வீட்டோடிருந்து கொண்டு தனக்கும் தன் காதலிக்கும் இன்னும் மணமாகாமல் இருப்பதை நினைத்து வருந்தி மடலேற நினைக்கிறான். ஆனால் மடலேறுவது நாணங்கெட்ட காரியமாயிற்றே என்று கூசுகின்றான். ஆனாலும் நடுச்சாமத்திலும் தூங்காமல் மடலேறுவதைச் செய்தாவது காதலியை அடையவேண்டுமென்று எண்ணிக் கொண் டிருக்கிறான்.

அடுத்த காட்சி : இதே சமயத்தில் காதலியும் தான் தன் காதலனையே நினைத்துக்கொண்டு நாணமற்றவளாகி விட்டதைத் தனக்குத் தானே சொல்லிக்கொண்டு புலம்புகிறாள். தன்னுடைய காதல் நோய், தன்னைக் காதலன் வருவானா என்று வீதிக்குப் போய் எட்டிப் பார்க்கச் செய்துவிட்டதே என்றும், அதனால் தன்னுடைய நாணமற்ற நிலைமையை எல்லாரும் அறிந்து ஏளனம் செய்யும்படியாகிவிட்டதே என்றும் விசனிக்கிறாள். தான் படும் துன்பத்தைப்போல் தாங்களும் படாததால் மற்றவர்கள் தன்னை ஏளனம் செய்யும் அறியாமைக்கு வருந்துகிறாள்.

அடுத்த காட்சி : தனக்கும் தன் காதலிக்கும் உள்ள சம்பந்தத்தை ஊரிலுள்ள எல்லாரும் அறிந்து ஊர் முழுதும் அதுவே வதந்தியாக இருப்பதை அறிந்த காதலன் சந்தோஷப் படுகிறான். மடலேறியாவது அவளை மணக்க வேண்டும் என்றும், மடலேறியும் கிடைக்காவிட்டால் உயிரைத் துறந்து விடுவதென்றும்

எண்ணிக்கொண்டிருந்த தனக்கு இனி மடலேறாமலேயே அவள் கிடைத்துவிடுவாள் என்பதற்கு அறிகுறியாக ஊரெங்கும் வதந்தி பரவிவிட்டது பாக்கியந்தான் என்று மகிழ்கின்றான்.

அடுத்த காட்சி : காதலனைப்போலவே காதலியும் தன்னுடைய வீட்டிலிருந்துகொண்டு ஊரில் பரவிவிட்ட பரிகாச வதந்திகளைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறாள். (தன்னையும், தன் காதலனையும், தமக்குள் உறுதிப்பட்டுவிட்ட காதலையும் பற்றி ஊரார் அறிந்துவிட்டதால் அது தம்முடைய மணமுடிவதற்கு மிகவும் அனுகூலமானதுதான் என்று சந்தோஷிக்கிறாள்.

இந்தக் காட்சியுடன் 'களவியல்' முடிகின்றது. களவியல் என்பது, ஓர் இளைஞனும் ஓர் இளம் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி, யாருக்கும் தெரியாதபடி களவாகப் புணர்ந்துவிடுவதையும், அதிலிருந்து அவர்களிருவரும் ஒருவரையொருவர் காதலிப்பதையும் அதை அறிந்த உறவினர்களும், பெற்றோரும் அவ்விருவருக்கும் மணமுடித்து வைக்க எண்ணுவதையும்பற்றிச் சொல்லுவது. திருக்குறளில் 'களவியல்', 'அலரறிவுறுத்தல்' என்ற அதிகாரத்தின்

**தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்**
**கௌவை எடுக்கும் இவ்வூர்**

என்ற கடைசிக் குறளோடு முடிகின்றது. இக்குறளின் பொருள், 'காதலர் இனி அவருக்கு விருப்பமான சமயத்தில் வந்து என்னை மணந்துகொள்வார். ஊராரின் ஏளனப் பேச்சுக்கள் அதற்கு அனுகூலமானவைகள். அதனால் இந்த ஏளனப் பேச்சுக்கள் எனக்கு விருப்பமானவைகளே' என்பது.

களவியலின் கடைசி அதிகாரமாகிய 'அலரறிவுறுத்தல்' என்பதை ஆராய்ந்து பார்த்தால் 'அலர்' யாருக்கு எதை 'அறிவுறுத்துகிறது' என்பது புலப்படும். இந்த அதிகாரத்தில் சரிபாதி காதலன் பேச்சாகவும் சரிபாதி காதலியின் பேச்சாகவும்



இருக்கிறது. இவர்கள் இருவரும் தனித்தனியே இருந்து சொல்லிக் கொள்வதிலிருந்து அறியக் கிடப்பது என்னவென்றால், 'அலர்' எழுந்துவிட்டதால் இனித் தாமதமின்றித் தமக்குள் மணமாகிவிடும் என்ற உறுதியின் மகிழ்ச்சிதான். ஆதலால் இந்த 'அலர்' இவர்களுக்கு மட்டும் அறிவுறுத்துவது அல்ல; இவர்களுடைய பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் கூட விரைவில் இவர்களுக்கு மணமுடித்து விடவேண்டும் என்பதையும் 'அறிவுறுத்தல்' ஆகும். இதன்பின் இவர்கள் மணந்து கொள்ளுகிறார்கள். அப்படி மணந்து கொண்டபின் நடப்பதுதான் 'கற்பியல்'.

ஆனால் இவர்களுக்கு மணமாவதைப்பற்றித் திருக்குறள் பேசவில்லை. ஏன் என்றால், காமத்துப்பால் முழுதும் காதலர்களுக்குள் நிகழ்ந்த காம உணர்ச்சிகளையும், காதல் உணர்ச்சிகளையும்பற்றி மட்டும் சித்திரித்துக் காட்டும் வெறுங் காமக் காதல் நாடகமானதால் இடையில் நிகழும் மற்றச் செய்கைகளெல்லாம் தொக்குநிற்கச் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை அங்கங்கே கூட்டிப் பொருள் கொண்டால்தான் இந்தக் காமத்துப் பாலைத் திருவள்ளுவர் நடத்திக் காட்டுகிற அழகு தெரியும்.

எனவே, 'கற்பியல்' என்பது, முன் களவாகப் புணர்ந்து பிரிந்து காதல் முற்றிய தலைமகனும் தலைமகளும் பகிரங்கமாக ஒருவருக்கொருவர் வாழ்க்கைப்பட்ட பின் அவர்கள் தனிக் குடித்தனம் நடத்துகிறபோது நடப்பது. 'கற்பு' என்பது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் 'எனக்கு நீதான்' என்று ஒருவருக்கொருவர் வாக்குறுதி கொடுத்து முறைப்படி வாழ்க்கைப்படுவது. அந்த வாக்குறுதிச் சொல் தவறாதிருப்பதைக் குறிப்பது தான் 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' என்ற பழமொழி. சொற்றிறம்பல்=சொல்+திறம்பல்=சொன்ன சொல் தவறுவது. அந்தச் சொல்லாவது, திருமணக் காலத்தில் ஒருவருக்கொருவர் சொன்ன வாக்குறுதியாகிய சபதச் சொல். இது இருபாலாருக்கும் பொதுவானது என்பதுதான் இலக்கியங்களில் காணப்படுவது. ஆனால் காலப்போக்கில் 'கற்பு' என்பது பெண்களுக்கே சிறப்புக்

குணம் என்னும் பொருளில் பிரயோகிக்கப்படுகிறது. அது ஏன் என்பதைப்பற்றி இங்கே ஆராயவேண்டாம். இப்போது நாம் அறியவேண்டியது 'கற்பு' என்றால் மணந்துகொள்வது என்பதே. அதனால் 'கற்பியல்' என்பது மணந்துகொண்டபின் நடப்பதைப் பற்றிச் சொல்வதே. பரிமேலழகர் சொல்வதுபோல் 'கற்பு' என்பதற்குப் 'பிரிவு' என்பது பொருளல்ல. பரிமேலழகர் சொல்லுவதைப் பின்பு ஆராய்வோம்.

திருவள்ளுவர் 'கற்பு' என்பதற்கு மணந்துகொள்ளல் என்ற பொருளைத்தான் கருதுகின்றார் என்பது, 'கற்பியல்' பகுதியில் 'பொழுதுகண்டிரங்கல்' என்ற அதிகாரத்தில்,

**மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத**
**காலை அறிந்த திலேன்**

என்னும் குறளும், 'உறுப்பு நலனழிதல்' என்ற அதிகாரத்தில்,

**தணந்தமை சால அறிவிப்ப போலும்**
**மணந்தநாள் வீங்கிய தோள்**

என்ற குறளும், 'அவர்வயின் விதும்பல்' என்ற அதிகாரத்தில்,

**காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்**
**நீங்கும்என் மென்றோள் பசப்பு,**

**வருகமற் கொண்கன் ஒருநாள் பருகுவன்**
**பைதல்நோய் எல்லாம் கெட**

என்ற குறள்களும் நிரூபிக்கின்றன ('மணந்தார்', 'மணந்த நாள்' என்ற சொற்கள் திருமணத்தைக் குறிப்பிடுகின்றன. 'கொண்கன்' என்பதற்குக் கலியாணம் செய்துகொண்ட 'கணவன்' என்பதுதான் பொருள். இந்தப் பதங்களைக் கற்பியலில்தான் திருவள்ளுவர் கையாண்டிருக்கிறார். களவியலில் 'காதலர்' என்ற ஒரு சொல்லைத்தான் காதலி பிரயோகிக்கிறாள். 'மணந்தநாள் வீங்கிய



தோள்' என்றது குறிப்பிடத் தக்கது. மணந்தநாள் என்றது இவர்கள் களவாகப் புணர்ந்த நாளைக் குறிப்பதல்ல. கண்டவுடன் காமங்கொண்டு களவாகப் புணர்ந்த அந்த நாளைக் காதலி, 'கண்டது மன்னும் ஒருநாள் அலர் மன்னும் திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று வெறும் 'ஒருநாள்' என்றுதான் சொல்லுகிறாள். இது களவியலின் கடைசி அதிகாரத்திலுள்ளது. ஆனால் கற்பியலில் 'மணந்த நாள்' என்று சொன்னது, இவர்கள் களவாக ஒருநாள் புணர்ந்து பிரிந்தபின் மறுபடியும் புணர வாய்ப் பின்றித் தவித்துக்கொண்டிருந்த பிறகு இவர்களுக்கு மணம் நடந்த திருமண நாளையே குறிப்பது. ஆதலால் 'கற்பியல்' என்பது கலியாணம் செய்துகொண்ட பின் நிகழ்வது.

திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள 'களவியல்', 'கற்பியல்' என்ற இரண்டு பகுதிகளில் 'களவியல்' என்பது கலியாண மில்லாமல் கண்டவுடன் உதித்த காமத்துடிப்பால் அவசரத்தில் அனுபவித்த இன்பத்தையும், 'கற்பியல்' என்பது காதல் முற்றிக் கலியாணம் செய்துகொண்டு குடித்தனம் நடத்தும்போது சாவதானமாக அனுபவிக்கிற இன்பத்தையும் விவரிப்பன.

பரிமேலழகருடைய உரை இதற்கு ஒத்ததாக இல்லை. அவர் காமத்துப்பாலுக்குச் சொல்லும் முன்னுரை பின் வருமாறு:

''இனி, அப்பொருளைத் துணைக்கரணமாகவுடைத்தாய் இம்மையே பயப்பதாய வின்பங் கூறுவா னெடுத்துக்கொண்டார். ஈண் டின்பமென்றது ஒருகாலத் தொருபொருளான் ஐம்புலனு நுகர்தற் சிறப்புடைத்தாய காமவின்பத்தினை; இச்சிறப்புப் பற்றி வட நூலுட் போசராசனுஞ் 'சுவை பலவென்று கூறுவார் கூறுக: யாங்கூறுவ தின்பச்சுவை யொன்றினையுமே' யென இதனையே மிகுத்துக் கூறினான். இது புணர்ச்சி, பிரிவென இரு வகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடலென்பனவோ வெனின், இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொரு ளின்பமென வட நூல் வழக்குப்பற்றி யோதுதலான், அவ்வாறே யவற்றைப் பிரிவின்க

ணடக்கினாரென்க. இனி அவை தம்மையே தமிழ் நூல்களோடும் பொருந்தப் புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும் பெரும்பான்மை பற்றி வகுத்து, அவற்றைச் சுவை மிகுதி பயப்ப உலக நடையோடு ஒப்பு மொவ்வாமையு முடையவாக்கிக் கூறுகின்றார். அக் கைகோ ளிரண்டனுள்ளும் களவாவது பிணி மூப்பிறப்புக்களின்றி எஞ்ஞான்று மொருதன்மையராய் உருவுந் திருவும் பருவமுங் குலனுங் குணனு மன்பு முதலியவற்றாற் றம்மு ளொப்புமை யுடையராய தலைமகனுந் தலைமகளும் பிறர் கொடுப்பவு மடுப்பவுமின்றிப் பால்வகை யாற்றாமே யெதிர்ப் பட்டுப் புணர்ந்து வருவது. அதனை யேழதிகாரத்தாற் கூறுவான் றொடங்கி, முதற்கட் 'டகை யணங்குறுத்தல்' கூறுகின்றார்.

இது திருவள்ளுவருடைய கருத்துக்களுக்கு முற்றும் முரண்படுவதாக இருப்பதோடு மிகவும் குழப்பமுள்ளதாகவும் இருக்கிறது. வட நூல் வழக்குகளும் தமிழ் நூல் வழக்குகளும் ஒன்றோடொன்று குழப்பப்பட்டிருக்கின்றன. வட நூல்களிலுள்ள மெய்யறிவுகளையெல்லாம் தமிழர்கள் தமதாகவே எப்போதும் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்றாலும், எந்த அறிவையும் தமிழ் மரபுக்கு ஒத்ததாக இருக்கும்படியேதான் இலக்கியங்களில் கூட்டியிருக்கிறார்கள். சமுதாயத்தில் மக்களுக்குள் இருந்து வந்த பழக்க வழக்கங்களை, வட நூல்களில் உள்ளபடியே எல்லா வற்றையும் தமிழ் இலக்கியங்கள் மக்களுக்குள் இருந்து வந்த பழக்க வழக்கங்களை, வட நூல்களில் உள்ளபடியே எல்லா வற்றையும் தமிழ் இலக்கியங்கள் ஏற்றுக் கொண்டதில்லை. வட நூல்களைப் பின்பற்றி வழி நூல்களாகச் செய்யப்பட்டுள்ள எல்லாத் தமிழ் இலக்கியங்களிலும் வட நூல் அறிவையும், தமிழ் மரபுக்கும் தமிழ்ப் பண்புகளுக்கும் முரண்படாத முறையில்தான் சொல்லியிருக்கிறார்கள். நிரந்தரமான மெய்யறிவுகளில் வட மொழிக்கும் தென் மொழிக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. ஆனால் பாத்திரங்களின் பண்புகளும், பழக்க வழக்கங்களும் வெவ்வேறு.



திருக்குறளில் வடமொழி அறிவுகள் நிரம்ப இருக்கின்றன. ஆனால் வட நூல்களிலுள்ள பல பழக்க வழக்கங்களைத் திருவள்ளுவர் அறிந்தே வேண்டாதனவாக விலக்கியிருக்கிறார். அதனால் திருவள்ளுவர் வடநூல் வழக்குகளைப் பின்பற்றியே திருக்குறளைச் சொல்லியிருக்கிறார் என்பது உண்மைக்கு ஒத்ததல்ல. இங்கே வட நூலிலுள்ள வழக்கங்கள் சிறந்தனவா, தமிழ் நூலிலுள்ள வழக்கங்கள் சிறந்தனவா என்ற எண்ணங்களுக்கு இடங் கொடுத்துவிடக் கூடாது. திருக்குறள் காமத்துப் பாலில் சொல்லப்பட்டிருப்பது தமிழ் வழக்கங்களை ஒட்டியது; அது வட மொழியிலுள்ள வழக்கங்களைப் பின் பற்றியது அல்ல என்ற ஒன்றுதான் நாம் அறியவேண்டியது. வட நூல்களைப் பின்பற்றித்தான் திருவள்ளுவர் காமத்துப்பாலைச் சொல்லுவதாகப் பரிமேலழகர் கொண்டுவிட்டதாலோ என்னவோ 'களவியல்,' 'கற்பியல்' என்ற பதங்களின் பொருள்களை அவர் சிந்திக்கவில்லை போலும்! அப்படிப் பார்த்தாலும் வட நூல் வழக்கும் பரிமேலழகர் சொல்லுகின்ற 'ஏனை இருத்தல், இரங்கல், ஊடல் என்பனவோவெனின், இவர் பொருள் பாகுபாட்டினை அறம், பொருள், இன்பம் என வட நூல் வழக்குப் பற்றி ஓதுதலான் அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினார்' என்பதை எப்படி ஏற்றுக்கொள்ளும் என்பது தெரியவில்லை. இவருடைய முன்னுரையின்படி, 'களவு' என்பதற்குப் 'புணர்ச்சி' என்றும், 'கற்பு' என்பதற்குப் 'பிரிவு' என்றும் பொருளாகின்றது. தமிழ் மொழிக்கும், தமிழ்ச் சமுதாயத்தின் வழக்க ஒழுக்கங்களுக்கும் தலைசிறந்த இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தைப் போற்று கின்ற தமிழறிஞர்கள் 'களவு' என்பதற்குப் 'புணர்ச்சி' என்றும், 'கற்பு' என்பதற்குப் 'பிரிவு' என்றும் பொருள் கொண்டிருப்பதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்?

மேலும், 'கற்பு' என்பதைப் 'பிரிவு' என்றுமட்டும் சொல்லி அதனோடு விட்டுவிட்டுக் 'களவு' என்பதற்கு மட்டும் விளக்கம் கூறப் புகுந்து 'களவாவது பிணி, மூப்பு, இறப்புக்களின்றி எஞ்ஞான்றும் ஒரு தன்மையராய் உருவும், திருவும், பருவமும்,

குலனும், குணனும், அன்பும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை உடையராய தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது'' என்று சொல்கின்றார்.

இது மனிதருக்குப் பொருந்துமா? தேவர்களுக்குங் கூட இது மிகவும் மிகையாகும். கற்பனையாகவாவது பிணி, மூப்பு, இறப்புக்கள் இல்லாது எஞ்ஞான்றும் ஒரு தன்மையராக இருக்கும் தேவர்களைப்பற்றிச் சொல்லலாம். ஆனால் அவர்களிலுங்கூடக் குணமும் அன்பும் எப்போதும் ஒப்புமையுடையராக இருந்தவர்க ளில்லை என்று புராணங்கள் காட்டுகின்றன. அப்படியிருக்க, இப்படி எல்லா நலங்களும் எப்போதும் உள்ளவராகப் பிணி மூப்புச் சாக்காடு இல்லாத மனிதர்கள் இருக்க முடியுமா?

திருவள்ளுவர் சாதாரண மனிதர்கள் எல்லாருக்கும் இயல்பாக உள்ள காம உணர்ச்சிகளையும், காதல் பற்றுகளையும் தான் சொல்லியருக்கிறார். கவிதையாகச் சொல்லுவதால் நாக ரிகமான கற்பனைகளோடு சேர்த்துச் சொல்லுகிறார்.

அது போக, 'தலைமகனும் தலைமகளும் பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால் வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது' என்கிறார். அப்படியானால் இவர்கள் தாய் தந்தை யரையும், சமுதாயத்தையும் மதிக்காமல் இவர்களுடைய இஷ்டப் படி தினந்தினம் ஒருவருக்கும் தெரியாமல் புணர்ந்து வருவது என்றாகிறது. இது உண்மையானால் 'கண்டது மன்னும் ஒரு நாள் அலர் மன்னும் திங்களைப் பாம்பு கொண்டற்று' என்று தலைமகள் சொல்லுவானேன்? இந்தக் குறளில் அவர்கள் ஒருவரையொருவர் அகஸ்மாத்தாக எதிர்ப்பட்டுப் புணர்ந்தது ஒரே ஒரு நாள்தான் என்பது நிச்சயமாகிறது. அப்படியிருக்கப் 'புணர்ந்துவருவது' என்று எப்படிச் சொல்லலாம்?

அதுவன்றி, இவர்களிருவரும் தாய் தந்தையர் அறியும் படியாகவே 'பிறர் கொடுப்பவும் அடுப்பவுமின்றிப் பால் வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருபவர்கள்' என்று கொண்டால் தமிழ்ச் சமுதாயம் மிருக சமுதாயமாகத்தான் ஆகிவிடுகிறதேயன்றி மனித சமுதாயமாகாது. ஒரு பெண்ணும் ஓர் ஆணும் பிறர் கொடுப்பவும் அடுப்பவும் இல்லாமல் தாமே பால் வகையால் புணர்ந்து வருவதை ஒப்புக்கொள்ளக் கூடிய சமுதாயமாக இருந்திருந்தால் மடலேற வேண்டுமென்று தலை மகன் எண்ணுவானேன்? தலைமகளைக் கண்டவர்கள், அவளைப் பரிகசித்துச் சிரிப்பதை அவள்,



**யாம் கண்ணிற்காண நகுப அறிவிலார்**
**யாம்பட்ட தாம்படா வாறு**

என்று வருத்தப்படவேண்டியது எதற்காக? மேலும், ஊரில் உள்ளவர்கள் இவர்களைப்பற்றிப் பேசும்படியாக அலர் உண்டானது ஏன்?

ஆகையினால், பரிமேலழகர் காமத்துப் பாலுக்குத் தந்துள்ள முன்னுரையும் அதில் அவர் களவியலுக்குச் சொல்லுகின்ற விளக்க மும் தவறானவை. களவாவது என்னவென்று இப்படிச் சொன்ன வர் கற்பியலில் 'பிரிவாற்றாமை' என்னும் முதல் அதிகாரத்துக்கு முன்னுரையாக, ''அஃதாவது வரைந்தெய்திய பின் தலைமகன் அறம் பொருள் இன்பங்களின் பொருட்டுச் சேயிடையும் ஆயிடையும் தலைமகளைப் பிரிந்து செல்லும்; செல்லுஞான்று, அப்பிரிவினை அவளாற்றாளாந்தன்மை...'' என்று சொல்லுகிறார். இங்கே 'வரைந்தெய்தியபின்' என்ற பதம் 'திருமணம் செய்துகொண்டு வந்தபின்' என்ற பொருளில் தான் நிற்பது. அப்படியானால் முன் சொன்ன 'புணர்ச்சியைக் களவென்றும் பிரிவைக் கற்பென்றும்' என்றதற்கு இது முரண்படுகின்றது. இங்கே 'வரைந்தெய்தியபின்' என்றால், இவர்கள் 'பிறர் கொடுப்பவு மடுப்பவுமின்றிப் பால்வகையால் தாமே எதிர்ப்பட்டுப் புணர்ந்து வருவது' என்றது என்னவாயிற்று? இவர்கள் 'வரைந்தெய்தியது' பிறர் கொடுப்பவும் அடுப்பமின்றித் தாமே வரைந்து கொண்டதா?

அப்படியானால் களவாகப் புணர்ந்த அன்றைக்கே வரைந்து கொண்டிருக்கலாமே? பிரிந்து தனியேயிருந்து மடலேறவும் நாணங் கெடவும் ஊரார் பரிகசிக்கவும் வருந்தியதெதற்கு? வடமொழி மரபிலுங்கூட, புராணக் கதைகளில் வருகிற 'காந்தர்வ' விவாகத்துக்குமட்டும் இது பொருந்துமேயல்லாமல் சமூக சம்பிரதாயத்துக்கு ஒத்ததல்ல. அப்படிப் புராணங்களில் வருகின்ற காந்தர்வக் கலியாணங்களும் வெகு சிலவே. அதிலும், காந்தர்வ விவாகம் செய்துகொண்டதைப் பெற்றோர்கள் பின்னால் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாக இருந்திருப்பதாகத்தான் தெரிகிறது. எனின், தமிழ் மரபுக்கு இது ஒரு சிறிதும் ஒவ்வாது.

# கற்பியல்

இனிக் 'கற்பியல்' என்ற பகுதியில் திருவள்ளுவர் காட்டுகிற காட்சிகளைக் காண்போம்.

முதற்காட்சி: கலியாணம் செய்து கொண்டு கணவனும் மனைவியுமாக இல்லறம் நடத்துகிற போது தொழில் முறையில் கணவன் தூர தேசத்துக்குப் போய் வர வேண்டியிருக்கிறது. அப்படிப் போய் வருவதற்கு விடை கொடுக்கும்படி கணவன் மனைவியிடம் கேட்கிறான். அதற்கு அவள் இணங்க மறுத்து,

**செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றும் நின்**
**வல்வரவு வாழ்வார்க் குரை**

'என்னைவிட்டுப் போகாதிருக்கிற பேச்சானால் என்னிடம் சொல்லுங்கள். போய் விரைவில் வந்துவிடுவதாகச் சொல்லு வதனால் நீங்கள் வருகிறவரை உயிரோடிருக்கக் கூடிய வேறு யாருக்காவது சொல்லுங்கள்' என்று விடை கொடுக்க மறுக்கிறாள். அவன் தான் போய்வர வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகிறான். அதைக் கேட்ட மனைவி அவன் பிரிந்து போவதனால் உண்டாகக் கூடிய துன்பத்தைத் தனக்குள்ளேயே நினைத்து வருந்துகிறாள். ஆனால் கணவன் தான் போய்வரத்தான் வேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் சொல்லி விடை கேட்கிறான். அதைக் கண்ட மனைவி,

**பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதுஅவர்**
**நல்குவர் என்னும் நசை.**

'போய்த்தான் ஆகவேண்டும் என்று பிடிவாதமாகச் சொல்லுகிறார். ஆதலால் அவர் போகாதிருக்க அருள் புரிவார்

என்னும் என்னுடைய ஆசை நிறைவேறாது. (விடை கொடுத்துத் தான் தீரவேண்டும்)' என்று வருத்தத்தோடு விடை தருகின்றாள். கணவன் பிரிந்து போய்விடுகிறான்.

அடுத்த காட்சி: கணவன் பிரிந்து போனவுடனே தன்னுடைய தேகம் இளைத்துவிட்டது போல் மனைவி ஏங்கினாள். கணவனைப் பிரிந்திருப்பது உற்றார் உறவினர் இல்லாத ஊரில் குடியிருப்பதைவிடத் துன்பமானது என்கிறாள். சாதாரண நெருப்பு அதைத் தொட்டால் தான் சுடும். ஆனால் காம நெருப்போ கணவனைத் தொட்டுக் கொண்டிருக்கிற வரையில் சுடாமல் அவனை விட்ட பின்பு தான் சுடுகிறது என்கிறாள். கடைசியாக,

**அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்**
**பின்னிருந்து வாழ்வார் பலர்.**

'என்ன செய்வது! பெரும்பாலும் பெண்கள் கணவனைப் பிரிந்து பெரும் பாடுபட்டுப் பிரிவாற்றாமைத் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, தனியே இருக்கவேண்டியவர்களாகத்தான் நேரிடுகின்றது. நானும் அப்படிப் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான்' என்று மனத்தைத் தேற்றிக் கொள்ளுகிறாள். (இந்த குறளுக்குக் கணவனைப் பிரிந்து, துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு, 'பின்னுமிருந்து உயிர் வாழ்வார் ஒருவரும் இல்லையென்பது குறிப்பால் தோன்றுகிறது' என்று பரிமேலழகர் விளக்குவது சரியல்ல.)

மேலுள்ள இரண்டு காட்சிகளும் 'பிரிவாற்றாமை' என்ற கற்பியலின் முதல் அதிகாரத்திலுள்ளவை. இது முழுதும் மனைவி தனக்குத் தானே சொல்லிக் கொள்வது. இவற்றைத் தோழி சொல்லியதாகவும், தோழிக்குச் சொல்லியதாகவும் தோழியைப் புகுத்துவது சரியல்ல.

அடுத்த காட்சி: முன் காட்சியில் பிரிவாற்றாமைத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று தேறிய



மனைவி அதன்படி பொறுத்துக் கொள்ள முடியாமல் துன்பத்தால் வருந்துகின்றாள். அடக்க அடக்க அடங்காமல் காமநோய் ஊற்றுநீர் போல் ஊறுகிறதே என்று சொல்லுகிறாள். இரவெல்லாம் தூக்கமின்றிக் கணவனுடைய பிரிவால் தான் படுகிற துன்பத்தை விட இரவு மிக மெல்லக் கழிவது அதிகத் துன்பமானது என்கிறாள்; அழுகிறாள்.

அடுத்த காட்சி: அழுது அழுது தன்னுடைய கண்கள் கலங்கிப் பிரகாசம் குலைந்து போனதற்காகக் கண்களை ஏசுகின்றாள். காதலரை முதன் முதல் கண்டவுடனே ஆசை கொள்ளச் செய்தது அந்தக் கண்தானே! அது தனக்கு இவ்வளவு வேதனைகளையும் உண்டாக்கி வைத்துவிட்டுத் தான் அழுகின்றதே என்று கண்ணை நிந்திக்கிறாள். தனக்கு துன்ப முண்டாக்கிய கண் அழுது அழுது நீரற்றுப் போகட்டும் என்று சபிக்கிறாள். தன்மீது அன்பில்லாமல் தன்னைத் தனியே தவிக்க விட்டுப் போய்விட்ட அந்தக் கணவனைப் பார்க்க வேண்டு மென்று கண் தவிப்பதைத் தனக்கு விரோதமான செயலாக ஏளனம் செய்கிறாள். இந்தக் காட்சியிலும் மனைவி தனியே யிருந்து தன் கண்ணைப் பற்றித் தானே சொல்லிக் கொள்கிறாள்.

அடுத்த காட்சி: கணவன் பிரிந்து போனதால் தன் உடல் நிறம் மாறிப் பசந்து விட்டதைப் பார்த்துத் தனக்குத் தானே பேசிக் கொண்டு துன்புறுகிறாள். 'பசப்புறு பருவரல்' என்ற அதிகாரம் முழுதும் மனைவி தன்னுடைய மேனியின் பசப்பைப் பற்றித் தானே சொல்லிக் கொள்வது.

அடுத்த காட்சி: 'தனிப்படர் மிகுதி' என்பதும் தனியே இருந்து தனக்குள் சொல்லிக் கொள்வது. இதில் அவள் தான் தன் கணவனைப் பற்றி நினைப்பது போலத் தன் கணவன் தன்னைப் பற்றி நினைக்கவில்லையே; அப்படி நினைத்திருந்தால் இன்னும் வராதிருப்பானா என்றும், தனக்கு இவ்வளவு காமம் மூட்டித் துன்பப்படுத்துகின்ற மன்மதன் அதேபோலத் தன் கணவனுக்குக்

காமம் மூட்டிச் சீக்கிரம் வரச் செய்யாமல் பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறானே என்றும், இன்னும் பலவாறும் சொல்லிக் கொள்கிறாள். கடைசியாக,

**உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்**
**செறாஅய் வாழிய நெஞ்சு**

'மனமே! உன்னை வாழ்த்துகிறேன். நீ அடைந்துள்ள காம வேதனையைப் போலத் தாமும் அடையாததால் இன்னும் வராமலிருக்கிற காதலருக்கு அவர் இங்கு வந்தபின் நீ இப்போது படும் துன்பங்களைச் சொல்லிக் கொள்வாய். இப்போது கடல்போல் உன்னுள் பெருகிவிட்ட காம ஆசையை அடக்குக' என்று தன் மனத்துக்குச் சொல்லுகிறாள்.

அடுத்த காட்சி: அப்படிச் சொல்லியும் சிறிது நேரம் அடங்கியிருந்த மனம் மீண்டும் கணவனை நினைந்து புலம்புகிறது. தம்முடைய நெஞ்சில் எனக்கு இடங்கொடுக்காமல் என்னை மறந்திருக்கிற கணவர் என்னுடைய நெஞ்சில் மட்டும் ஏன் வந்து வந்து நுழைகிறார்?' என்று கேட்கிறாள். இப்படியாகப் பல விதம் புலம்பிக் கடைசியாக,

**விடாது சென்றாரைக் கண்ணினாற் காணப்**
**படாதி வாழி மதி**

'என் அறிவே! விடாப்பிடியாக என்னை விட்டுப் பிரிந்தவர் வருவார். அவரைக் கண்ணினால் கண்டுவிட்ட பின்பு நீ துன்பப்படுவது நீங்கிவிடும். உன்னை வாழ்த்துகிறேன்; பொறுத்துக் கொள்' என்று தனக்குத் தானே அறிவு சொல்லுகிறாள்.

அடுத்த காட்சி: 'கனவுநிலை யுரைத்தல்'. இதில் மனைவி தன்னுடைய கணவன் வந்துவிட்டதாகவும் அவனைப் புணர்ந்து இன்பம் அனுபவித்ததாகவும் கண்டு விழித்துக் கொள்ளுகிறாள். விழித்துக் கொண்டவுடன் கணவன் மறைந்து விடுகிறான். தான் கணவனுடன் பேச எண்ணியிருந்தை எல்லாம் சொல்லுவதற்குள் விழிப்பு வந்து அவன் மறைந்து விட்டானே என்று ஏங்குகிறாள். எந்நேரமும் அவன் அருகில் இருப்பதாகக் கனவு கண்டு கொண்டேயிருந்தாலும் போதுமே, இந்த விழிப்பு ஏன் வந்தது? என்று வருந்துகிறாள்.



அடுத்த காட்சி: மாலைப் பொழுது வந்ததும் கணவனைப் பிரிந்திருக்கும் நினைவு, அதிகப்பட்டு வருந்தி மாலை நேரத்தைப் பலவாறு நிந்திக்கிறாள். மாலைப் பொழுது நெருங்க நெருங்கக் காமத் துன்பம் அதிகரித்து மரணவேதனை யுண்டாக்குவதாகப் புழுங்குகிறாள்.

அடுத்த காட்சி: காம வேதனையால் தன்னுடைய அங்கங்கள் எல்லாம் நலங்குறைந்து போனதை உணர்ந்து தனக்குள்ளே சொல்லி வருந்துகின்றாள். தூரதேசத்துக்குப் போயிருக்கும் கணவன் வராத ஏக்கத்தால் தன்னுடைய கண்கள் அழுது அழகிழந்து விட்டதாகவும், கைகள் மெலிந்து போனதையும், வளையல்கள் கழன்று விழுந்து விடுவனபோல் இருப்பதையும் பார்த்துத் தன் கணவன் நெடுநாள் பிரிந்திருப்பதால் அவன் தனக்குக் கொடுமை செய்துவிட்டதாகச் சொல்லுகிறாள். அதைக் கேட்ட அவளுடைய மனம் 'கொடியார்' என்று சொன்னதற்கு வருந்துகிறது. உடனே மனத்தைச் சமாதானப்படுத்தி, அந்த மனத்தையே தன்னுடைய கணவன் இருக்குமிடத்துக்குப் போய்த் தன்னுடைய நிலைமையை அவனிடம் சொல்லி அவனை விரைந்து திரும்பிவரச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறாள்.

அப்படி அவள் தன்னுடைய மனத்தைக் கணவனிடம் தூது போகச் சொன்னது பலித்தது போல், வெளியூரிலிருந்த கணவனும் அதே சமயத்தில் அவளை நினைத்துக் கொள்ளுகிறான். அப்படிக் கணவன் நினைத்துக் கொள்வதை, அதே 'உறுப்பு நலனழிதல்' என்ற அதிகாரத்திலுள்ள கடைசி மூன்று குறள்கள் காட்டுகின்றன. அந்தக் குறள்கள்,

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

என்பன. இந்த மூன்று குறள்களும் கணவன் வெளியூரில் இருந்து கொண்டு மனைவியை நினைப்பதைக் குறிப்பவை. இந்தக் குறள்களுக்குக் கணவன் இங்கிருப்பது போல் எண்ணிப் பொருள் செய்துவிடக் கூடாது. அப்படிப் பொருள் கொண்டு விட்டால் இந்த அதிகாரத்தைப் பின்னாலுள்ள 'நெஞ்சொடு கிளத்தல்', 'நிறையழிதல்', 'அவர்வயின் விதும்பல்', 'குறிப்பறிவுறுத்தல்' என்ற அதிகாரங்கள் அர்த்தமற்றவைகளாகிவிடும். ஏனெனில், 'குறிப்பறிவுறுத்தல்' என்ற அதிகாரத்தில் தான் வெளியூருக்குச் சென்று இத்தனை நாளும் பிரிந்திருந்த கணவன் திரும்பி வருகின்றான். இந்த மூன்று குறள்களையும் பரிமேலழகர், 'வினை முடிந்து மீடலுற்ற தலைமகன் முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது' என்று குறித்திருப்பது சரியல்ல. 'முன் நிகழ்ந்தது நினைந்து தன்னுள்ளே சொல்லியது' என்றது சரி. ஆனால், இது தலைமகன் வெளியூரிலிருந்தே சொல்லுவது. இங்கு வந்து சொல்லுவதல்ல. இந்த மூன்று குறள்களின் கருத்துக்கள் என்னவெனில்:

'இறுகத் தழுவிக் கட்டி யணைத்துக் கொண்டிருந்த என் கைகளைத் தளர்த்தினாலுமே என் காதலி பசந்து வருந்துவாளே; இப்போது இவ்வளவு நாளாக என்னைப் பிரிந்த அவள் எப்படி யிருக்கிறாளோ' என்றும், 'நாங்கள் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொண்டு படுத்திருக்கும்போது எங்களுக்கிடையில் காற்று நுழையக்கூடிய சந்துண்டானாலும் அதை விரும்பாது அழுது மழைபோல் கண்ணீர் விட்டுவிடுவாளே; இப்போது இத்துணை நாளும் என்னைப் பிரிந்த அவள் எப்படியிருக்கிறாளோ' என்றும், 'அவள் இவ்வேளையில் அப்படிப் பசந்து துன்பப்படுவது போல் என் கண் முன்னால் இதோ தோற்றமுண்டாகிறது. அது என் கண்களின் மயக்கமோ, அல்லது உண்மையாகவே அவள் அங்கே பசந்து வருந்திக்கொண்டு தான் இருக்கிறாளோ என்னவோ' என்றும் வெளியூரிலிருக்கிற கணவன் நினைக்கிறான். சிறிது நேரம் அப்படி அவளை நினைத்த கணவன் மறுபடியும் அங்கே தன் அலுவல்களில் புகுந்து விடுகிறான்.



அடுத்த காட்சி: முன் காட்சியில் மனைவி தன்னுடைய மனத்தைக் கணவனிடம் தூது போகச் சொன்னாள். ஆனால் அந்த மனம் அவனிருக்கும் இடத்துக்குப் போகாமல் இங்கிருந்து கொண்டே அவனை நினைக்கிறது. அந்த மனத்தைப் பார்த்துப் பின்னும் மனைவி அதனோடு பேசினாள். தன்னுடைய துன்பம் தீருவதற்கு ஒரு வழி சொல்லும்படி மனத்தினிடம் கேட்கிறாள். மனம் வருத்தப்பட்டுக்கொண்டு சும்மா இருக்கிறது. இங்கிருந்து கொண்டு வருத்தப்படுவதில் பயனில்லையென்று மனத்துக்குச் சொல்லி, அதைக் கணவனிடம் போகச் சொல்லுகிறாள். தன் கண்களும் கணவனைக் காணவேண்டுமென்று தவிப்பதால் அவற்றையும் கூட்டிக் கொண்டு அவனிடம் போகும்படி மனத்துக்குச் சொல்லுகிறாள். அது போக மறுப்பதுபோல் சும்மா இருக்கிறது. மனம் கணவன் மீது கோபங் கொண்டு விட்டதோ என்று அதைச் சமாதானப்படுத்துகிறாள். காமத்தையாவது விட்டுவிட வேண்டும். இல்லாவிட்டால் வெட்கத்தையாவது விட்டுக் கணவனிடம் போக வேண்டும் என்று மனத்துக்குச் சொல்லுகிறாள். அந்த மனம் வெட்கத்தை விட்டு விட்டு அவனிடம் போகப் புறப்படுகின்றது. உடனே 'வெளியூருக்குப் போயிருக்கிறவர்; நம்மிடம் அன்புள்ளவர்; மனத்திலிருக்கிறவர்' என்று சொல்லிப் புறப்பட்ட மனத்தைப் போகவேண்டாம் என்று தடுக்கிறாள். 'நம்மை இப்படி ஏங்க விட்டுவிட்டுப் போய் விட்டவரை நினைத்துக் கொண்டேயிருந்தால் இன்னும் நலங் கெட்டுப் போவோம்,' என்று மனத்துக்குச் சொல்லிக் காமத்தை அடக்க முயல்கிறாள்.

அடுத்த காட்சி: அப்படி அடக்க முயன்றும் அடங்காத காமத்தால் நிறையழிந்து, அந்த நிலைமை வந்துவிட்டதற்குத் தானே வருந்திச் சொல்லிக் கொள்ளுகிறாள். 'காமம் என்கின்ற கோடரி பெண்மைக்குரிய அடக்கத்தையும் உடைத்துவிடுகிறதே; எவ்வளவு அடக்கினாலும் தும்மல் போல் இந்தக் காமம் அடக்க முடியாததாகி விட்டதே; நமக்கு ஒரு துன்பம் உண்டாக்குகிறவரை வெறுப்பது தான் வழக்கம்; ஆனால் இந்தக் காமமோ யார் நமக்கு இந்தத் துன்பத்தை உண்டாக்கினாரோ அவரையேதான் விரும்பு கிறது' என்றெல்லாம் சொல்லிப் புலம்புகிறாள்.

அடுத்த காட்சி: 'காதலர் இன்னும் வரவில்லையே' என்று வெகு தீவிரத்தோடு அவனை எண்ணுகிறாள். 'அவர் பிரிந்த நாளாக அழுது அழுது கண்ணும் வறண்டு போய்விட்டது; அவர் பிரிந்த நாட்களை விரல் தொட்டு எண்ணி யெண்ணி விரல்களும் தேய்ந்துவிட்டன; அவர் எப்போது வருவாரோ; வரட்டும் சொல்லுகிறேன். ஒரே நாளில் என் துன்பமெல்லாம் நீங்கும்படி புணர்ந்து இன்பம் அடைந்து விடுகிறேன்' என்று வெகு வேகமாக நினைக்கிறாள். அதே சமயத்தில் அயலூரிலுருந்த கணவனும் இவளைப் பற்றித் தீவிரமாக எண்ணிச் சீக்கிரம் வந்த வேலையை முடித்துக் கொண்டு வீட்டுக்குப் போக வேண்டுமென்று தீர்மானிக்கிறான்.

அடுத்த காட்சி: இதுகாறும் பிரிந்து போயிருந்த கணவன் வீட்டுக்குத் திரும்பி வருகிறான்; மனைவியைப் பார்க்கிறான்; அவள் காம வேதனையினால் அடைந்திருக்கும் துன்பங்களை யெல்லாம் அவளுடைய மேனி மெலிந்து, கண்கள் வறண்டு, முகம் ஒளியிழந்து இருக்கிற குறிப்புக்களால் அறிந்து மிகவும் அனுதாபப் பட்டு அவளுடைய காதலைப் பற்றிப் பெருமையடைகிறான். மனைவியோ வாய் பேசாமல் தான் மெலிந்து போனதைக் கணவன் அறிந்து கொள்ளும்படி தன் கைகளையும் வளையல் களையும் பார்த்துக்கொண்டு தலைகுனிந்து நிற்கிறாள். அவளைப் பார்த்துவிட்டுக் கணவன் தன்னுடைய அறைக்குப் போகிறான்.



தனியே தோழியிடம் இருந்த மனைவி, தன் துன்ப நிலையைத் தோழியிடம் சொல்லுகிறாள். பிறகு காமம் மிகுந்து கணவன் இருந்த அறைக்குப் போய் அவனைக் கலவிக்கு அழைக்கிறாள். அவன் 'புணர்ச்சிக்கு அவசரப்படவேண்டிய ஆணாகிய நான் அவசரப்படாமலிருக்கப் பொறுத்திருக்கும் இயல்பு மிகுந்த பெண்ணாகிய நீயேன் அவசரப்படுகிறாய்? பொறு, காமம் மலரினும் மெல்லிது; அதைக் கசக்கி விடாமல் பக்குவமறிந்து அனுபவிக்க வேண்டும்' என்று ஏளனம் செய்கிறான். அதனால் மனம் வருந்துகிறாள் காதலி.

அடுத்த காட்சி: அவள் அவ்விடம் விட்டுப் போய்த் தனியே படுத்துக் கொண்டு, தன்னுடைய மனத்தோடு பேசிக் கொள்ளுகிறாள். ''மனமே! அவர் மனம் அவர் சொன்னபடி கேட்டு அடங்கியிருக்கிறதைக் கண்டாயே! நீ ஏன் நான் சொன்னபடி கேட்காமல் மீண்டும் மீண்டும் அவரிடத்துக்கே ஓடுகின்றாய்? நீ சொல்லித்தானே நான் 'அவர் வந்தால் அவரோடு பிணங்கிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். அப்படி யிருக்க நீயேன் அதன்படி நடக்காமல் அவரிடம் போய்க் கலவிக்கு அழைக்கும்படி தூண்டினாய்? உன்னை நம்பவே கூடாது. ஒருவர்க்கு அவருடைய மனமே உதவாவிட்டால், மற்றவர் யார் உதவுவார்கள்? ஆதலால், நான் உன்னைக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீ எனக்குத் துணையாக என்னுடன் ஒத்துழைக்க வேண்டும்'' என்று மனத்துக்குச் சொல்லுகிறாள். இப்படி அவள் மனத்தோடு பேசிக் கொண்டிருக்கிற சமயத்தில் கணவனும் வந்து படுக்கையில் படுக்கிறான்.

அடுத்த காட்சி: ''நாம் போய்க் கலவிக்கு அழைத்த போது மட்டும் ஏளனம் செய்து மறுத்துவிட்டாரே; இப்போது நாம் பிணங்கிக் கொள்ளலாம்' என்று எண்ணிய காதலி தன் மனத்துக்குச் சொல்லுகிறாள். 'மனமே, காதலர் நம்மைப் புணர வந்திருக்கிறார். நீ அவசரப்பட்டு அவரைத் தழுவிக் கொண்டு விடாதே. அவர் தழுவ வந்தாலும் இடங் கொடுக்காமல் பிணங்கிக்

கொள்ளுக. அவர் காம வேதனையால் படும்பாட்டைக் கொஞ்சம் வேடிக்கை பார்க்கலாம்' என்று சொல்லிக் கொண்டு, ஆனால் பிணக்கமும் நீடித்து விடக் கூடாதே என்று தனக்குள் எண்ணிக் கொண்டே படுத்திருக்கிறாள். கணவன் அவள் பிணக்கத்தை நீங்கிப் புணர முயல்கின்றான்.

அடுத்த காட்சி: மனைவி கணவனைப் புணர மறுத்துப் பல பொய்யான குற்றங்களைக் கற்பிக்கிறான். அந்தக் குற்றச் சாட்டுகளெல்லாம் வெறும் புனைந்துரையான பொய்களே யானாலும் கணவன் மீது மனைவிக்குள்ள உண்மையான காதலையும் கற்புணர்ச்சியையுமே காட்டுவனவாக இருக்கின்றன. அதைச் சித்திரிக்கும் குறள்களில் ஒரு குறள்:

**இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்**
**கண்ணிறை நீர்கொண் டனள்.**

என்பது இதன் பொருள்: 'இந்தப் பிறப்பில் உன்னை விட்டுப் பிரிய மாட்டேன்' என்று நான் சொன்னேன். உடனே அவள் கண்ணீர் பெருக்கி அழுது அதற்காகவும் பிணங்கிக் கொண்டாள்' என்று காதலன் சொல்லுகின்றான். இதன் கருத்து: 'இந்த ஜன்மத்தில் பிரிய மாட்டேனென்றால் அடுத்த ஜன்மங்களில் பிரிந்து விடுவாரோ' என்று மனைவி அழுதாள் என்பது. இது, அடுத்த ஜன்மங்களிலும் இவனையே கணவனாக அடையவேண்டுமென்று மனைவி விரும்பினாள் என்ற நுணுக்கமுள்ளது.

இது, கம்பராமாயணத்தில் சீதை அனுமானிடத்தில் இராமனுக்குச் சொல்ல வேண்டிய சேதிகளைச் சொன்னதை நினைப்பூட்டுகின்றது. அனுமான் சீதையை அசோகவனத்தில் கண்டு அவளுக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லி கணையாழியைத் தந்து, அவள் சொன்னதை யெல்லாம் கேட்டுக் கொண்டு விடை பெற்றுக்கொள்ளும் போது, சீதை தன்னுடைய அடையாளமாகச் சூளாமணியைத் தருகிறாள். அத்துடன் இராமனிடத்திற் சொல்லும்படி சில சேதிகளையும் சொல்லுகிறாள்.



அச் சேதிகளில் ஒன்று: 'இன்னும் ஒரே ஒரு மாதந்தான் நான் உயிரை வைத்துக் கொண்டிருப்பேன். அதற்குமேல் நிச்சயம் உயிரை விடுவேன். அப்படி,

**ஈண்டுநா னிருந்து இன்னுயிர் மாயினும்**
**மீண்டும் வந்து பிறந்துதன் மேனியைத்**
**தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்**
**வேண்டினாள் தொழுது என்று விளம்புவாய்**

இங்கேயிருந்து நான் இறந்து போனாலும் மறுபடியும் பிறந்து அவருடைய திருமேனியைத் தீண்டும்படியான ஒரு தீவினை போக்கும் வரத்தை எனக்கு அருளும்படி நான் வேண்டிக் கொண்ட தாகச் சொல்லுவாய்' என்பது.

இதே விருப்பதை உள்ளடக்கியதுதான் மேலுள்ள குறள்.

அடுத்த காட்சி: புலவி நீங்கிக் கலவி நடக்கிறது. புணர்ச்சி முடிந்தவுடன் கணவன் காதலி இருவரும் பிரிந்துவிடுகிறார்கள். இது காமத்துப் பாலின் கடைசி அதிகாரமாகிய 'ஊடலுவகை' என்பது. இந்த அதிகாரத்தில் 'ஊடல்' என்பது வெறும் 'பிணக்கம்' என்ற பொருளில் மட்டுமல்லாமல் 'புணர்ந்தவர்கள் பிரிந்துவிட வேண்டும்' என்ற பொருளையும் கூட்டிச் சொல்லப் பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். காம நுகர்ச்சியில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில நல்லறிவுகள் மிகவும் நுணுக்கமாகச் சொல்லப்படுகின்றன. பரிமேலழகருடைய உரை அந்த நல் லறிவுகளைப் புகட்டுவதாக இல்லை.

அந்த நல்லறிவுகளாவன:

**தவறில ராயினும் தாம்வீழ்வார் மென்றோள்**
**அகறலின் ஆங்கொன் றுடைத்து.**

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை:

'ஆடவர் தங்கட் டவறிலராயினும் உடையார் போல் ஊடப்பட்டுத் தாம் விரும்பு மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப் பெறாத வெல்லைக்கண் அவர்க்கு அப்பெற்றியதோரின்பம் பயத்தலுடைத்து' என்பது பதவுரை.

மேலும், இதற்கு விளக்கமாவது: ''உடையராயக்கால் இறந்த வின்பத்தோடு வருமின்பமு மெய்துவராகலின் அது மிக நன்று; மற்றை யிலராகியக்காலும் வருமின்பத்தை யிகழ்ந்த தில்லை யென்னுங் கருத்தால் 'தவறிலராயினு மாங்கொன்றுடைத்' தென்றான். ஊடலினாய வின்பம் அளவிறத்தலிற் கூறற்கரி தென்பான், அப்பெற்றிய தொன்றென்றான், தவறின்றி யூடியதூ உம் எனக் கின்பமாயிற் றென்பதாம்.'' இது விளக்கம்.

இந்த குறளுக்குத் திருவள்ளுவர் கருதும் உரை இதுவாக இருக்க முடியாது. ஏனெனில் இது புலவி நீக்கிப் புணர்ந்து முடிந்தபின் சொல்லப்படுவது. பரிமேலழகரும் இந்தக் குறள், தலைமகளை ஊடல் நீக்கிக் கூடிய தலைமகன் கழியுவகையனாய்த் தன்னுள்ளே சொல்லியது'' என்றுதான் சொல்லுகிறார். ஆதலால் இது புணர்ச்சிக்குப் பிறகு நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றியதாக இருக்குமென்பதுதான் பொருத்தமாகும். புணர்ச்சிக்கு முன்னாலிருந்த பிணக்கத்தைப் பற்றியதல்ல. அத்துடன் இந்த குறளிலுள்ள 'அகறலின்' என்ற பதத்திற்கு, 'கூடப்பெறாத எல்லைக்கண்' என்று பொருள் கொண்டது சரியல்ல. அப்படி வலிந்து பொருள் கொள்ளவும் அந்தப் பதம் இடந் தராது. 'அகறல்' என்பது 'அகல்தல்'; அதாவது 'அகலுதல்', 'அகலுதல்', என்ற பதத்துக்கு 'விலகுதல்', 'நீங்குதல்', 'விரிதல்' என்ற அர்த்தங்களைத் தவிர வேறு அர்த்தங்கள் இல்லை. குறளின் நோக்கத்தைத் தவறாகக் கொண்டுவிட்டதால் அந்தப் பதத்திற்கு அப்படிப் பொருள் பிணைக்கவேண்டியதாகி விட்டது. மேலும், இந்தக் குறளிலுள்ள 'தவறிலராயினும்,' என்ற சொற்றொடரை, இந்தக் அதிகாரத்தின் முதற் குறளிலுள்ள 'இல்லை தவறவர்க் காயினும்' என்ற சொற்றொடரின் மறு பதிப்பாகவே கொண்டு



விடக் கூடாது. முதற் குறளிலுள்ள 'இல்லை தவறவர்க்காயினும்' என்பது தலைமகனைக் குறிப்பதாகவும், 'தவறிலராயினும், என்றது தலைமகளைக் குறிப்பதாகவும் கொள்ளுவது தான் நல்லது. அதை எப்படிக் கொண்டாலும் ''தாம்வீழ்வார் மென்றோள் அகறலின் அங்கொன்றுடைத்து' என்பதற்குப் பொருள் 'தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப்பெறாத எல்லைக்கண் - அப்பெற்றியதோர் இன்பம் பயத்தலுடைத்து' என்பது பொருளல்ல. பின் இந்தக் குறளின் பொருள் என்னவென்றால், 'காதலியின் குற்றமொன்றும் இல்லா விட்டாலும் காதலன் புணர்ச்சிக்குப் பின் காதலியின் மெல்லிய தோள்களைத் தழுவிக் கொண்டிருப்பதை விட்டு விலகிட வேண்டும். அதில் ஒரு நன்மை உண்டு' என்பதே. இதுவே இக்குறளின் நோக்கம். இதில் காதலியின் 'தவறு' என்னவென்றால், அவள் பிணங்குவதோ அருவருப்பதோ செய்து, இவனை விலக்காமல் கணவன் புணர்ச்சிக்குப் பின்னும் தன்மீது முயங்கிக் கிடப்பதை விரும்பினாலும்கூட, இவன் அவளைவிட்டு விலகிப் படுத்துக் கொள்வதில் ஒரு நன்மையுண்டு. அப்படிப் புணர்ச்சிக்குப்பின் விலகிக் கொள்ளாமல் அவளைத் தழுவிக் கொண்டேயிருந்தால் மீண்டும் சிறிது நேரத்தில் காமமுண்டாகி அடுத்தடுத்துப் புணரச் செய்யும். அது தீமை பயக்கும். இதை அடுத்த குறளிற் சொல்லுகின்றார். ஏன் புணர்ச்சிக்குப் பின் மனைவியின் தழுவலை விட்டு விலகிவிட வேண்டும் என்றால்,

**உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

இதன் பொருள்: அடுத்தடுத்து உண்பதைவிட முன் உண்டது சீரணமாகிறவரை மீண்டும் உண்ணாமலிருப்பது நல்லது. அதைப் போலக் காமத்தில் அடுத்தடுத்துப் புணர்வதினும் ஒரு தரம் புணர்ந்த அலுப்புத் தீரும் வரையிலும் மீண்டும் புணராமலிருப்பது நல்லது. இந்தக் குறளிலுள்ள 'ஊடல்' என்ற பதத்துக்குப் 'பிரிதல்' என்பது பொருள். 'பிணங்குதல்' அல்ல. 'ஊடல்' என்ற

பதத்துக்குப் 'பிரிதல்' 'பிணங்குதல்' என்ற இரண்டு பொருள்களும் உண்டு. இங்கே கருதப்படுவது 'பிரிதல்'. இங்குள்ள 'இனிது' என்ற பதத்துக்கு 'நன்மை பயப்பது' அல்லது 'நல்லது' என்பது பொருள். வெறும் 'இன்பந் தரும்' என்ற பொருள் போதாது.

இந்தக் குறள் சுகாதாரத்தைக் கருதியது. 'மருந்து' என்ற அதிகாரத்தில் 'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' என்ற குறள் எந்த நோக்கத்தைக் கொண்டதோ அந்த நோக்கமே கொண்டது இந்தக் குறளும். நோய் வராமலிருக்க, முன் உண்டது சீரணித்ததை அறிந்து கொண்டு தான் மறுமுறை உண்ணவேண்டும் என்பது போலவே, நோய் வராமலிருக்க முன் புணர்ந்ததனால் உண்டான சுக்கிலச் செலவு நிறைவாகி அலுப்புத் தீர்ந்த பிறகுதான் மறுமுறை புணர வேண்டும் என்ற சுகாதார அறிவைப் புகட்டுகிறது இந்தக் குறள்.

இந்தச் சுகாதாரத்தைக் கவனித்துக் கொண்டால் புணர்ச்சியும் இன்பமுடையதாக இருக்கும். காதலன், காதலி என்ற இருவருள் யார் அதிக நேரம் பிரிந்திருக்கப் பொறுத்துக் கொள்கிறாரோ அவருக்கே அடுத்த புணர்ச்சியில் காம இன்பம் அதிகமாக இருக்கும் என்பதை அடுத்த குறள் சொல்லுகிறது.

**ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்**
**கூடலில் காணப் படும்.**

'பிரிந்திருப்பதில் யார் அதிக நேரம் பொறுத்திருந்து புணர்ச்சிக்குத் தோற்றுவிட்டவர் போல் காணப்படுகிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார். அதை அடுத்த புணர்ச்சியில் அவரே அறிந்து கொள்ள முடியும் என்பது இதன் பொருள்.

'தோற்றல்' என்பதற்குப் 'பொறுத்துக் கொள்ளல்' என்ற ஒரு பொருளும் உண்டு. அப்படிக் கொண்டாலும் சரியே. பிரிந்திருந்து புணர்வதால் சுகாதாரத்தோடு இன்பமும் அதிகப்படும் என்பது எதனால் என்றால், ஒருமுறை புணர்ந்த போது ஆணுக்கும்



பெண்ணுக்கும் ஓரளவு சுக்கிலமும் சுரோணிதமும் வெளிப்பட்டு, சுக்கில சுரோணிதச் சேமிப்பில் குறைவு உண்டாகிவிடுகிறது. அந்தக் குறைவு மீண்டும் நிறைவான பிறகு புணர்ந்தால் தான் இயல்பான இன்பம் இருக்கும். அந்தக் குறைவு நிறைவாகச் சுக்கில சுரோணிதங்கள் ஊற வேண்டும். அப்படி ஊறுவதற்கு அவகாசம் கொடுக்க வேண்டும். இதை அடுத்த குறள் சொல்லுகிறது:

**ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்**
**கூடலில் தோன்றிய உப்பு.**

இந்தக் குறள் மிகவும் சிந்திக்கத் தக்கது. முன்னுள்ள இரண்டு குறள்களின் தொடர்ச்சியாகப் பொருள் செய்ய வேண்டியது. இதுவும் ஒருமுறை புணர்ந்தவர்கள் உடனே மீண்டும் புணராமல் பிரிந்து பொறுத்திருப்பதால் உண்டாகும் சுகாதார நன்மையைப் புகட்டுவது. இதற்குப் பரிமேலழகர் தரும் உரை அந்த நோக்கத்தைக் கொண்டதாக இல்லை. அவர் தரும் உரை:

'இது பொழுது இவள்நுதல் வெயர்க்கும் வகை கலவியின் கண் உளதாய் இனிமையை இன்னு மொருகால் இவள் ஊடியாம் பெறவல்லோமோ' என்பது பதவுரை.

''கலவியது விசேடம்பற்றி 'நுதல் வெயர்ப்ப' என்றான். இனிமை: கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதலானாய இன்பம். இனி அப்பேறு கூடாதெனப் பெற்றதன் சிறப்புக் கூறிய வாறு'' என்பது விளக்க உரை.

இந்த உரையில் காதலன், ''முன் புணர்ந்த இன்பத்தைப் போல் இனியும் இன்பமடைய முடியுமா? 'முடியாது' என்று ஏங்குவதாகச் சொல்லப்படுகிறது. 'இன்னொருதரம் இவள் புலந்து இதைப் போன்ற இன்பத்தை நான் இனிப் பெற முடியாது. அதனால் இப்போது பெற்ற இன்பமே சிறந்த இன்பம்' என்று காதலன் எண்ணவேண்டிய சந்தர்ப்பம் இங்கே என்ன இருக்கிறது? அதனால் இந்த உரை பொருத்தமற்றது. முன்னைய குறள்களின்

தொடர்ச்சிதான் இதுவும் என்று கொள்ளாததால் பொருள் பயனற்றதாகிவிட்டது.

இந்தக் குறளின் கருத்து என்னவென்றால்; ''நெற்றி வேர்க்கும்படியான உடல் அலுப்புண்டாக முன் புணர்ந்ததில் வெளிப்பட்டுப் போன சத்தாகிய சுக்கிலத்தைப் பிரிந்திருந்து பெறுவோம், என்பதே.

இங்குள்ள 'தோன்றிய' என்ற பதத்துக்கு 'வெளிப்பட்ட' என்பது பொருள். 'நுதல் வெயர்ப்ப' என்பது உடல் உழைப்பினாலுண்டான அலுப்பைக் குறிப்பது. 'கொல்லோ' என்பது உறுதிப் பொருளில் நிற்கும் அசைச் சொல். புணர்ந்தவர்கள் பிரிந்திருப்பதால் உடல் அலுப்பும் தீரும். குறைந்து போன இந்திரியமும் ஊறும் என்பது கருத்து.

ஒருதரம் புணர்ந்தவர்கள் மறுபடியும் புணர்வதற்கு எவ்வளவு நேரம் பிரிந்திருக்க வேண்டும் என்றால், எவ்வளவு நேரம் பிரிந்திருந்தாலும் அவ்வளவும் நல்லதுதான். ஓர் இரவில் ஒருமுறை புணர்ந்தவர்கள் அந்த இரவில் மறுபடியும் புணராமல் இருந்துவிட்டால் மிகவும் நல்லதுதான். இந்தக் கருத்தை அடுத்த குறள் காட்டுகிறது:

**ஊடுக மன்னோ ஒளியிழை யாம்இரப்ப**
**நீடுக மன்னோ இரா.**

இதன் கருத்து: ''இனிமேல் வேண்டுமானால் காதலி பிணங்கிக் கொள்ளட்டும். அந்தப் பிணக்கம் இரவு முழுதும் நீடிக்கட்டும்; நான் வேண்டிக் கொள்ளுகிறேன்,'' என்பது.

இதற்குப் பரிமேலழகர் தரும் உரை: 'ஒளியிழையினை உடையாள் இன்னும் எம்மோடு ஊடுவாளாக. அங்ஙனம் அவள் ஊடிநிற்றற்கும் அதனை உணர்த்துதற் பொருட்டு யாம் இரந்து நிற்றற்கும் காலம் பெறும் வகை இவ்விரவு விடியாது நீடித்தல் வேண்டுக,' என்பது.



இந்த உரையின் கருத்து என்னவென்றால், 'காதலி மீண்டும் என்னோடு பிணங்கிக் கொள்ளட்டும். நான் அவளுடைய பிணக்கத்தை நீக்க நெடுநேரம் கெஞ்சிக் கொண்டிருக்கும்படி இந்த இரவு சீக்கிரம் விடிந்து விடாமல் நீண்ட இரவாக இருக்கட்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்' என்பது.

இது மிகவும் கொச்சையான விருப்பம் என்பதோடு பயனும் இல்லாதது. இந்தக் குறளில் 'ஊடுதல்' என்பது 'பிணங்குதல்' என்ற பொருளில் சொல்லப்பட்டிருக்கிறதைக் குறிப்பிட வேண்டும். 'ஊடுதல்' என்ற பதத்துக்குப் 'பிணங்குதல்', 'பிரிந்திருத்தல்' என்ற இரண்டு அர்த்தங்களும் உண்டு என்று முன்னமே சொல்லப் பட்டது. இந்த அதிகாரத்தில் அந்த இரண்டு அர்த்தங்களிலும் இந்தச் சொல் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. இடத்துக்கு ஏற்றபடி கொள்ள வேண்டும்.

ஓர் இரவில் ஒருமுறை புணர்ந்தவர்கள் அந்த இரவு முழுதும் மறுபடியும் புணராமல் இருக்க முடியுமானால் அது மிகவும் நல்லதே. ஆனால் இளங்காதலர்கள் அப்படியிருக்க முடிவதில்லை. அதனால் மறுபடியும் புணர வேண்டுமானால் இருவருக்கும் முன்பு புணர்ந்த அலுப்பு நீங்கிச் சுக்கில சுரோணிதக் குறைவுகளும் நிறைவாகி, இருவருக்கும் புணர்ச்சி விருப்பம் கூடிப் புணர வேண்டும். அப்படியிருக்கின்ற ஒருவர் அலுத்திருக்கும் போது மற்றவர் பலவந்தப்படுத்தக்கூடாது. அதில் இன்பமில்லை; துன்பந்தான். இந்தக் கருத்தை அடுத்துள்ள கடைசிக் குறள் காட்டுகின்றது.

**ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்குஇன்பம்**
**கூடி முயங்கப் பெறின்.**

இதன் கருத்து. ''பிரிந்திருப்பது அடுத்த புணர்ச்சியில் இன்பம் தரத் தக்கது. அந்த இன்பத்தை இன்பமாக்குவது, பிரிந்திருந்த இருவருக்கும் ஒத்த விருப்பம் கூடிப் புணர்வது பெற்றால் தான், என்பது.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தந்துள்ள உரை: 'காம நுகர்ச்சிக்கு இன்பமாவது அதனை நுகர்தற்குரியாராவார் ஆராமை பற்றித் தம்முள் ஊடுதல், அவ்வூடுதற்கு இன்பமாவது, அதனை அளவறிந்து நீங்கித் தம்முள் கூடி முயங்குதல் கூடுமாயின், அம்முயக்கம்' என்பது பதவுரை.

இதற்கு அவர் தரும் விளக்கம்: 'கூடுதல்' ஒத்த அளவினராதல். முதிர்ந்த துனியாயவழித் துன்பம் பயத்தலானும், முதிராத புலவியாயவழிக் கலவியின்பம் பயவாமையானும், இரண்டற்கும் இடையாகிய அளவறிந்து நீங்குதல் அரிதென்பது பற்றிக் 'கூடி முயங்கப் பெறின்' என்றான். அவ்விரண்டினபமும் யான் பெற்றேன் என்பதாம்.

இதில் ''ஊடுதல்'' என்பதற்கு 'இருவரும் தம்முள் ஊடுதல்' என்று பிணக்கத்தைப் பொருளாகக் கொண்டுவிட்டார். அது சரியல்ல. இங்கே 'ஊடுதல்' என்பதற்குப் 'பிரிந்திருத்தல்' என்பது பொருள். மேலும், இருவரும் பிணங்குவது என்பதும் சரியல்ல. பிணங்குவதெல்லாம் பெண்தான். ஆண்மகனுக்கு 'ஊடுவது' என்பதைப் 'பிரிந்திருத்தல்' என்ற பொருளில் தான் வள்ளுவர் வைத்திருக்கிறார். இந்த அதிகாரத்தின் பெயர் 'ஊடலுவகை' என்பது. 'ஊடலுவகை' என்றால் பிரிந்திருப்பதால் உண்டாகும் மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியாவது, 'புணர்ந்தவர்கள் உடனே மீண்டும் புணராமல் பிரிந்து விடுவது ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். அந்தப் பாதுகாப்பு அடுத்த புணர்ச்சிக்கு இன்ப மளிப்பது' என்ற மகிழ்ச்சி. காமத்தால் உடல் நலம் கெட்டு, வாழ்க்கையில் மகிழ்ச்சி கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமானால்,

**உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

என்ற குறளுக்கிணங்க காமத்தை அனுபவிக்கவேண்டும் என்பதே இந்த அதிகாரத்தின் நோக்கம்.

# நாடக பாத்திரங்கள்

திருவள்ளுவர் நடத்திக் காட்டுகிற 'காமத்துப் பால்' என்ற சிறு நாடகம் காதலன், காதலி என்ற இரண்டே பாத்திரங்களால் தான் நடிக்கப்படுகின்றது. இரண்டே இடங்களில் மட்டும் தோழி ஒருத்தி காட்சியளிக்கிறாள். ஆனால் அவளும் தோன்றி மறைந்து விடுகிறாள். அவள் நடிப்பதில்லை. ஆனால் உரையாசிரியர் பாங்கன், செவிலி, தோழி என்ற பாத்திரங்களையும் புகுத்தி யிருக்கிறார். தோழியையும் நடிக்கச் செய்கிறார். பாங்கன் என்ற பாத்திரம் நான்கு இடங்களில் நுழைக்கப்பட்டிருக்கிறது. 'செவிலி' என்பது ஒரே இடத்தில் தான் காணப்படுகிறது. ஆனால் இந்தத் தோழி என்பவள் எல்லா இடங்களிலும் புகுந்து தொல்லை கொடுக்கின்றாள். காதலனும் காதலியும் கலவி செய்யும் படுக்கை யறைக்குள்ளும் வந்துவிடுகிறாள்! இந்தத் தோழி, பெண்ணுக்குத் தோழியாக இருப்பது மட்டுமன்றி ஆண் மகனுக்கும் தோழியாக இருக்கிறாள். பிரிந்திருக்கும் காதலர்கள் தனித்தனியே அவரவர்கள் இருக்குமிடங்களில் இருந்து கொண்டு, ஒருவரை யொருவர் நினைத்துக் கொள்ளும் போதுகூட அவர்களுடைய எண்ணங்களுக்கிடையே புகுந்து கேள்விகள் போடுகின்றாள்.

திருவள்ளுவர் இந்தப் பாங்கன், செவிலி, தோழி என்ற பாத்திரங்களை எண்ணவேயில்லை. உரையில் சொல்லப்படுகின்ற 'தலைமகன்' 'தலைமகள்' என்ற சொற்களுங்கூடப் பிற்காலத்திய பிரபந்த வழக்குப்பற்றி உரையாசிரியர் உபயோகப்படுத்தும் பதங்களேயன்றி, திருவள்ளுவர் சொன்னவையல்ல. அவர், ஓர் ஆண், ஒரு பெண் இவர்களிருவரும் ஒருவரையொருவர் கண்டவுடன் காமுற்றுப் புணர்ந்தவர்களாகவும், பிரிந்து காதல் முற்றி வருந்துபவர்களாகவும், மணந்து கொண்டு கணவன்

மனைவியாகிக் கற்புடையவராகவும் நடந்துகொள்ளும் காட்சி களையே காட்டுகின்றார். எனினும், 'தலைமகன்' 'தலைமகள்' என்ற பதங்களால் குற்றமொன்றுமில்லை. 'பாங்கன்' 'செவிலி' என்ற பதங்கள் காணப்படுவதையும் பொருட்படுத்த வேண்டிய தில்லை. ஆனால், இந்தத் 'தோழி'யின் குறுக்கீடுகள் குற்ற மானவை. காலமறியாமல், இடமறியாமல், காரணமில்லாமல் அவள் நுழைவதனால் மலரினும் மெல்லிய காமத்தின் மென்மையும் மணமும் அவற்றால் அடையக்கூடிய ரஸனையும் கெட்டுப் போகின்றன. அதனால் 'தோழி'யின் நடிப்புக்களை முற்றும் நீக்கிவிட்டுப் பொருள் காண வேண்டும். தோழியைப் புகுத்திப் பொருள் செய்வதால் எப்படிச் சுவை கெட்டுப் போகின்றது என்பதைப் பார்ப்போம்.

'களவியல்' பகுதியில் 'நாணுத்துறவுரைத்தல்' என்பது ஆறாவது அதிகாரம். ஏகாந்தமான இடத்தில் சந்தித்த ஒரு வாலிபனும், ஒரு யுவதியும் இயல்பாக உதித்த காமத்தால் ஒருவரையொருவர் விரும்பிப் புணர்ந்து விட்டார்கள். ஒருவருக்கும் தெரியாமல் களவாகப் புணர்ந்துவிட்ட அவர்கள் பிறர் கண்டு கொள்ளுமுன் பிரிந்து அவரவர் மனைக்குப் போய் விடுகிறார்கள். ஆண் மகன் தன் வீட்டுக்குப் போனபின் அந்தப் புணர்ச்சி இன்பத்தைப் புகழ்ந்து மகிழ்கின்றான். பிறகு அந்தப் பெண்ணின் அழகை நினைத்து அவளுடைய அங்கங்களின் மென்மையையும், முகத்தின் பொலிவையும் தனக்குள் வருணித்து இன்புறுகிறான். பிறகு சிறுகச் சிறுகக் காதல் முற்றுகிறது. அவளையே தன்னுடைய வாழ்க்கைத் துணைவி ஆக்கிக்கொள்ளத் தீர்மானித்து அவளைத் தன்னுடைய கண்ணின் கருமணியென்றும், உடலின் உயிர் என்றும் சொல்லி, அவளை மனைவியாக அடையா விட்டால் தன்னுடைய உயிர் போய்விடுமென்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான். இப்படி இவன் தன்னுடைய வீட்டிலிருந்து எண்ணிக் கொள்ள, அந்தப் பெண்ணுக்கும் இவன்மீது காதல் முற்றி இவனுடைய ஏக்கமாகவே இருந்து கொண்டு, தன்னை அலங்காரம் செய்து கொள்ளாமலும், கண்ணுக்கு மை



யெழுதாமலும் உரிய காலத்தில் உணவருந்தாமலும், உறங் காமலும் இருந்து வருகிறாள். தான் கள்ளத்தனமாகப் புணர்ந்ததையும் புணர்ந்த ஒருவன் மீது காதல் கொண்டிருப்பதையும் ஒருவருக்கும் சொல்லவில்லை. இருந் தாலும், அவள் ஊணுறக்கமில்லாமல் ஏங்கியிருப்பதைக் கண்ட அவளுடைய பெற்றோரும் உறவினரும் அக்கம் பக்கத்திலுள்ள ஊராரும், அவளை எவனோ ஒருவன் கெடுத்து விட்டானே, அவன் யாரென்று அவளையும் நிந்தித்து அவளையும் பரிகாசம் பண்ணுகிறார்கள். 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரத்துக்கு முன்னாலுள்ள ஐந்து அதிகாரங்களிலும் உள்ள நிலைமை இது.

இப்படிக் களவாக ஒருவரையொருவர் சந்தித்துக் காதல் கொண்டு விட்ட இருவருக்கும் அவர்களுடைய பெற்றோரும் உறவினரும் கூடி விரைவில் மணம் செய்து வைத்துவிடுவது தான் பண்டைய சமுதாய வழக்கம். அப்படி மணமுடிப்பதில் தடைகளும், தாமதமும் ஏற்படுவது உண்டு. அப்படித் தடை ஏதேனும் ஏற்பட்டால் மட்டும் காதல் கொண்ட ஆண்பிள்ளை 'மடல்மா' என்ற பனைமட்டைகளாற் செய்யப்பட்ட பொய்க் குதிரை மீது ஏறிக் கொண்டு, தன் காதலை ஊராருக்கு அறியப்படுத்தி மணமுடித்து வைக்கும்படி கேட்டுக் கொள்வது வழக்கம்.

இனி 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரத்தை ஆராய்வோம்; இந்த அதிகாரத்தில், காதலன் தான் காதலிக்கும் பெண்ணுக்கும் தனக்கும் திருமணமாவது தாமதப்படுவதைக் கண்டு ஏக்கமுற்றுத் தான் 'மடல்மா' ஏற வேண்டி நேருமோ என்றும், அப்படி 'மடல்மா' ஏறுவது தனக்கு மானக்கேடான காரியமாகுமே என்றும், இருந்தாலும் 'மடல்மா' ஏறியாவது அவளை அடைய வேண்டுமென்றும் இரவிலும் தூங்காமல் எண்ணிக் கொண்டிருக்கின்றான். இவனைக் காதலிக்கும் அப் பெண்ணோவென்றால், தன்னுடைய காமம் தன்னை நாணமற்றவள் ஆக்கிவிட்டதே, தெருவில் போகிறவர்களும்

தன்னைப் பார்த்து ஏளனம் செய்யும்படி தன்னைச் சந்தியில் இழுத்து விடுகிறதே என்று தன்னுடைய இல்லத்தில் ஏங்குகின்றாள்.

இதுதான் இந்த அதிகாரத்திலுள்ள குறள்கள் காட்டுகிற காட்சி. இந்த அதிகாரத்திலுள்ளன முற்றும் காதலனும் காதலியும் அவரவர் வீட்டில் ஏகாந்தமாக இருந்து கொண்டு தமக்குள்ளேயே சொல்லிக் கொள்பவை. இவர்கள் இருவரும் ஒருநாள் சந்தித்துப் புணர்ந்துவிட்டு, மறுபடியும் சந்திப்புக்கு வாய்ப்பில்லாமல் காதலோடு காம வேதனையில் இருக்கிறவர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

இந்த அதிகாரத்தில் தோழியைப் புகுத்தியதால் எப்படி ரஸனை கெட்டுப் போகிறதென்பதைப் பாருங்கள். இந்த அதிகாரத்தின் பெயர் 'நாணுத்துறவுரைத்தல்'. இந்தச் சொற்றொடருக்கு அர்த்தம் 'காமம் மிகுந்து விட்டதால் காதலனும் காதலியும் நாணம் விட்டுவிட்டதைப் பற்றிச் சொல்லுதல், என்பதுதான். சொல்லுதல் என்பதை மூன்று விதமாகக் கொள்ளலாம்: ஒன்று நாணம் விட்டுவிட்டதைப் பற்றிச் சொல்லுதல் இந்த அதிகாரம் என்பது. இரண்டு, நாணம் விட்டுவிட்டதைப் பற்றித் தமக்குத் தாமே சொல்லுதல் என்பது. மூன்று தாம் நாணம் விட்டுவிட்டதைப் பற்றிய பிறர் ஒருவருக்குச் சொல்லுதல் என்பது. இந்த மூன்றிலும் எது இங்கே மிகவும் பொருத்தமானது என்பதைக் கவனிக்க வேண்டும். குறள்களின் கருத்துக்களைப் பார்த்தால் இவர்கள் தமக்குத் தாமே சொல்லிக்கொள்வது' என்று கொள்ளுவதுதான் மிகவும் பொருத்தமானது. இரண்டாம் பட்சமாக 'இந்த அதிகாரம் சொல்லுவது நாணுத்துறவைப் பற்றி' என்று கொள்ளலாம். 'தாம் நாணம் விட்டுவிட்டதைப் பிறருக்குச் சொல்லுவது' என்பது பொருத்தமாக இல்லை. மேலும், அது கொச்சையாகத் தோன்றுகிறது.



பரிமேலழகர் மேற்சொன்ன மூன்றில் கடைசியாக உள்ள, 'மானம் விட்டுவிட்டதைப் பற்றிப் பிறருக்குச் சொல்லுதல்' என்ற அர்த்தங் கொண்டு இந்த அதிகாரத்துக்கு உரை செய்துள்ளார். அவர் இந்த அதிகாரத்தின் பெயருக்குச் சொல்லும் விளக்கம் என்னவெனில், 'அஃதாவது சேட்படுக்கப்பட்டு ஆற்றானாய தலைமகன் தோழிக்குத் தன் நாண்டுறவு உரைத்தலும், அறத்தொடு நிற்பிக்கலுற்ற தலைமகள் அவட்குத்தன் நாண்டுறவு உரைத்தலுமாம்' என்பது.

எளிய நடையில் இதன் கருத்து என்னவென்றால், 'தூரத்தில் இருக்கப்பட்டவனாக, (காமத்துன்பத்தைப்) பொறுக்க மாட்டாதவனாகிய தலைமகன் தோழிக்கு, (தான்) நாணம் விட்டுவிட்டதைப் பற்றிச் சொல்லுவதும், வெளியே போகாமல் வீட்டோடிருக்க வேண்டிக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள நிலைமை யிலிருக்கின்ற தலைமகள் அந்தத் தோழிக்குத் தான் நாணம் விட்டு விட்டதைப் பற்றிச் சொல்லுவதுமாம்' என்பது.

முதலில் தலைமகனுக்குத் தோழி ஏது? அந்தத் தோழி தலைமகளிடத்திலிருந்து வந்தாளா? அல்லது தலைமகன் தலைமகளிடம் அனுப்பியவளா? இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். வாசகம் 'தலைமகன் தோழிக்குச் சொல்வதும், தலைமகள் **அவளுக்குச்** சொல்வதும்' என்றிருப்பதால் இருவரும் சொல்லுகின்ற தோழி ஒருத்தியேதான். அப்படியானால் இவர்களுக்குள் தூது நடந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்குத் திருக்குறளில் ஆதாரமென்ன? தூது நடப்பது அல்லவென்றால், திருட்டுத்தனமாக இவர்களுக்கிடையில் ஒரு தோழிப் பெண் போவதும், வருவதுமாக இருக்க வேண்டும். அந்தப் பெண் தலைமகளுடைய தோழியாகத்தான் இருக்க முடியும். அப்படித் தன் தோழியைத் தலைமகனிடத்துக்குத் தலைமகள் அனுப்பினாள் என்று அனுமானிக்கவும் இடமில்லை. அப்படியே தலைமகள் தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான

ஒரு தோழியைத் தலைமகனிடம் இரகசியமாக அனுப்பினதாக வைத்துக் கொண்டாலும்,

**தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு**
**மாலை உழக்கும் துயர்.**

என்ற இந்த அதிகாரத்திலுள்ள ஐந்தாவது குறளை, 'இவ்வாற்றாமையும் மடலும் நுமக்கு எவ்வாறு வந்தன' என்றாட்குச் சொல்லியது என்று சொல்லுவதேன்? தலைமகளுக்கு மிகவும் அந்தரங்கமான தோழி, தலைமகளுடைய காம வேதனையைப் பற்றித் தலைமகனுக்குச் சொல்லி அவன் சொல்லுவதைத் தலைமகளுக்குச் சொல்லவென்று வந்தவள். அவள் இவர்களுக்குள்ள நிலைமையை நன்றாக அறிந்தவள். அவள் தலைமகனிடத்தில் 'இந்த காமவேதனை ஆற்றாமையும், மடலூர வேண்டுமென்ற எண்ணமும் உமக்கு எப்படி வந்தன? எவராலுண்டாயின?' என்று கேட்பது பொருந்துமா? அதற்கு அவன், ''நான் இப்படி மடல் ஏறவேண்டிய எண்ணத்துடன் துயரப்படவேண்டிய நிலைமை உன்னுடைய தலைவியினால் வந்தது' என்று பதில் சொன்னான் என்பதுதான் பொருந்துமா?

இந்த அதிகாரத்தின் முதற் குறள்:

**காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல்அல்லது இல்லை வலி.**

என்பது. இதன் பொருள், '(புணர்ந்து பிரிந்த காதலியை மீண்டும் புணர முடியாமல்) காமவேதனையால் வருந்துகின்றவர்களுக்கு மடலேறுவதைத் தவிர வேறு வழியில்லை. (நானும் மடலேற வேண்டியதுதான்) என்பது. இது காதலன் தனக்குள் நினைப்பது, அல்லது தனக்குத்தானே சொல்லிக் கொள்வது.

இதைத் தலைமகன் தலைமகளிடமிருந்து வந்த தோழிக்குச் சொன்னதுபோலக் கொண்டு அடுத்துவரும் குறள்களுக்குப் பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கடுத்த குறள்:



**நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்**
**நாணினை நீக்கி நிறுத்து.**

என்பது. இதன் பொருள், 'காமவேதனையைப் பொறுக்க மாட்டாத என் உடலும் உயிரும் நான் என் மானத்தை விட்டு விட்டு மடலேற வேண்டுமென்று தூண்டுகின்றன, என்பது. இதுவும் தலைவன் தன்னுள் சொல்லிக் கொள்வது. ஆனால் இது, 'நாணுடைய நமக்கு அது முடியாதென மடல் விலக்கலுற்றாட்குச் சொல்லியது' என்று உரை செய்யப்பட்டிருக்கிறது. இங்குள்ள தோழி, தலைமகளுக்குச் சலுகையாகத் தலைமகனிடம் வந்தவ ளானால் அவன் மடலேறியாவது தலைமகளை அடைய வேண்டு மென்று விரும்புவதைத் தடுப்பாளா?

அடுத்த குறள்:

**நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்**
**காமுற்றார் ஏறும் மடல்.**

இதன் பொருள்: 'இதுவரையிலும் நான் மான முள்ளவனாகவும், ஆண்மையுள்ளவனாகவும் இருந்தேன்; (அப்படிப்பட்ட நான் அந்த வெட்கத்தையும், ஆண்மையையும் விட்டுவிட்டு) இப்போது மடலேறுதலை எண்ணுகிறவனாக இருக்கிறேனே!' என்பது.

இதுவும் தலைமகன் தனக்குள்ளே சொல்லி வருந்துவது. இது 'நாணேயன்றி நல்லாண்மையும் உடைமையின் முடியாது என்றாட்குச் சொல்லியது' என்று கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது, தோழி தலைமகனைப் பார்த்து, 'நீர் சொல்லும் நாணம் மட்டுமன்றி உமக்கு நல்ல ஆண்மையும் இருக்கிறது. அதனால் உம்மால் மடலேற முடியாது' என்று சொன்னதற்கு விடையாக இது கொள்ளப்பட்டிருக்கிறது. தலைமகளிடத்திலிருந்து வந்த தோழி இவன் மடலேறுவதைப்பற்றி விவாதிக்கவா வந்தாள்?

அடுத்த குறள்:

**காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு**
**நல்லாண்மை என்னும் புணை**

என்பது, இதன் பொருள்: 'நாணமும் நல்லாண்மையும் இந்தக் காமமாகிய, வேகமுள்ள வெள்ளத்தைக் கடந்து கரையேறத் தெப்பமாக உதவுமா?' என்பது. இதன் கருத்து, நாணத்தையும், நல்லாண்மையையும் பொருட்படுத்தினால் இந்தக் காம வேதனையைத் தீர்த்துக் கொள்ள முடியுமா? முடியாது. அதனால் அவற்றைக் கருதாமல் நான் மடலேற வேண்டியதுதான், என்பது. இதுவும் தலைமகன் தன்னுள் சொல்லிக் கொள்வது.

ஆனால், இது 'நாணும் நல்லாண்மையும் காம வெள்ளத் திற்குப் புணையாகலின் அதனால் அவை நீங்குவனவல்ல என்றாட்குச் சொல்லியது' என்று கொள்ளப்பட்டிருக்கிறது. இதில் தலைமகளைப்பற்றி தலைமகனிடம் பேச வந்த தோழி அவனுடன் காமத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் பேசுகிறாள்.

இதற்கடுத்த ஐந்தாம் குறள் முதலிலேயே விளக்கப்பட்டது.

ஆறாவது குறள்:

**மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற**
**படலொல்லா பேதைக்கென் கண்**

என்பது. இதன் பொருள்; 'என் காதலிக்காக ஏங்கி, என்னுடைய கண்கள் உறங்குவதேயில்லை; அதனால் நடுச்சாமத்திலுங்கூட மடலேறுவதைப்பற்றியே எண்ணிக் கொண்டிருக்கிறேன்' என்பது. இதுவும் தலைமகன் தனக்குள்ளே சொல்லிக் கொள்வது.

இது, 'மடலூரும் பொழுது இற்றைக்குக் கழிந்தது என்றாட்குச் சொல்லியது' என்று கூறப்பட்டுள்ளது. அதாவது 'மடல் ஊர்வதாகச் சொல்லுகிறீரே, இப்போது பகற்பொழுது கழிந்து இரவாகிவிட்டதே, இரவில் எப்படி மடலேறுவீர்?' என்று தோழி கேட்பதாகவும், அதற்குத் தலைமகன், 'உன் தலைவியின் மேலுள்ள காம ஆசையால் என் கண்கள் உறங்குவதில்லை. அதனால் மற்றவர்களெல்லாம் உறங்குகிற இந்தச் சாம வேளையிலும் நான் மடலூரவே நினைக்கிறேன்' என்று பதில் சொன்னது போலவும் சொல்லப்படுகின்றது.



இதற்கடுத்த குறள்:

**கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
**பெண்ணிற் பெருந்தக்கது இல்**

என்பது இதன் பொருள், 'சமுத்திரம் போலக் காமம் பெருகி விட்டாலுங் கூடப் பெண்கள் மடலேறுவதில்லை. ஆதலால், அப்படிப்பட்ட பெண்மையைவிடப் பெரிய பொருள் ஒன்று மில்லை' என்பது. இது தலைமகன் பெண்மையை மெச்சித் தனக்குள்ளே சொல்வது. இதை, 'பேதைக்கு என்கண் படல் ஒல்லா என்பதுபற்றி அறிவிலராய மகளிரினும் அஃதுடையராய ஆடவரன்றே ஆற்றற்பாலர் என்றாட்குச் சொல்லியது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது: 'அறிவில்லாத பெண்ணாகிய என் தலைவியின் காரணமாக நீர் மடலேறுவதாகச் சொல்லுகிறீரே, அறிவில்லாத பெண்களைக் காட்டிலும் அறிவுடைய ஆண் பிள்ளையாகிய நீர் காமத்தை அடக்கிப் பொறுத்துக் கொள்ள வேண்டியவராயிற்றே, நீர் மடலேறலாமா?' என்று தோழி கேட்பதாகவும், அதற்கு மறுமொழியாக, 'கடல் போலக் கரையற்ற காமநோயினை அனுபவித்தும் மடலூர்தலைச் செய்யாது ஆற்றியிருக்கும் பெண் பிறப்புப் போல மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்திலில்லை' என்று தலைமகன் சொன்னதாகவும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது.

இதில் தலைமகன் தலைமகளை அறிவில்லாதவள் என்று சொன்னதாகவும், அதைத் தோழி ஒத்துக் கொண்டது போலும் சொல்லிவிட்டுப்பிறகு 'பெண் பிறப்புப் போல மிக்க

தகுதியினையுடைய பிறப்பு உலகத்திலில்லை' என்று காணப் படுவது மிக்க குழப்பம் உண்டாக்குகிறது. தலைமகளுக்காகப் பேசவந்த தோழி பெண்களுக்கும் ஆண்களுக்குமுள்ள அறிவுகளின் தராதரத்தைப் பற்றியா பேச வந்தாள்? தோழி வந்திருந்தால் அவள் தன்னுடைய தலைவிக்குற்ற காம வேதனையைத் தீர்க்கத் தலைமகன் என்ன யோசனை சொல்லு கிறான் என்பதைப்பற்றியல்லவா பேசவேண்டும்?

இதற்கடுத்த மூன்று குறள்களும் தலைமகன் தன் வீட்டிலிருந்து கொண்டு தன்னுடைய நாணம் விட்டுப் போனதைப் பற்றித் தனக்குள்ளே சொல்லிக் கொள்வது. அடுத்த குறள்

**நிறைஅரியர் மன்அனியர் என்னாது காமம்**
**மறையிறந்து மன்று படும்**

என்பது. இதன் கருத்து: 'பெண்கள் காமத்தை அடக்கிக் கொள்ளும் தன்மையில் மிகுந்தவர்கள் என்பதையும் இரக்கப்படத் தகுந்தவர்கள் என்பதையுங்கூட மதிக்காமல் (இதுவரையிலும் என் மனத்துக்குள்ளே அடங்கி) மறைவாக இருந்த காமம் இப்போது என் நாணங் கெடும்படி வெளிப்படவும் ஆகிவிட்டதே,' என்பது. இது தலைமகன் தனக்குள் சொல்லிக் கொள்வது.

பரிமேலழகர் உரையில் இது 'காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே 'தோழிக்குச் சொல்லியது' என்று இல்லை. ஆனால் இவ்வதிகாரத்தின் முன்னுரையில் பரிமேலழகர், 'தலைமகன் தோழிக்குரைத்தலும் தலைமகள் அவளுக்குரைத்தலும்' என்பதால், இதுவும் தலைமகள் தோழிக்குச் சொல்லுவதாக இருக்கலாம். அப்படியானால் இங்கிருப்பதாகக் கொள்ளக்கூடிய தோழி தலைமகனிடம் போய்வந்தவளாக இருக்க வேண்டும். போய்வந்த தோழியானால் அவள் போய்வந்த காரியத்தைப் பற்றி இங்கே ஒன்றுமில்லை! தலைமகனிடம் போய்வராத வேறொரு தோழியாக இருக்கலாம் என்றால் இதுவரை தலைமகனோடு



பேசிக் கேள்விகள் கேட்ட தோழி யார்? அந்தத் தோழி தலை மகனுடைய தோழியாக இருக்கவே முடியாது. ஏனெனில், ஆண் பிள்ளைக்குத் தோழி இருப்பது எங்குமில்லை. திருக்குறளில் இல்லாத தோழியை உரையில் புகுத்தியதால் இத்தனை குழப்பமும் உண்டாவதோடு குறள்களின் சுவையும், பயனும் கெட்டுப் போகின்றன.

இதற்கடுத்த குறளுங்கூட இதே மாதிரி 'காப்புச் சிறைமிக்குக் காமம் பெருகியவழிச் சொல்லியது' என்று சொல்லும் 'இதுவுமது' என்ற குறிப்புடன் உரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கடுத்த கடைசிக் குறள் செவிலியோடும் காணப்படுகிற தோழிக்குச் சொல்லியதாக உரை கூறப்பட்டுள்ளது. அடுத்த இரண்டு குறள்களையும் பார்ப்போம். அடுத்த குறள்:

**அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்**
**மறுகின் மறுகும் மருண்டு**

என்பது. இதன் பொருள்: 'வீட்டில் உள்ளவர்களைத் தவிர வெளியேயுள்ள எல்லாரும் என் நிலைமையை அறியவில்லை யென்றே அவர்கள் அறியும்படி என்னுடைய காமநோய் என்னை வீதிக்குச் சென்று காதலர் வரமாட்டாரா என்று மானம் விட்டு வெறி பிடித்தவளைப் போல் அங்குமிங்கும் பார்த்துத் தவிக்கச் செய்கிறதே என்பது.' இது தலைமகள் தனக்குள் சொல்லிக் கொள்வது.

இதற்கடுத்த கடைசிக் குறள்,

**யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்**
**யாம்பட்ட தாம்படா வாறு**

என்பது. இதன் பொருள், 'நான் படும் துன்பங்களைத் தாம் படாத காரணத்தால் அத் துன்பங்களைப்பற்றிய அறிவில்லாதவர்கள் என்னைப் பார்த்து எனக்குத் தெரியும்படியாக ஏளனமாகச்

சிரிக்கிறார்கள்,' என்பது. இதுவும் தலைமகள் தனக்குத் தானே சொல்லி வருந்துவது.

இது, 'செவிலிக்கு அறத்தொடு நின்றுவைத்து யான் நிற்குமாறென்னை என்று நகையாடிய தோழியொடு புலந்து தன்னுள்ளே சொல்லியது' என்று பரிமேலழகர் உரையில் சொல்லப்படுகிறது. இது சிறிதும் தெளிவில்லாத குழப்பம். இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் பதவுரை சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் இது யார் சொல்வது, யாருக்குச் சொல்வது, எந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வது என்பதைப் புகுத்தியதில் தான் குழப்பமுண்டாகிக் குறளின் நோக்கம் தடுமாறுகின்றது. பதவுரைக்கு விளக்கம் போல் அவர் தருகிற விசேடவுரை இன்னும் குழப்பம் உண்டாக்குகிறது. அந்த விசேட உரையாவது: 'கண்ணின் என்றது முன் கண்டறியாமை உணர நின்றது அறத்தொடு நின்றமை அறியாது வரைவு மாட்சிமைப் படுகின்றிலள் எனப் புலப்படுகின்றாளாகலின், ஏதிலாளாக்கிக் கூறினாள். இது, நகாநின்று சேட்படுக்கும் தோழிக்குத் தலைமகன் கூறியதாங்கால், அதிகாரத்திற்கு ஏலாமை அறிக என்பது விசேடவுரை.

இதில், தோழியானவள் தன்னுடைய தலைவியாகிய தலை மகளை ஏளனம் செய்து சிரிப்பதாகவும், அதற்காகத் தலைமகள் சினங் கொண்டு தனக்குள் இதைச் சொல்லிக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்தத் தோழி தன்னுடைய தலைவிக்குள்ள துன்பங்களைப் போக்கத் தலைமகனிடம் இரகசியமாகத் தூது போய் வரக்கூடிய அனுதாபமுள்ளவள். அப்படியிருக்க இவளே ஏன் தலைமகளைப் பரிகசித்துச் சிரிக்கிறாள்? தன்னுடைய தலைவியைப் பார்த்து மற்றவர்கள் ஏளனமாகச் சிரிப்பதற்கு வருத்தப்பட வேண்டியவள் தோழி. அவளே ஏளனம் செய்வது எப்படிப் பொருந்தும்?

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் பதவுரை: 'யாம் கேட்குமாறுமன்றிக் கண்ணாற் காணுமாறும் எம்மை அறிவிலார்



நகாநின்றார்; அவரங்கனஞ் செய்கின்றது யாமுற்ற நோய்கள் தாமுறாமையான், என்பது. இது மிகவும் சரியான உரையே. இதில் தோழியையும், செவிலியையும் கூட்டிக் கொள்ள இடமெங்கே? கூட்டினாலும் சிரிக்கிறவள் தோழிதான் என்பது எதனால்?

ஆதலால் 'நாணுத்துறவுரைத்தல்' என்ற அதிகாரம் முழுவதும் தலைமகனும் தலைமகளும் அவரவர் வீட்டில் இருந்து கொண்டு தமக்குற்ற காமவேதனையால் தம்முடைய மானம் கெடும்படியாகிவிட்டதைப் பற்றித் தாமே நினைத்து வருந்துதல்.

இதுபோக, இதைவிட அசம்பாவிதமாகத் தோழி நுழைகின்ற இடத்தைப் பார்ப்போம்.

தொழில் முறையாக வெளியூருக்குப் போயிருந்த கணவன் திரும்பி வந்து, மனைவி பிரிவாற்றாமைத் துன்பங்களால் வருந்தி மெலிந்து வாடியிருப்பதைக் கண்டு பச்சாத்தாபப் பட்டுவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டான். வெகு நாளாக அவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மனைவி அவசரப்பட்டு அவனைக் கலவிக்கு அழைத்தாள். அவன் பொறுக்கச் சொல்லிவிட்டான். அதனால் ஏமாற்றமடைந்த மனைவி வருத்தத்தோடு படுக்கையிற் போய்ப்படுத்துக் கொண்டு, கணவன் புணர வந்தால் பிணங்கிக் கொள்ள வேண்டுமென்று தன் மனத்தோடு பேசித் தீர்மானித்துக் கொண்டு படுத்திருக்கிறாள். கணவன் படுக்கைக்கு வந்தான். அவள் புலந்து கொள்ளுகிறாள். அவளுடைய பிணக்கத்தை நீக்க முயல்கின்றான் கணவன். மனைவி பல பொய்க் குற்றங்களைச் சொல்லிப் புணர மறுப்பது போல் பிணங்குகிறாள். அதைச் சித்திரிப்பது, 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரம். அதன் முதற் குறள்:

**பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு.**

இது முன்னாலேயே விளக்கப்பட்டிருக்கிறது. எனினும் இதன் கருத்து, பெண்ணியல்பு உள்ளவர்கள் எல்லாரும் கண்டு ஆசை கொள்ள உம்முடைய மார்பை நான் தழுவிக் கொள்ள மாட்டேன், என்று மனைவி சொல்லுவது.

இதற்கடுத்த குறள்:

**ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை**
**நீடுவாழ் கென்பாக் கறிந்து**

என்பது. இதன் பொருள், ''நாண் பிணங்கிக் கொண்டு அவருடன் பேசாமல் படுத்திருந்தேனா, அப்போது அவர் தும்மினார். எதற்காகத் தும்மினாரென்றால், அவர் தும்மும்போதெல்லாம் நான் அவரை 'உமக்கு நீண்ட ஆயுள்' என்று வாழ்த்துவது வழக்கம், அப்படி இப்போதும் வாழ்த்தி அப்படியாவது அவருடன் பேசுவேனாக்கும் என்று தும்மினார். நான் பேச மாட்டேன்'' என்று மனைவி தனக்குள்ளே எண்ணிக் கொள்வது.

இது, ''தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலை மகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது,'' என்று சொல்லப் பட்டிருக்கிறது.

காதலன் சற்று முன்பு தான் படுக்கைக்கு வந்தான். காதலி பிணங்கியிருப்பதைக் கண்டு அவளைப் பிணக்கம் தீர்த்துப் புணர முயன்றான். அவள், 'எல்லோருங் கண்டு ஆசைப்படுகிற உம்மைத் தழுவமாட்டேன்' என்று இப்போதுதான் புலவி நுணுக்க மான குற்றச்சாட்டுகளைச் சொல்ல ஆரம்பித்திருக்கிறாள். இன்னும் அவள் சொல்ல வேண்டிய குற்றச்சாட்டுகள் பின்னா லிருக்கின்றன. பிணக்கம் இன்னும் நீங்கவில்லை. அவர்கள் இன்னும் புணரவில்லை. காதலன் புணரத் துடிப்பதும் காதலி புணர மறுப்பதுபோல் குற்றங்கள் சொல்வதுமான தருணம். இருவரும் படுக்கையில் படுத்துக் கொண்டு நடிக்கிற காட்சி இது. இங்கே எப்படித் தோழி வரலாம்? இங்கேயே 'தலைமகன் போன பிற்பாடு போன தோழிக்குப் பள்ளியில் நிகழ்ந்தது சொல்லியது' என்பது எப்படி? இன்னும் அவன் படுக்கையை விட்டுப் போகவில்லை! பிணங்கிய மனைவியைப் பிணக்கம் நீங்கிப் புணரத் துடிக்கும் ஆடவன் புணர்ச்சி முடியாமல் போயிருப்பானா? ஆதலால், இங்கே தோழியைப் புகுத்தியது புலவிநுணுக்கத்தின் ரஸனையைக் கெடுத்துவிடுகிறது. இந்தக் குறள் பிணங்கிப் படுத்துக் கொண்டிருக்கும் காதலி தனக்குள்ளே எண்ணிக் கொள்வதே யன்றிப் பிறரிடம் சொல்லுவதல்ல. பிறரிடம் சொல்லுவதாகக் கொண்டு விட்டதால் தோழியைப் புகுத்தவேண்டியதாயிற்று.



இதற்கடுத்த குறள்:

**கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்**
**காட்டிய சூடினீர் என்று.**

இதன் பொருள், 'மலர் மாலையை நான் சூடிக்கொண்டாலும் அதை அவள் பார்த்துவிட்டு, 'அது எனக்கல்ல; வேறு யாரோ ஒருத்திக்கு உங்கள் அழகைக் காட்டிக்கொள்ளச் சூடினீர்' என்று கோபிக்கிறாளே! என்று தும்மின காதலன் தனக்குள்ளே சொல்லுவது இது.

இந்தக் குறளை, 'தலைமகள் புலவிக் குறிப்புகளைக் கண்டு நீவிர் கூடியொழுகா நிற்கவும் இது நிகழ்தற்குக் காரணம் யாது என்ற தோழிக்குத் தலைமகன் சொல்லியது' என்று பரிமேலழகர் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார். இதனால் காதலியானவள் தன் காதலனைப் புணர மறுக்கிறாள் என்பதைக் குறிப்பால் அறிந்த தோழியானவள் தலைமகனைப் பார்த்து, 'நீங்கள் இருவரும் கூடியிருந்தும் ஏன் தலைமகள் உம்மைப் புணர மறுத்து விட்டாள்?' என்று கேட்டதற்குத் தலைமகன் தோழிக்குப் பதில் சொன்னதாக இருக்கிறது. இதற்கு முன்னாலுள்ள 'ஊடியிருந்தேமா' என்ற குறள், தலைமகன் பள்ளியறையை விட்டுப்போன பிற்பாடு பள்ளியறைக்கு வந்த தோழிக்குத் தலைமகள் சொன்னதாகச் சொல்லப்பட்டது. இங்கே அதே தோழி தலைமகனைக் கேட்ட

கேள்விக்கு மறுமொழியாகச் சொல்வதாக இருக்கிறது. பள்ளி யறைக்குள் வந்த தோழிக்குத் தலைமகள், 'பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியதைக்' கேட்ட தோழி உடனே தலைமகனைத் தேடிச் சென்று அவனிடம் 'ஏன் தலைமகள் உம்மைப் புணர மறுத்தாள்?,' என்று கேட்டாளா? இது மிகவும் அசம்பாவிதமாக இருக்கிறது. ஏனென்றால், இந்த அதிகாரத்திலுள்ளது முழுதும் பள்ளியறையில் காதலனும், காதலியும் ஒரே படுக்கையில் இருக்கும் போது நடப்பது. அதைப் பரிமேலழகர் உரையே ஏற்றுக்கொள்ளுகிறது. 'புலவிநுணுக்கம்' என்பதற்கு விளக்கமாகப் பரிமேலழகர் தரும் முன்னுரை பின்வருமாறு:

'அது புலவியது நுணுக்கமென விரியும். அஃதாவது தலைமகனுந் தலைமகளும் ஓரமளிக்கட் கூடியிருந்துழி, அவன் மாட்டுப் புலத்தற் காரணமில்லையாகவுங் காதல் கைம்மிகுதலால் நுண்ணியதோர் காரணமுளதாக வுட்கொண்டு அதனை யவன்மேலேற்றி அவள் புலத்தல். காரணத்தினுணுக்கம் காரியத்தின் மேனின்றது' என்பது.

இது சரியானது. முன்னுரையில் இப்படியிருக்க, முதற்குறளில் காதலி, 'நண்ணேன் பரத்த நின் மார்பு' என்று சொன்னவுடனே, காதலன் பள்ளியறையை விட்டுப் போய் விட்டது போல இரண்டாவது குறளில் 'தலைமகன் நீக்கத்துச் சென்ற தோழிக்குத் தலைமகள் பள்ளியிடத்து நிகழ்ந்தது கூறியது' என்று சொல்வது பொருந்துமா? அப்படியானால், முதற் குறளுக்குப் பிறகு இருவரும் பள்ளியறையை விட்டுப் பிணக்கத் தினால் பிரிந்து வெவ்வேறிடங்களுக்குப் போய்விட்டதாக இருக்க வேண்டும். அதுவும் பொருந்துமா? இருவரும் வெவ்வேறு இடங்களில் இருந்து கொண்டு 'புலவிநுணுக்கம்' ஒரே அமளியில் நடப்பதெப்படி? மேலும், ஒரு பெண்பிள்ளை காதல் மிகுதியால் தான் காதலிக்கும் ஆண்பிள்ளையோடு காம விளையாட்டாகப் பிணங்கிக் கொண்டதைப் பற்றித் தன்னுடைய தோழியோடு பேசலாம். அதுவுங்கூட வெகு அபூர்வமான சந்தர்ப்பத்தில்தான்.



ஆனால் ஒரு தோழிப் பெண் ஓர் ஆண்பிள்ளையிடம் போய், 'உம்முடைய காதலி ஏன் உம்மைப் புணராமல் பிணங்கிக் கொண்டாள்?' என்று கேட்பது தகுமா? காதலனுக்கும், காதலிக்கும் சண்டையா நடக்கிறது, இடையே ஒருவர் சமாதானம் செய்துவைக்க?

ஆதலால், இங்கே ஒரு தோழி குறுக்கிடக்கூடாது. இந்தத் தோழி இதைவிட இன்னும் தகாத இடத்தில் குறுக்கிடுவதைப் பாருங்கள்:

இதற்கு அடுத்த அதிகாரம் 'ஊடலுவகை' என்பது. இந்த அதிகாரத்தில் தான் பிணக்கம் முடிந்து புணர்ச்சி நடக்கிறது. பிணங்கிப் புணர்வதனால் இன்பம் அதிகம் என்பதையும், புணர்ச்சிக்குப் பின் கவனிக்க வேண்டிய சுகாதார விதிகளையும் சொல்லுவது இந்த அதிகாரம். இது முன்னாலேயே விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது இதில் தோழி குறுக்கிடுவதைப் பற்றி மட்டும் ஆராய்வோம். இந்த அதிகாரத்திற்குப் பரிமேலழகர் தரும் முன்னுரை:

'அஃதாவது, அப்பெற்றித்தாய ஊடலால் தமக்குக் கூடலின்பம் சிறந்துழி அச்சிறப்பிற்கேதுவாய அவ்வூடலைத் தலைமகள் உவத்தலும் தலைமகன் உவத்தலுமாம்' என்பது. இதில் இப்போது கவனிக்க வேண்டிய 'ஊடலால் கூடலின்பம் சிறந்துழி' என்பதே. இந்தச் சொற்றொடர் இப்போதுதான் காதலர் புணர்ந் தார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இந்த அதிகாரம் காட்டுவது காதலனும் காதலியும் ஒரே படுக்கையில் படுத்திருக்கும் காட்சி. இதன் முதற் குறள்:

**இல்லை தவறுஅவர்க்கு ஆயினும் ஊடுதல்**
**வல்லது அவர்அளிக்கு மாறு.**

இதன் பொருள், 'காதலருக்கு ஒரு குற்றமும் இல்லை. ஆயினும், நான் இப்படிப் பொய்க்குற்றங்கள் சாட்டுவது

அவருடைய ஆசைக்கு நிகரான எதிராசை காட்டும் வல்லமையுள்ளது' என்பது. இதைக் காதலி தனக்குள்ளே சொல்லிக் கொண்டதாகவோ, அல்லது கவிக்கூற்றாகவோதான் கொள்ள இடமுண்டு. ஆனால் இதற்கு, 'தலைமகன் காரணமின்றிப் புலக்கின்றமை கேட்ட தோழி அங்ஙனம் நீ புலக்கின்றதென்னையென்றாட்குச் சொல்லியது' என்று பரிமேலழகர் உரையில் முன்னுரை சொல்லப்படுகிறது. 'தலைமகள் காரணமின்றிப் புலக்கின்றமை' கேட்ட தோழி என்றால், தோழி யார் சொல்லக் கேட்டாள்? தலைமகன் தோழியிடம் வந்து, 'அவள் காரணமின்றிப் புலக்கின்றாள்; நீ வந்து அவளைப் புலக்காமல் புணரும்படி சொல்லு' என்று சொன்னானா? அல்லது பள்ளியறைக்குள் நடக்கும் பேச்சுக்களைத் தோழி காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தாளா? கேட்டது எப்படியிருந்தாலும் இந்தத் தோழி படுக்கையறைக்குள் வந்து, 'நீ ஏன் காரணமில்லாமல் புணர மறுக்கிறாய்?' என்று கேட்கலாமா? இதற்கு அடுத்த குறள்.

**ஊடலில் தோன்றும் சிறுதுனி நல்லளி**
**வாடினும் பாடு பெறும்.**

இதன் பொருள், 'பிணங்கிப் புணராதிருக்கும் வரையிலும் ஏற்படுகிற சிறு காமத் துன்பத்தால் பிரியம் வாட்டமுற்றாலும் பின்னால் (புணரும்போது) அதனால் அதிகமான இன்பம் உண்டு' என்பது. இதைத் தலைமகள் தனக்குள் சொல்லிக் கொள்வதாகவோ அல்லதுக் கவிக்கூற்றாகவோ தான் கொள்ள வேண்டும். ஆனால் இதற்கு, 'புலவாக்காலும் அததலையளி பெறலாயிருக்க, அஃதிழந்து புலவியான் வருந்துவதென்னையன்றாட்கு அவள் சொல்லியது' என்று உரை கூறப்படுகிறது. அதனால் சமாதானம் செய்ய வந்த தோழி, 'நீ பிணங்காமலேயே உன் காதலருடைய அன்பை அடையலாமே; அதை விட்டுவிட்டு இப்படிப் பிணங்கி வருந்துவானேன்?' என்று கேட்டதற்குத்தலைமகள் இந்தப் பதில் சொன்னதாக இருக்கிறது. முன் சொன்ன குற்றம் இதற்கும் பொருந்தும். இதற்கடுத்த குறள்:



**புலத்தலிற் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு**
**நீர்இயைந் தன்னார் அகத்து.**

இதன் பொருள், 'நிலவளமும் நீர்வளமும் சேர்ந்தது போன்ற மனமொத்த காதற்கிடையில், பிணங்கியிருந்து புணரும் போது உண்டாவது போன்ற இன்பம் தேவலோகத்திலுங்கூட இருக்காது' என்பது. இதையும் காதலி தனக்குள் சொல்லி மகிழ்வதாகக் கொள்வது தான் நல்லது. ஆனால் இதையும் தலைமகள், 'நீ ஏன் காரணமில்லாமல் புணராது பிணங்குகிறாய்?' என்று கேட்ட தோழிக்குச் சொல்லுவதாகப் பரிமேலழகர் உரை காட்டுகின்றது. இப்படிப் பள்ளியறைக்குள் வந்த தோழி வேறொரு கேள்வி போட்டு மறுமொழி வாங்கியதாக அடுத்த குறளுக்குள்ள முன்னுரை கூட்டுகிறது. அடுத்த குறள்;

**புல்லி விடாஅப் புலவியுள் தோன்றும்என்**
**உள்ளம் உடைக்கும் படை.**

இதன் பொருள், 'புணர்ந்து காம வேதனையைத் தீர்த்து விடாத வெறும் பிணக்கத்தினால் தான் என் நெஞ்சு பிளந்துவிடும் படியான துன்பம் இருந்தது. இப்போது தீர்ந்துவிட்டது' என்று காதலி தனக்குள் மகிழ்கிறாள். இதையும் காதலியின் கருத்தாகப் பொருள் கொள்ள வேண்டும். ஆனால் இது, 'அப்புலவி இனியாதான் நீங்கும் என்றாட்குச் சொல்லியது' என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது, தோழியானவள், 'இப்படிப் பிணங்கிக் கொண்டிருக்கிறாயே; இந்தப் பிணக்கம் எப்படித்தான் நீங்குவது?' என்று கேட்டதற்குத் தலைமகள் சொன்ன பதிலாக இது சொல்லப் பட்டிருக்கிறது. இதுவும் முன் சொன்ன குற்றமுள்ளது.

இப்படித் தோழியை இங்கே புகுத்தியதால், காதலி காதலனுடன் புலவியின்பத்தைக் கருதிப் பிணங்கிக் கொண்டால் அதைத் தீர்த்துக் கலவி நடக்கச் செய்ய ஒரு தோழி படுக்கையறையில் இருப்பது தமிழ் நாட்டின் வழக்கம் போல் எண்ணி விட நேருகிறது.

# பாங்கன், தோழி

தலைமகளுக்குத் தோழியைக் கூட்டியது போலத் தலைமகனுக்குப் பாங்கனைக் கூட்டப்பட்டிருக்கிறது. அதுவும் திருவள்ளுவர் எண்ணாதது. அதனாலும் காமத்துப் பாலின் நோக்கமும், ரஸனையும் கெடுகின்றன. 'புணர்ச்சி மகிழ்தல்' என்பது களவியல் பகுதியில் மூன்றாவது அதிகாரம். ஒரு பெண்ணை ஏகாந்தத்தில் சந்திக்க நேர்ந்த வாலிபன் அவள் மீது காமங் கொண்டான். அவளும் இவன் மீது காமங்கொண்டாள். இருவரும் மனமொத்துக் களவாகப் புணர்ந்து பிரிந்துவிட்டார்கள். இருவருக்கும் இதுதான் முதன்முதலாக அனுபவித்த காம இன்பம். பெண் தன் பெண்ணியல்புக்கேற்பத் தான் அனுபவித்த காம இன்பத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் தன் வீட்டில் இருக்கிறாள். ஆனால் இந்த வாலிபன், தான் முதல் தடவை அனுபவித்த பெண்ணின்பத்தில் இதுவரைக்கும், உலகத்தில் காணாத இன்பத்தைக் கண்டுவிட்டதாக அந்தப் புணர்ச்சியை பல விதமாகப் புகழ்ந்து தனக்குள் மகிழ்ச்சி அடைந்து கொள்ளுகிறான். அப்படி அவன் சொல்லிக் கொள்வதைச் சித்திரிப்பது இந்த அதிகாரம். இதன் முதற் குறள்:

**கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள.**

இதன் பொருள், 'அவளுடைய அழகு கண்ணுக்கு இன்பந் தர, அவளுடைய பேச்சானது காதுக்கு இன்பந்தர, அவளுடைய உடல் மணம் மூக்குக்கு இன்பந் தர, அவளுடைய அதரபானம் நாக்குக்கு இன்பந் தர, அவளுடைய புணர்ச்சி உடலுக்கு இன்பந் தர இப்படியாக என ஐந்து புலன்களுக்கும் ஏக காலத்தில் இன்பம் கிடைத்தது அப்பெண்ணிடத்தால்தான்' என்பது. இது தலைமகன்



சொல்லுவது. பரிமேலழகரும் இதைத் தலைமகன் வேறு யாருக்கும் சொல்லியதாகச் சொல்லவில்லை. ஆனால் பின்னால் வரும் சில குறள்களில் பாங்கனையும் தோழியையும் புகுத்து கிறார். இந்த அதிகாரத்திலுள்ள எல்லாக் குறள்களும் தலைமகன் வேறு யாருடைய குறுக்கீடும் இல்லாமல் தானே சொல்லி மகிழ்ச்சி யடைவது. இதற்கடுத்த குறள்:

**பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை**
**தன்னோய்க்குத் தானே மருந்து.**

இதன் கருத்து, 'மற்ற நோய்களுக்கு அந்தந்த நோயை உண்டாக்கிய காரணங்களுக்கு நேர்மாறான வேறு மருந்துகளைக் கொடுத்தால் தான் தீரும். ஆனால், பெண்ணால் உண்டான காம நோய்க்கு மட்டும் அவளே தான் மருந்து. அவள் தான் அதைத் தீர்க்க முடியும்' என்பதை அறிந்து கொண்டதாகத் தலைமகன் தானே மகிழ்கிறான்.

இங்கும் பாங்கனோ தோழியோ குறுக்கிடுவதில்லை. இதற்கடுத்த குறள்;

**தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு.**

இதன் கருத்து. 'தாம் காதலிக்கின்ற பெண்ணின் மிருதுவான தோள்களைத் தழுவிக்கொண்டு படுத்திருப்பதைவிடத் திருமால் உலகமாகிய வைகுந்தம் அதிக இன்பந் தரக்கூடியதா?' என்பது. இதன் நுணுக்கம் என்னவென்றால், வைணவ சித்தாந்தத்தில் ஜீவான்மா வைகுந்தத்திற்குச் சென்று பரமாத்மாவின் சொரூபத்தைத் தழுவிக்கொண்டிருப்பதுதான் பேரின்பம் என்ற ஒரு கருத்துண்டு. அதையொட்டியதே 'ஆலிங்கன சம்பிரதாயம்' என்ற வைணவ வழக்கம். தான் புதிதாக, முதன் முதல் அனுபவித்த காம இன்பத்தை இந்தத் தலைமகன் அளவு கடந்து புகழ்ந்து மகிழ்வதாக, 'நான் புணர்ந்த பெண்ணை ஆலிங்கனம் செய்து

கொண்டு அனுபவித்த இன்பத்தை விடவா திருமாலை ஆலிங்கனம் செய்துகொள்ளும் இன்பம் அதிகமாக இருக்க முடியும்?' என்று சொல்லிக் கொள்ளுகிறான். இது, காம ஆசை எப்படியெல்லாம் நினைக்கச் செய்கிறது என்பதைக் காட்டுவதற்கு மட்டும் சொல்லப்பட்டது.

காமத்தை இகழ்ந்து பேசும் வேதாந்தத் துறவு மனப் பான்மையுடன் இதை ஆராய்ந்துவிடக் கூடாது. 'காமம்' என்ற விஷயத்துக்கு இயல்பாக உள்ள எல்லைக்குள் இப்படிப் பெண்ணின்பத்தைச் சிறப்பித்துப் பேசியது குற்றமல்ல. இந்தக் குறள் தலைமகன் தனியேயிருந்து காம இன்பத்தைப் புகழ்ந்து தன்னுள் மகிழ்ச்சி அடைவதே.

ஆனால் பரிமேலழகர் உரையில் இது, 'நிரதிசய இன்பத் துக்கு உரிய நீ இச்சிற்றின்பத்தை இன்னையாதல் தகாது என்ற பாங்கற்குச் சொல்லியது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. காமத்தை இகழ்ந்து பேசும் வேதாந்த மனப்பான்மையுடன் இந்தக் குறளுக்குப் பொருள் காணப் புகுந்ததால் இங்கே ஒரு பாங்கனைக் கூட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று. இதற்கடுத்த குறள்:

**நீங்கிற் றெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்**
**தீயாண்டுப் பெற்றாள் இவள்.**

இதன் பொருள், 'பிரிந்து விலகினால் சுடுகிறது. நெருங்கித் தொட்டால் சில்லென்று குளிர்ச்சி தருகிறது. இப்படிப்பட்ட நெருப்பு இவளுக்கு எங்கே கிடைத்தது?' என்பது. இதன் கருத்து, 'சாதாரண நெருப்பானது தொட்டால் சுடும்; விட்டால் சுடாது. ஆனால் இந்தக் காம நெருப்பு அவளைத் தொட்டால் குளிர்ச்சி யாக இருக்கிறது; அவளை விட்டு விலகினால் சுடுகிறதே! மேலும், சாதாரண நெருப்பு, அதை விட்டு எவ்வளவுக்கெவ்வளவு தூரம் போகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு குளிர்ச்சியாக இருக்கும்; எவ்வளவுக்கெவ்வளவு நெருங்குகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சுடும். ஆனால் இவளிடத்தில் இருக்கிற நெருப்பு



எவ்வளவுக்கெவ்வளவு தூரம் போகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு சூட்டுக் கொதிப்புண்டாக்குகிறது; எவ்வளவுக் கெவ்வளவு நெருங்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு குளிர்ச்சி தருகிறது! இது மிகவும் அதிசயமான நெருப்பாக இருக்கிறதே! இந்த நெருப்பு இவளுக்கு எங்கே கிடைக்கிறது!' என்பது. இது தலைமகன் தனக்குள்ளே சொல்லி வியந்து மகிழ்வது. இது அவன் வேறு யாருக்கும் சொல்வதல்ல.

இது 'பாங்கன் கூட்டத் திறுதிக்கண் சொல்லியது' என்று உரையில் காணப்படுகிறது. இங்கே பாங்கனைப் புகுத்த நியாயமில்லை.

இதற்கடுத்த குறள்;

**வேட்ட பொழுதின் அவையவை போலுமே**
**தோட்டார் கதுப்பினாள் தோள்.**

இதன் பொருள், 'மலரின் இதழைப் போன்ற அருமையான மணமும், மென்மையுமுள்ள கன்னங்களையுடைய அந்தப் பெண்ணின் மேனி, நான் மனத்தில் எதெதை நினைத்து அவளுடைய அங்கங்களைச் சுவைக்கின்றேனோ அது போலவே எனக்கு இன்பமளித்தது' என்பது. இதன் விளக்கம், 'இந்தப் பெண்ணினுடைய கண்ணை நான் நீலோற்பலம் என்று எண்ணினால் நீலோற்பலமாகவே இன்பம் அளிக்கிறது. இவளுடைய முகத்தைச் சந்திரனென்று எண்ணினால் சந்திரன் போலவே இருக்கிறது. கன்னத்தை மாம்பழமென்று சுவைத்தால் மாம்பழமாகவே இருக்கிறது. உதட்டைக் கற்கண்டு என்று சுவைத்தால் கற்கண்டாகவே இருக்கிறது. இப்படி எந்த அங்கத்தை ஏதாக விரும்பினாலும் அது அதுவாகவே இருக்கிறது' என்பது. இதுவும் தலைமகன் தனக்குள் நினைத்து மகிழ்வது. இது 'தோழியிற் கூட்டத் திறுதிக்கட் சொல்லியது' என்று பரிமேலழகர் உரையில் சொல்லப்படுகிறது. இங்கே தோழி எப்படி வந்தாள்? ஆண்பிள்ளைக்குத் துணையாக ஒரு பாங்கன் இருந்தான்

ஆகாரமில்லாமல் பல நாள் உடலையும் உலகையும் முற்றிலும் மறந்திருப்பது போலவே, உணவையும், உடலையும் மற்றவைகளையும் முற்றிலும் மறந்தவனாகக் காதலன் காதலியைத் தழுவிய வண்ணமே நெடுநேரம் முயங்கிக் கிடப்பதைச் சொல்லுவது இந்தக் குறள். அதனால் இந்தக் குறளின் பொருள், 'அம்மா! என்ன ஆச்சரியம்! நான் என் காதலியைத் தழுவிய வண்ணமே மெய்ம்மறந்து நெடுநேரம் பசியின்றியும் படுத்திருந்து யோகியர்கள் தம்மிலிருந்தே உணவு கொண்டு பல நாள் உலகை மறந்து நிட்டையில் இருக்குமாறு போலவே இருக்கிறதே' என்பது.

தமிழறிஞர்களுக்கு இந்த உரை ஒரு திடுக்கிடக் கூடிய புதுமையாகத் தோன்றலாம். பரிமேலழகர் உரைக்குக் குறை சொல்லவென்று குதர்க்கமாகச் சொல்லப்படுவதாகச் சிலர் கோபங் கொண்டாலும் கொள்ளலாம். ஆனால் இந்தக் குறளுக்கு முன்னாலுள்ள குறள்களை நிதானமாக ஆராய்ந்து, இந்தக் குறளிலுள்ள 'அம்மா' என்ற பதத்தின் நோக்கத்தையும், 'தம்மிலிருந்து' என்ற பதத்தைத் 'தம் இல்லிருந்து' என்று பிரித்துப் பொருள் கொள்வது விசேடமா அல்லது 'தம்மில் இருந்து' என்று கொண்டு பொருள் செய்வது விசேடமா என்பதையும் விருப்பு வெறுப்பில்லாமல் அமைதியுடன் ஆராய்ந்தால், கோபம் தணிந்துவிடும். அதனுடன் பரிமேலழகர் இந்தக் குறள் யாருக்கு, எதற்காகச் சொல்லியது என்பதைப்பற்றித் தருகின்ற முன்னுரையையும் இந்தக் குறளுக்கு அவர் தருகின்ற விசேட உரை விளக்கத்தையும் கவனித்துத் தீர்ப்புக் கொள்ள வேண்டும்.

இந்தக் குறள், 'இவளை நீ வரைந்துகொண்டு உலகோர் தம்மிலிருந்து தமது பாத்துண்ணும் இல்லறத்தோடு படல்வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது' என்று முன்னுரையில் இருக்கிறது. இந்தக் குறளின் பதவுரைக்கு விளக்கமாகப் பரிமேலழகர் தரும் பின்னுரையில், 'இல்லறஞ் செய்தார் எய்தும் துறக்கத்தின்பம் எனக்கு இப்புணர்ச்சியே தரும் என வரைவு உடன்படான் கூறிய வாறாயிற்று' என்று சொல்லப்பட்டிருக்கிறது.



இந்த முன்னுரையையும் பின்னுரையையும் கூட்டிப் பார்த்தால் தோழியானவள் இவனிடத்தில், ''நீ இவளைக் கலியாணம் செய்துகொண்டு உலகத்தார் தம் வீட்டிலிருந்து தம்முடைய பங்கை உண்ணுகின்ற இல்லறத்தை நடத்த வேண்டும்'' என்று சொன்னதற்கு இவன்; ''இல்லறம் செய்கின்றவர்கள் அடையும் மோட்சத்தை எனக்கு இந்தப் புணர்ச்சியே தரும்; ஆனதால், நான் அவளைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று சொல்வதுதான் இந்தக் குறள் என்பது பொருளாகின்றது. 'கலியாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்து கிறவர்கள் அடையக்கூடிய மோட்சத்தை இந்தப் புணர்ச்சியே தரும்; கலியாணம் வேண்டாம்' என்பதில், 'இப்போது நான் அவளைப் புணர்ந்ததே போதும்; இனிமேல் புணர வேண்டிய தில்லை' என்று சொல்லுகிறானா? அல்லது, 'கலியாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்த வேண்டிய அவசியமில்லை. இப்போது புணர்ந்தது போல் களவாகப் புணர்ந்து கொண்டிருப்பதே எனக்கு மோட்சத்தைத் தரும்' என்று சொல்லுகிறானா? இந்த இரண்டும் பொருத்தமற்றவை; மேலும், குற்றமுள்ளவை. இந்தப் புணர்ச்சியே போதும் என்று இவன் எண்ணுவான் என்பது இயல முடியாதது. ஏனெனில், இவன் இப்போது தான் பெண்ணின்பத்தை முதன் முதலாக ருசி கண்டு அதைப் புகழ்ந்து மகிழ்ந்து கொண் டிருப்பவன். மற்றும், 'அவளைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டேன். களவாகவே புணர்ந்து கொண்டிருப்பேன்' என்பதானால், அப்படி ஓர் ஆணும் பெண்ணும் பெற்றோருக்குத் தெரியாமல் எப்போதும் களவாகவே புணர்ந்து கொண் டிருப்பதைக் காட்டுமிராண்டிகளின் வழக்கத்திலும் காண முடியாது. அப்படியிருக்க இம்மைக்கும் மறுமைக்கும் இன்றியமை யாதனவாகிய நல்லறிவைச் சொல்லுகின்ற திருக்குறளில் காணப் படும் நாகரிக சமுதாயம் அதை அனுமதிக்குமா?

இங்கே தலைமகனுக்கு ஒரு தோழியைத் துணையாக்கி, அவள் தலைமகன் களவாகப் புணர்ந்த பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்த வேண்டுமென்று அறிவு

சொல்லுவது போலவும், அவன் கலியாணம் செய்துகொண்டு இல்லறம் நடத்த இணங்காதது போலவும் காட்டுவது சரியல்ல. அப்படிச் செய்வது திருவள்ளுவரது 'காமத்துப்பா'லின் சிறப்பமும் சித்திரமும் நிறைந்த கட்டுக்கோப்பைக் கலைத்துவிடுகிறது. ஆதலால், தோழியையோ பாங்கனையோ புகுத்தி அவர்களைப் பேசவோ நடிக்கவோ செய்யத் திருக்குறள் காமத்துப்பாலில் இடமில்லை.

# பதப் பிரயோகம்

திருவள்ளுவர் கையாண்டிருக்கும் சொல்லாட்சி மிகவும் நயமும் நுணுக்கமும் உள்ளது. ஒரே பதத்தை வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பொருள் கொடுக்கும்படி பிரயோகித்திருக்கிறார். இடத்துக்கேற்றபடி பொருள் கொள்ளவேண்டும். அவர் ஒரே சொல்லுக்குள்ள வேறு வேறு பொருள்களை எண்ணியே அச் சொல்லை அமைத்திருக்கிறார்: ஆனால் உரைகளில் இந்த வேற்றுமைகளை விளக்காமல் பொருள் சொல்லுவதால், குறள்களின் பயன் குறைந்தும் மறைந்தும் போய்விடுகின்றது. இதற்குச் சில உதாரணங்களைப் பார்ப்போம்.

'ஊடுதல்' என்ற சொல்லுக்குப் 'பிணங்குதல்' என்றும், 'பிரிந்துவிடுதல்' என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. காமத்துப் பாலில் இந்த இரண்டு பொருள்களையும் அமைத்திருக்கிறார். ஆனால் உரைகளில் 'ஊடுதல்' என்பது 'பிணங்கிக் கொள்வது' என்ற ஒரே பொருள்தான் உள்ளதுபோலச் சொல்லப்படுகிறது. அதனால் திருவள்ளுவர் கருதிய பயன் மறைந்துவிடுகிறது. 'புலவி' என்ற அதிகாரத்தில் முன்னே விளக்கப்பட்ட 'அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப் புலந்தாரைப் புல்லாவிடல்' என்ற குறளுக்கு அடுத்த குறள்:

**ஊடி யவரை உணராமை வாடிய**
**வள்ளி முதலரிந் தற்று**

என்பது. இதிலும் பரிமேலழகர், தலைமகன் பரத்தையர் வீட்டிலிருந்து வந்ததாக இதற்கு முன்னுள்ள குறளில் சொன்ன குற்றச் சாட்டைத் தொடர்ந்தே பொருள் செய்திருக்கிறார். அந்த உரையிலுள்ள பிழையைச் சொல்லுவதற்காக இந்தக் குறள்

இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டதல்ல. எனினும், இதைப் படிப்பவர்கள் முன் சொன்ன குற்றச் சாட்டை இந்தக் குறளில் தொடர்ந்திருக்கிற மாதிரி எப்படியென்பதை அறிய ஆசை கொள்வார்கள் என்பதற்காக, அதையும் இங்கே ஆராய்வது பயனுடைத்தாகும். (இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் பதவுரை பின்வருமாறு: 'நும்மோடு ஊடிய பரத்தையரை ஊடலுணர்த்திக் கூடாது ஒழிதல், பண்டே நீர்பெறாது வாடிய கொடியை அடியிலே அறுத்தாற் போலும்'. இது பதவுரை.

இதற்கு விளக்கம், 'நீர் பரத்தையரிடத்திராயவழி எம் புதல்வரைக் கண்டு ஆற்றியிருக்கற் பாலராய யாம் நும்மோடு ஊடுதற்கு உரியம் அல்லம். அன்மையின் எம்மை உணர்த்தல் வேண்டா; உரியராய் ஊடிய பரத்தையரையே உணர்த்தல் வேண்டுவது; அதனால் ஆண்டுச் சென்மின்' என்பதாம். இது விளக்கம். எளிய நடையில் இது என்னவென்றால், 'நீர் வேசியர் வீட்டுக்குப் போய்விடுவதால் மக்களைப் பார்த்துக்கொண்டு துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியவளாகிய நான் உம்மோடு பிணங்குவதற்கு உரிமையில்லாதவள். ஆதலால் என்னுடைய பிணக்கத்தை நீர் நீக்க வேண்டியதில்லை. உம்மோடு பிணங்குவதற்கு உரிமைக்காரியான வேசியினுடைய பிணக்கத்தைத்தான் நீர் நீக்கிப் புணர வேண்டும். அதனால் அங்கே போங்கள்' என்பது.

இது மிகவும் விபரீதமான உரை. அந்த விபரீதம் என்னவென்றால், இந்தக் குறள் வரையிலும் கணவனைப் பிரிந்து காமவேதனையால் துடித்துக்கொண்டிருந்த இளம் பெண்ணாக இருந்த தலைமகள் இங்கே திடீரென்று பிள்ளைகுட்டிக்காரியாகிய தாய் ஆகிவிட்டாள். அப்படியானால் இவள் கணவன் வராத இத்தனை நாளும் தன்னுடைய குழந்தைகளோடு கொஞ்சிக் கொண்டும் அவர்களுடைய வளர்ப்பில் கவனம் செலுத்திக் கொண்டும் இருக்க வேண்டிய தாய்மை உள்ளத்தால் அதிகம் காம வேதனை இல்லாமல் இருந்திருக்கலாமே! இவள் புதல்வர்களைப்



பெற்றவளாக இருந்தால், இந்தப் 'புலவி' என்ற அதிகாரத்துக்கு முன்னுள்ள பதினைந்து அதிகாரங்களையும் திருவள்ளுவர் எழுதியிருக்கவே வேண்டாமே! இந்த விபரீத உரையினால் நாம் அறியக்கூடியது என்னவென்றால், 'கலியாணம் செய்துகொண்டு மனைவி மக்களோடு இல்லறம் நடத்துகின்ற ஓர் ஆண்மகனும், மனைவி மக்களை விட்டுவிட்டுப் பலநாள் பரத்தையின் வீட்டிலேயே வாசம் செய்துவிட்டு வருவதை வெகு சாதாரண காரியமாகத்தான் பரிமேலழகர் கருதுகிறார்' என்பதே. ஆனால் திருவள்ளுவர் அப்படிக் கருதியிருப்பாரா?

இந்த உரையினால் தெரியக் கிடைக்கின்ற இன்னொரு தவறு என்னவென்றால், பரிமேலழகர் சொல்லுகின்ற தலைமகனும் தலைமகளும் ஒரே ஆணும் ஒரே பெண்ணும் அல்லவென்பதே. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ஜோடிகளைக் கூட்டிப் பொருள் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. ஆனால் வள்ளுவர் சொல்லுவது, ஒருவரையொருவர் அகஸ்மாத்தாக ஏகாந்தமான ஓர் இடத்தில் சந்திக்க நேர்ந்து, காமங் கொண்டு களவாகப் புணர்ந்து பிரிந்து, காதல் முதிர்ந்து, கலியாணம் செய்து கொண்டு இல்லறம் தொடங்கும் இளந்தம்பதிகளான ஒரே ஒரு ஜோடியைப் பற்றித்தான். 'கற்பியல்' முழுவதும், கலியாணம் செய்து கொண்டவுடனே இளங் காதலர்கள் காம இன்பத்தை ஆரம்ப ஆவேசத்துடன் அனுபவிக்கும் இயல்பைக் காட்டுவதே. இதனை ஆங்கிலத்தில் 'ஹனிமூன்' என்று சொல்லப்படுகிற பருவத்துக்கு ஒப்பிடலாம். ஆதலால், திருக்குறள் காமத்துப்பாலிலுள்ள தலை மகள் அந்தக் காமத்துப்பால் முடிகிற வரையிலும் குழந்தை பெற வில்லை.

இனி, எடுத்துக்கொண்ட விஷயத்துக்குப் போவோம்: ('ஊடி யவரை உணராமை வாடிய வள்ளி முதலரிந் தற்று' என்னும் குறளிலுள்ள 'ஊடிய' என்பதற்குப் 'பிணங்கிக்கொண்ட' என்பது பொருள். பரிமேலழகரும் அந்தப் பதத்திற்கு இந்தப் பொருள்தான் இதில் சொல்லியிருக்கிறார். இது நிற்க. 'ஊடுதல்' என்பதற்குப்

'பிரிந்து விடுதல்' என்ற பொருள் கொள்ள வேண்டுமென்று அதைப் பிரயோகம் செய்திருப்பதைப் பார்ப்போம்:

'ஊடலுவகை' என்னும் அதிகாரம், புணர்ச்சிக்குப் பின் காதலன் காதலியின் முயக்கத்தை விட்டுப் பிரிந்துவிட வேண்டும் என்பதையும், எவ்வளவு காலம் பிரிந்திருக்கிறானோ அவ்வளவுக்கு நன்மை என்பதையும் சொல்லுவது. இது முன்னாலேயே விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது சொல்ல வேண்டியது என்னவெனில் 'ஊடுதல்' என்பதற்குப் பரிமேலழகர் 'பிரிந்துவிடல்' என்ற பொருள் தராமல், எல்லா இடங்களிலும் 'பிணங்குதல்' என்ற பொருளையே குறித்திருப்பது குறள்களின் பயனைக் குறைத்துவிடுகிறது என்பதே. 'உணலினும் உண்டது அறல் இனிது காமம் புணர்தலின் ஊடல் இனிது' என்ற குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரையில் பிரிந்திருந்து புணர்வது நல்லது என்றுதான் சொல்லுகிறார். ஆனால் அப்படிப் பிரிந்திருப்பது, காதலி பிணங்கிக் கொள்வதனால் கிடைக்கக் கூடிய நன்மை யென்று சொல்லுகிறாரே தவிர, காதலன் புணர்ச்சிக்குப் பின் முயக்கத்தினின்று பிரிந்துவிட வேண்டும் என்ற பொருளில் சொல்லவில்லை. அந்த உரை பின்வருமாறு:

**உணலினும் உண்டது அறல்இனிது காமம்**
**புணர்தலின் ஊடல் இனிது.**

இதற்குப் பரிமேலழகர் தரும் பதவுரை, 'உயிர்க்கு மேலுண்பதனினும் முன்னுண்டது அறுதல் இன்பந் தரும்; அதுபோலக் காமத்திற்கு மேற்புணர்தலினும் முன்னைத் தவறு பற்றி ஊடுதல் இன்பந் தரும்' என்பது. இதில், 'முன்னைத் தவறு பற்றி 'ஊடுதல்' என்பது 'முன்போலவே குற்றச்சாட்டுக்களைச் சொல்லித் தலைமகள் பிணங்கிக்கொள்வது' என்பதைத்தான் சொல்லுகிறது. (இந்த அதிகாரத்தில், இதற்குப் பின்வரும் குறள்களிலும் 'ஊடுதல்' என்பதற்குப் 'பிணங்குதல்' என்றே கொண்டுவிட்டதால் உரைகளும் வேறுபட்டு விட்டன.)



(இன்னும் ஓர் உதாரணம்: 'புலத்தல்' என்ற சொல்லுக்கு, 'வருத்தத்தைக் காட்டிக்கொள்ளப் பேசாமலிருப்பது' என்பது ஓர் அர்த்தம். மற்றோர் அர்த்தம்: 'காதலி காதலனைப் புணர மறுப்பது.)

**உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றுஎன்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்**

என்ற குறள் 'புலவி நுணுக்கம்' என்ற அதிகாரத்திலுள்ளது.

இதன் கருத்து, ''நான் என் காதலியிடத்தில், 'வெளியூரில் இருந்தபோது உன்னை நினைத்தேன்' என்று சொன்னேன். அதற்கு அவள், 'என்னை மறந்து போயிருந்துதானே நினைத்திருக்கிறீர்? ஏன் மறந்தீர்? அதனால் உம்மைப் புணரமாட்டேன்' என்று பிணங்கிக் கொண்டாள்'' என்பது. (இங்கே 'புலத்தக்கனள்' என்பதிலுள்ள 'புலத்தல்' என்பதற்குக் 'கலவிக்கு இணங்க மறுப்பது' என்பதுதான் அர்த்தம். ஆனால் 'அவர் வயின் விதும்பல்' என்ற அதிகாரத்திலுள்ள

**புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்**
**கண்அன்ன கேளிர் வரின்**

என்ற குறளிலுள்ள 'புலப்பேன்கொல்' என்ற புலத்தலுக்கும் 'கலவிக்கு இணங்க மறுப்பேனா' என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏனெனில், முன் சொன்ன குறள் காதலனும் காதலியும் வீட்டில் ஒரே அமளியில் கலவிக்கென்றே படுத்திருக்கும் சூழ் நிலையில் சொல்லப்பட்டது. ஆனால் இந்தக் குறள் இன்னும் வெளியூரிலிருந்து திரும்பி வராதிருக்கும் காதலன் வீட்டுக்கு வந்தவுடன் அவனோடு எப்படி நடந்துகொள்வது என்பதைப் பற்றிக் காதலி சிந்திக்கிற சூழ்நிலையில் அமைந்துள்ளது.

இதன் கருத்து, 'என் கண்ணான கணவர் வந்தவுடன், அவர் இத்துணை நாளும் என்னைப் பிரிந்திருந்து எனக்கு வேதனை

உண்டாக்கிவிட்டதற்காக வருத்தம் காட்ட அவருடன் பேசாமல் பிணங்கிக்கொள்வேனா? அல்லது அவரைக் கண்டவுடன் ஓடிப் போய் அவரைத் தழுவிக்கொள்வேனா? அல்லது இந்த இரண்டும் கலந்து தடுமாறுவேனா?' என்பது.

இதைப்போலவே 'புல்லுதல்' என்ற பதத்திற்குப் 'புணர்தல்' என்றும் 'தழுவுதல்' என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. 'புணர்தல்' என்பது கலவி செய்தலைக் குறிப்பது. 'தழுவுதல்' என்பது வெறும் ஆலிங்கனத்தை மட்டும் குறிப்பது. மேலே சொன்ன இரண்டு குறள்களிலும் உள்ள 'புல்லுதல்' என்ற பதங்களுக்கும் வெவ்வேறு பொருள் கொள்ளவேண்டும். முதற் குறளிலுள்ள 'புல்லாள் புலத்தக்கனள்' என்பதற்குப் 'புணர மறுத்துப் பிணங்கிக்கொண்டாள்' என்பது பொருள். இரண்டாவது குறளிலுள்ள 'புல்லுவேன் கொல்லோ' என்பதற்கு ஆலிங்கனம் செய்துகொள்ளுவேனோ' என்பது பொருள். இப்படியே இடத்துக் கேற்றபடி பொருள் கொள்ளவேண்டும்.

காமத்துப்பாலில் மட்டுமல்ல; பொருட்பாலிலும் ஒரே சொல்லை வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு பொருளில் அமைத்திருக்கிறார் வள்ளுவர். அதிலும் இரண்டோர் உதாரணங்களை இங்கே எடுத்துக் காட்டுவது நல்லது:

'காண்டல்' என்ற பதத்திற்குப் 'பார்த்தல்', 'உண்டாகுதல்', 'செய்தல்', அறிந்துகொள்ளல்' என்ற பல அர்த்தங்கள் உண்டு. திருவள்ளுவர் இந்த நான்கு அர்த்தங்களிலும் இந்தச் சொல்லை வெவ்வேறிடங்களில் பிரயோகித்திருக்கிறார். ஆனால் உரைகளில் அந்த மாற்றுப்பொருளைக் கருதாமல் பெரும்பான்மையான இடங்களில் 'காண்டல்' என்பதற்குக் 'கண்ணால் பார்த்தல்' என்ற பொருளே சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் திருவள்ளுவர் கருதிய பொருள் காணாமற் போகிறது. 'இரவு' என்ற அதிகாரம், பிச்சை எடுக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையிலுள்ளவர் களைப்பற்றிச் சொல்லுவது. அதில்,



**கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்**

என்ற குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை, 'உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக் கண்டால் மானம் விடாதிரப்பார்க்கு நிரப்பான் வருந் துன்பங்களெல்லாம் சேரக் கெடும்' என்பது. இதன் கருத்து, 'மானங் கெடாமல் பிச்சையெடுக்கிறவன், உள்ளதை இல்லையென்று மறைக்காதவரைக் கண்டால், அவ னுடைய தரித்திரம் முழுதும் உடனே நீங்கிவிடும்' என்பது. இருப்பதை இல்லையென்று ஒளிக்காத ஒருவனைக் கண்ணிற் கண்ட மாத்திரத்தில் தரித்திரமெல்லாம் நீங்கிவிடுமா? அதுவுமன்றி இந்தப் பிச்சைக்காரன் கண்ணாற் காணும் ஒருவன், இருப்பதை இல்லையென்று சொல்லாத குணமுடையவன் என்பதை எப்படி அறிய முடியும்? அப்படி அறிய முடியாமையால் தானே, 'பிச்சைக்காரன் கண்ணிற் கண்ட எல்லாரிடத்திலும் பிச்சை கேட்டு விடுகிறான்' என்று இந்தக் குறளுக்கு முன் குறளில் சொல்லப் பட்டது. அந்த முன் குறள் :

**கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்இன்று**
**இரப்பவர் மேற்கொள் வது**

என்பது. இதன் கருத்து, 'வைத்துக்கொண்டே இல்லையென்று மறைக்கும் கெட்ட குணமில்லாதவர்கள் சிலராவது உலகத்தில் இருப்பதனால் தான் பிச்சைக்காரர்கள், யார் இல்லையென்னாமல் கொடுப்பவர்கள், யார் உள்ளதை இல்லையென்று மறைப்பவர்கள் என்று அறியமுடியாமல் கண்ணிற் கண்ட எல்லாரிடத்தும் பிச்சை கேட்டுவிடுகிறார்கள்' என்பது. இந்தக் குறளிலுள்ள 'கண்ணின்று' என்ற பதம் மிகவும் கவனிக்கத் தக்கது. அதைக் 'கண்+நின்று' என்று பிரிக்கக்கூடாது. 'கண்+இன்று' என்று பிரிக்கவேண்டும். 'கண் இன்று' என்றால் 'அறிவு இல்லாமல்', அதாவது 'அறிய முடியாமல்' என்பது அர்த்தம்.

இந்தக் குறளினால் பிச்சையெடுக்கிறவன், தான் பிச்சை கேட்கிற ஒருவன் கொடுப்பவனா இல்லையென்பவனா என்பதை அறியமுடியாது என்பது நிச்சயமாகிறது. அப்படி இருக்க, 'கரப் பிடும்பை இல்லாரைக் கண்ணாற் கண்டவுடனே நிரப்பிடும்பை யெல்லாம் கெடுவது' எப்படி?

ஆதலால், இதிலுள்ள 'காணின்' என்ற பதத்துக்குக் 'கண்ணால் கண்டால்' என்பது பொருளல்ல. அதற்குத் திரு வள்ளுவர் கருதுகின்ற பொருள் என்னவென்றால், 'உண்டானால்' என்பதே. பாருங்கள்:

**கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை**
**எல்லாம் ஒருங்கு கெடும்.**

இந்தக் குறளும் முன் குறளிலுள்ள 'வையக'த்தின் நிலைமையைக் குறிப்பது. அதனால் இந்தக் குறளின் பொருள் என்னவென்றால், 'உலகத்தில் வைத்துக்கொண்டு இல்லையென்று சொல்லும் குற்றம் இல்லாதவர்களே உண்டானால், வறுமையினால் வரும் துன்பங்களே இல்லாமற் போய்விடும்' என்பது. இந்தக் குறள் மிகவும் ஆழ்ந்த கருத்துள்ளது. 'ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் இருக்கிற ஒரு பொருளை அது இல்லாத ஒருவன் கேட்டவுடனே இல்லையென்று மறைக்காமல் கொடுக்க முடியுமானால், உலக சமுதாயம் ஒரு சர்வோதய சமுதாயமாகி விடுகிறது. அப்படிப்பட்ட சமுதாயத்தில் பிச்சை கேட்கிற துன்பம் இருக்காது - என்பது இக்குறளின் நோக்கம். ஆனால் உலகம் அப்படியில்லையே என்பதை உள்ளடக்கி இந்த அதிகாரத்தில் பின்னுள்ள குறள்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. படிப்பவர் களுக்கு இங்கே ஒரு சந்தேகம் வரலாம். ''அதாவது, இந்தக் குறளில் 'கரப்பிடும்பை இல்லாரைக் காணின்' என்பதில் 'இல்லாரை' என்பதற்கு 'இல்லாதவர்கள் உண்டானால்' என்று எப்படிப் பொருள் கொள்ளமுடியும்? 'இல்லாரை' என்பதன் கடைசியிலுள்ள 'ஐ'காரம் அதற்கு இடங்கொடுக்காதே'' என்ற



சந்தேகம் எழலாம். ஆனால் அதைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டியதில்லை. இங்குள்ள 'ஐ' காரம் அர்த்தமில்லாத 'அசை நிலை'தான். திருவள்ளுவர் இப்படிப் பல இடங்களில் 'ஐ' காரத்தை வெறும் அசைநிலையாகவே பிரயோகித்திருக்கிறார். இதே அதிகாரத்தில் பின்னாலுள்ள

**இரப்பாரை யில்லாயி னீங்கண்மா ஞால**
**மரப்பாவை சென்றுவந் தற்று**

என்ற குறளில் 'இரப்பாரை' என்ற பதத்தின் ஈற்றிலுள்ள 'ஐ' காரம் வெறும் அசைநிலைதான் என்பதே போதும்.

இது போக, 'கற்றல்' என்ற பதத்திற்குக் 'கல்வி கற்பது' என்றும் 'சொல்லுவது' என்றும் இரண்டு பொருள்கள் உண்டு என்பதையும், 'சொல்லுதல்' என்ற பொருளில் திருவள்ளுவர் பிரயோகித்திருக்கிற இடங்களையும் 'வள்ளுவரின் உள்ளம்' என்ற சிறுநூலில் விரிவாக விளக்கியிருக்கிறோம்.

# ஒரே பொருளில்

இனி, ஒரு சொல்லுக்கு இரண்டு மூன்று அர்த்தங்கள் இருந்தாலும் இடத்தையும், பயனையும் கருதி அங்கங்கே பொருந்துகிற அர்த்தத்தை மட்டும் வைத்துக் கொண்டு மற்ற வைகளை மறந்துவிடவேண்டும்.

இதற்கு ஓர் உதாரணம் 'வினை' என்னும் பதம். இதற்குக் 'கருமம்' (அதாவது செயல்), 'தீமை' 'போர்', என்ற பொருள்கள் உண்டு. ஆனால் 'வினை' என்ற சொல்லைத் திருவள்ளுவர் 'கருமம்' என்ற ஒரே பொருளில்தான் பிரயோகித்திருக்கிறார். 'கருமம்' என்றால் 'செய்யும் காரியம்.'

ஒவ்வொரு மனிதனும் தான் செய்ய நினைக்கும் காரியத்தைப் பற்றிப் பின்வரும் முறையில் ஆலோசிக்க வேண்டும். முதலில் அந்தக் காரியம் குற்றமில்லாத காரியமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதன் பிறகு அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் மனவுறுதி கொள்ளவேண்டும். அதன் பிறகு அதைச் செய்து முடிக்கும் உபாயங்களைச் சிந்திக்க வேண்டும். இந்த மூன்றையும் முறையே 'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல்வகை' என்ற மூன்று அதிகாரங்களால் அறிவுறுத்துகிறார். எல்லா மக்களுக்கும் எல்லாக் காரியத்துக்கும் பொதுவாகவே இந்த மூன்று அதிகாரங்களின் பெயர்களில் உள்ள 'வினை' என்ற பதத்தைச் 'செய்யும் காரியம்' என்ற பொருளிலேயே அமைத்திருக்கிறார். இந்த மூன்றனுள் 'வினைத்தூய்மை', வினைத்திட்பம்' என்ற இரண்டு அதிகாரங்களிலும் 'வினை' என்ற பதத்துக்குச் செய்யும் காரியம் என்றே பொருள் தந்த பரிமேலழகர் 'வினைசெயல்வகை' என்ற மூன்றாவது அதிகாரத்தில்மட்டும் 'வினை' என்ற சொல்லுக்குப்



'போர்' என்ற அர்த்தத்தைப் புகுத்திவிட்டதால் நல்ல குறள்களின் உரைகள் பழுதாகிவிடுவதுடன் பெரும்பாலும் மக்களுக்குப் பயனற்றவையாகிவிடுகின்றன. அதனுடன் எந்தக் காரியத்தைச் செய்யக்கூடாது என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறாரோ அந்தக் காரியத்தைச் செய்யும்படி அறிவு சொல்லுவதுபோல் உரைகள் அமைந்திருக்கின்றன. அதைச் சிறிது ஆராய்வோம்:

'வினை செயல்வகை' என்பதற்குக் 'காரியத்தைச் செய்யும் முறை' என்பது பொருள். இந்த அதிகாரத்தின் முதற் குறள்:

**சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**
**தாழ்ச்சியில் தங்குதல் தீது**

என்பது. இதன் கருத்து, 'ஆலோசனை செய்வதன் நோக்கம் ஒரு காரியம் செய்யத் தகுந்ததா அல்லவா என்று தீர்மானிப்பதற் காகத்தான். அப்படி ஆலோசித்துத் தீர்மானிக்கப்பட்டபின் அந்தக் காரியத்தைச் செய்வதில் தாமதம் கூடாது' என்பது. இந்தக் கருத்துப் பரிமேலழகர் உரையிலும் சரியாகத்தான் சொல்லப் பட்டிருக்கிறது.

இதற்கு அடுத்த குறள் :

**தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை.**

இதன் கருத்து, 'நிதானித்துச் செய்யவேண்டிய காரியத்தை நிதானமாகவே செய்யவேண்டும். ஆனால் உடனே செய்ய வேண்டியதில் நிதானம் கூடாது' என்பது. இதன் விளக்கம் என்ன வெனில், 'முதற் குறளில் செய்யத் தீர்மானித்த காரியத்தில் தாமதம் கூடாது என்பதற்காக எல்லாக் காரியங்களையும் அவசரப்பட்டுச் செய்துவிடக்கூடாது; செய்யத் தகுந்தவை என்று நிச்சயித்த காரியங்களிலும் அவசரப்பட்டுவிடாமல் பொறுத்துச் செய்ய வேண்டிய காரியங்களும் உண்டு' என்ற நிதான புத்தி புகட்டுவது. இதற்கும் பரிமேலழகர் தரும் உரை சரியாகத்தான் இருக்கிறது. இதற்கடுத்த குறள் :

**ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

இதன் கருத்து: ''நல்ல சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால், பொறுத்துச் செய்ய எண்ணியதையும் அப்போதே செய்துவிடுவது நல்லதுதான். அப்படிச் சந்தர்ப்பம் வாய்க்காவிட்டால் பொறுத் திருந்து சமயம் பார்த்துச் செய்யவேண்டும்' என்பதுதான்.

இதற்குப் பரிமேலழகர் தரும் உரையைப் பாருங்கள் : 'வினை செய்யுங்கால் இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று; அஃதியலாவிடத்து ஏனை மூன்றுபாயத்துள்ளும் அது முடிவதோருபாயம் நோக்கிச் செய்க' என்பது பதவுரை.

இதற்கு மேலும் அவர் தரும் விசேடவுரையைப் பாருங்கள்: 'இயலுமிடம்: பகையிற்றான் வலியனாய காலம். அக்காலத்துத் தண்டமே நன்றென்றார், அஞ்சுவது அதற்கேயாதலின். இயலா விடம்: ஒத்த காலமும் மெலிய காலமும். அவ்விரண்டு காலத்தும் சாம, பேத தானங்களுள் அது முடியுமுபாயத்தாற் செய்க வென்றார், அவை ஒன்றுக்கொன்று வேறுபாடுடையவேனும் உடம் படுத்தற் பயத்தாற் றம்முள் ஒக்குமாகலின். இதனால் வலியான், ஒப்பான், மெலியானென நிலை மூவகைத் தென்பதூஉம், அவற்றுள் வலியது சிறப்பும் கூறப்பட்டன.'

இந்த உரைகள் இந்த இடத்துக்கு எவ்வளவு தவறானவை என்பது படிக்கும்போதே தெரியும். 'வினை' என்ற பதத்துக்குப் 'போர்' என்ற பொருள் திடீரென்று புகுத்தப்பட்டிருக்கிறது. இங்கே போர் ஏது? 'வினை' என்ற சொல்லுக்கு இங்கே சிறிதும் பொருந்தாததும், திருவள்ளுவர் நினைக்காததுமான 'போர்' என்ற பொருளைப் புகுத்தியதால் சாம, பேத, தான தண்டம் என்ற வேண்டாத விஷயங்களையெல்லாம் விரிக்க வேண்டியதாகி விட்டது. மேலும், இந்தக் குறளுரையில் பரிமேலழகர் 'வினை' என்ற பதத்துக்குப் 'போர்' என்ற பொருளைப் புகுத்திவிட்டதால், இதற்குப் பின்னாலுள்ள ஏழு குறள்களிலும் அதே போரைப் பின்தொடர்ந்து இந்த அதிகாரத்தைப் 'போர் செய்யும்முறை'யைச் சொல்லும் அதிகாரமாக்கி, வினைசெயல் வகை என்பதைப் 'போர் செயல் வகை' சொல்லுவதாக மாற்ற வேண்டியதாகிவிட்டது. அதனால் இந்த ஏழு குறள்களும் தமக்குத் திருவள்ளுவர் கொடுத்த பொருள்களை இழந்துவிட்டன. எப்படி என்பதைப் பாருங்கள்.) இதற்கடுத்த குறள்:



**வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்.**

இதன் கருத்து, 'எண்ணிப் பார்த்தால் தொடங்கிய ஒரு காரியத்தைப் பூர்த்தி செய்யாமல் மிச்சம் விட்டு வைப்பதும், பகைமை இருந்தால் அதைத் தீர்த்துவிடாமல் பகை நீடிக்க விடுவதும் ஆகிய இந்த இரண்டும் நெருப்பை அணைக்கும்போது முற்றிலும் அணைத்துவிடாமல் ஒரு துணுக்கு நெருப்பை மிச்சம் விட்டது போலப் பின்னால் பெருகித் துன்பம் உண்டாக்கும்' என்பது. (இது எல்லா மக்களுக்கும் பொதுவான நல்லறிவு. இது போர் புரிகிறவர்களுக்குச் சொன்னதல்ல. 'பகை' என்ற பதத்தினா லேயே இதை அரசனுக்கோ சேனை வீரனுக்கோ மட்டும் சொன்ன தாகக் கொண்டு விடக்கூடாது. பகைமை எல்லா மக்களிடையும், எல்லாத் துறைகளிலும் உண்டு. பகைமையை மிச்சம் விட்டு வைக்கக் கூடாது என்றால், உடனே. பகைவரைக் கொன்று தொலைத்துவிட வேண்டும் என்பதுதான் அர்த்தமல்ல. பகைமை இருந்துகொண்டேயிருக்கவிடாமல் பகைமையின் காரணத்தை நீக்கிச் சமாதானம் உண்டாகச் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் இங்கே முக்கியமான கருத்து. ஓர் அரசன் தன் பகை வர்களைப் போரில் வென்றும் பகைமையைப் போக்கலாம்; தூதுகள் அனுப்பிப் பகைமையை நீக்கி நண்பர்களாக்கிக் கொள்ளவும் செய்யலாம். இந்தக் குறளில் பகைமை இல்லா திருக்கச் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான் முக்கிய மேயல்லாமல் போர் புரிவது அல்ல. அதனுடன் இந்தக் குறளில் 'வினை' என்ற சொல்லுக்குச் 'செய்யும் வேலை' என்பதைத் தவிர வேறு பொருள் கொள்ள முடியாது என்பதும் குறிப்பிடத் தக்கது.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரையாவது: 'செய்யத் தொடங்கிய வினையும் களையத்தொடங்கிய பகையுமென்று சொல்லப்பட்ட இரண்டனதொழிவும் ஆராயுங் கால் தீயினதொழிவு போலப் பின் வளர்ந்து கெடுக்கும்' என்பது. இது பதவுரை. இதில் 'களையத் தொடங்கிய பகை' என்றால், யார் இங்கே களையத் தொடங்கியிருக்கிறார்கள்? மேலும், இதற்கு விளக்கவுரையில், 'இதனான் வலியான் செய்யுந்திறம் கூறப் பட்டது' என்கிறார். இதனால் அவர் முன் குறளுக்குச் சொன்ன பொருளைத் தொடர்ந்து இங்கே 'வலியானானவன் உடனே போர் புரிந்து பகை மிச்சமில்லாமல் செய்துவிட வேண்டும், என்கிறார். இதிலும் 'வினை செயல் வகை', போர் செயல் வகை' தான் ஆகிறது. இதற்கடுத்த குறள் :

**பொருள்கருவி காலம் வினைஇடனொ டைந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்.**

இதன் கருத்து, 'செய்ய நினைக்கும் காரியத்தின் நோக்கம், அதற்கு வேண்டிய சாதனங்கள், செய்யத் தகுந்த பருவக் காலம், செய்ய வேண்டிய காரிய நுணுக்கம், தகுந்த இடம் ஆகிய ஐந்து விஷயங்களையும் சந்தேகத்துக்கு இடம் இல்லாதபடி ஆராய்ந்து அறிந்துகொண்ட பிறகுதான் செய்ய வேண்டும்' என்பது. இது மனித வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் பொருந்தப் பொதுவாகச் சொல்லப்பட்டது'. இது போர் செய்கிற வர்க்கும் பொருந்தும். ஆனால், இது போருக்காக மட்டும் சொல்லப்பட்டதல்ல. ஆனால் பரிமேலழகர் இதை, போர் செய்கிறவனுக்குச் சொல்லப்பட்டதாகவே விளக்குகிறார். 'பொருள்' என்பதற்கு அழியும் பொருளும் ஆகும் பொருளும் என்றும், 'கருவி' என்பதற்குச் சேனை என்றும், 'வினை' என்பதற்குத் தன்னுடைய வினையும் பகைவனுடைய வினையும் என்றும், 'காலம்' என்பதற்குத் தான் வெல்லக் கூடிய காலமும் பகைவன் வெல்லக்கூடிய காலமும் என்றும், 'இடன்' என்பதற்குத் தான் வெல்லுமிடமும் பகைவன் வெல்லுமிடமும் என்றும் விளக்கு கிறார்.



இதற்கடுத்த குறள் :

**முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்**
**படுபயனும் பார்த்துச் செயல்.**

இதன் கருத்து, 'மேலே சொன்ன ஐந்து விஷயங்களையும் ஆராய்ந்த பிறகும், மேற்கொள்ளும் காரியம் முடியுமா அல்லது எதிர்பார்க்கத் தக்க இடையூறுகளால் முடியாமற் போகுமா, முடிந் தாலும் உடனே வரக்கூடிய பலன்கள் பட்ட கஷ்டங்களுக்குத் தகுந்தனவாக இருக்குமா என்பனவற்றையும் ஆராய்ந்துகொண்டு செய்ய வேண்டும்' என்பது.

இதில் போரைப் புகுத்த இடமேயில்லை. அதனால் இதற்கு விளக்கம் சொல்லப்படவில்லை. இதற்கடுத்த குறள்

**செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளம் கொளல்.**

இதன் கருத்து, 'ஒரு காரியத்தைச் செய்யப் புகுகின்ற ஒருவன் செய்ய வேண்டிய முதற் காரியம் என்னவென்றால், அந்தக் குறிப்பிட்ட காரியத்தில் பழக்கமுள்ளவனாக அதன் அந்தரங்கங்களை அறிந்த ஒருவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டுக் கொண்டு அதன் பிறகு செய்ய வேண்டும்' என்பது. இதுவும் எல்லாருக்கும் பொதுவாகச் சொல்லப்பட்டது. இதிலும் போரைப் புகுத்தப் பதவுரையில் இடமில்லை. ஆனால் இதற்கும் பரிமேலழகர் தாம் தரும் விசேடவுரையில், 'இவை மூன்று பாட்டானும் ஒப்பான் செய்யும் திறங் கூறப்பட்டது' என்று இதற்கு முன்னாலுள்ள இரண்டு குறள்களையும் சேர்த்து இதையும் போர் புரிவோன் செய்ய வேண்டிய செயல் வகையாகச் சொல்லுகிறார். 'ஒத்தான்' என்பது இவ்வதிகாரத்தின் மூன்றாவது குறளில் போரைப் புகுத்திச் சொன்ன விசேடவுரையில் சொல்லப்பட்ட 'வலியான்', 'ஒப்பான்', 'மெலியான்' என்ற மூன்றில் 'ஒப்பான்' என்பதைக் குறிப்பது. அதனால் இதையும் போரைக் கருதிச் சொல்லப்பட்டதாகவே பரிமேலழகர் கருதுகிறார்.

இதற்கடுத்த குறள் :

**வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.**

இதன் கருத்து, 'காரியத்தின் அந்தரங்கங்களை அறிந்த ஓர் அனுபவக்காரனுடைய காரிய அறிவை நமதாக்கிக்கொண்டு அந்தக் காரியத்தைச் செய்வது, 'பழகின யானையைக் கொண்டு புது யானையைப் பிடிப்பது போன்றது' என்பது. இதுவும் பொதுவாக எல்லாருக்கும் சொல்லப்பட்டது. ஆனால் பரி மேலழகர் இந்தக் குறளையும் இதற்கடுத்த இரண்டு குறள்களையும் சேர்த்து, ''போர் செய்வதற்கு மேலே சொன்ன 'வலியான்', 'ஒப்பான்', மெலியான்' என்ற மூவருள் 'மெலியான்' செய்யும் திறம் கூறப்பட்டது'' என்கிறார். இதற்கடுத்த குறள் :

**நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே**
**ஒட்டாரை ஒட்டிக் கொளல்.**

இந்தக் குறள் மிகவும் முக்கியமான நல்லறிவைச் சொல்லுவது. இதில் திருவள்ளுவர் கருதுகின்ற மிக நல்ல பொருளுக்கு மிகவும் விரோதமான பொருள் சொல்லப்பட்டு, இது 'போர் செயல் வகை' ஆக்கப்பட்டிருக்கிறது இந்தக் குறளின் கருத்து, 'பகைவர்களை வெல்லுவதற்கு என்றே பல பேரை நண்பர்களாக்கிக் கொண்டு அவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்து அவர்களுடைய முகங் கோணாதபடி நடந்துகொண்டிருக்க வேண்டிய சங்கடத்தைவிட அந்தப் பகைவரையே நண்பராக்கிக் கொள்வது மிகவும் விரைவில் நன்மை தரக் கூடியது' என்பது. இது எவ்வளவு நல்ல அறிவு பாருங்கள். இந்தக் கருத்தையே தொடர்ந்து இதற்கடுத்த குறளில், ''பகைவன் நம்மிலும் பலவானாக இருந்தால் பணிந்து போவதே புத்திசாலித்தனமான வினைசெயல் வகை'' என்று பின்னால் சொல்லுகிறார். அப்படி யிருக்க, இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் தரும் உரை இந்தக் குறளின் சிறப்பைக் கெடுத்துவிடுகிறது.



பரிமேலழகர் தரும் உரை: 'வினை செய்வானால் தன் நட்டார்க்கு இனியவற்றைச் செய்தலினும் விரைந்து செய்யப்படும். தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்' என்பது பதவுரை. அதாவது, 'காரியம் செய்ய வேண்டியவன் தன்னுடைய நண்பர்களுக்கு இனியவற்றைச் செய்வதைவிட விரைவாகச் செய்ய வேண்டியது என்னவென்றால், தன்னுடைய பகைவனுக்கு யார் யார் விரோதிகளோ அவர்களுடைய நட்பைத் தேடிக்கொள்ள வேண்டும்' என்பது இந்த உரையின் கருத்து. இது மிகவும் தவறானது. இங்குள்ள 'ஒட்டாரை ஒட்டிக் கொளல்' என்பதற்குத் 'தன் பகைவரோடு ஒட்டாரைத் தனக்கு நட்பாக்கிக் கோடல்' என்ற பொருள் எப்படி வரும்? 'ஒட்டாரை' என்பதற்குப் 'பகைவரோடு ஒட்டாரை' என்று 'பகைவரோடு' என்ற சொல்லைக் கூட்டிக் கொள்ளக் குறளிலுள்ள பதங்கள் இடங் கொடுக்கவில்லை. மேலும், ஏற்கனவே இருக்கிற தன் நண்பர்களுக்கு இனியவற்றைச் செய்வதே குறைக்க வேண்டிய காரியமாயிருக்க, இன்னும் புது மனிதர்களை 'நட்பாக்கிக் கோடல்' தகுமா? இந்தப் புது 'நட்டாரை'த் திருப்தி செய்ய இவர்களுக்கும் இனியவற்றைச் செய்து கொண்டிருக்கவேண்டுமே! ஆதலால், இது பொருளல்ல. இங்கே போரில்லை. 'நட்டார்' எனப்பட்டவர்களோ 'ஒட்டார்' எனப்பட்டவர்களோ போர் புரியும் சேனை யுள்ளவனுக்குத்தான் உண்டென்பதில்லை; எல்லா மனிதருக்கும் நட்டாரும், ஒட்டாரும் உண்டு.

ஆகையினால், 'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினை செயல் வகை' என்ற மூன்று அதிகாரங்களிலும் 'வினை' என்ற சொல்லுக்குச் 'செய்யும் காரியம்' என்ற ஒரே அர்த்தந்தான் திருவள்ளுவர் கருதினார்' என்பது திண்ணம்.